SURYA®
POWER TO SCORE

சூர்யாவின்.....

# சதம் அடிப்போம்....

# தமிழ் 10

எளிய வகையில் தேர்ச்சி பெற....

**மிக எளிய வகையில்**
**1, 2, 3, 5, 8 மதிப்பெண் வினா விடைகள்**

(புத்தக மதிப்பீட்டு வினா விடைகள்,
அரசு பொதுத் தேர்வு & PTA வினாத்தாட்களின் விடைகளுடன்)

முனைவர் **ப.பெ. கலியமூர்த்தி,** M.A., B.Ed., Ph.D.,
(இலக்கியத் தோழன்), தமிழாசிரியர், கும்பகோணம்.

**கோ. பாக்கியநாதன்,** M.A., M.Phil, B.Ed.,
தமிழாசிரியர், பாளையங்கோட்டை.

**SURYA PUBLICATIONS**®
(A unit of **Shyamala** Group)

No. 1, Sugar Mill Colony,
Salai Kumaran illam,
Madurai Road,
**Tirunelveli - 627 001.**

Phone : 0462 - 2338899, 2338484.
Mobile : 94431-58484,
94425-58484,
89032-58484

**E-mail: suryaguides@yahoo.com**
**website : www.suryapublications.in**

**விலை: ₹ 55/-**

தனிப்பிரதி வேண்டுவோர் கீழ்க்காணும் எண்ணில் பணம் செலுத்தியபின்
தொடர்பு கொண்டால் புரொபஷனல் கொரியர் மூலம்
தங்கள் இருப்பிடத்திற்கே அனுப்பி வைக்கப்படும்.

**G.Pay No.: 98942-27449**

## Online Shopping

| | | |
|---|---|---|
| **PhonePe No.** | : | **94431-58484** |
| **G.Pay No.** | : | **94425-58484** |
| **Pay TM No.** | : | **94431-58484** |

## OUR BANK DETAILS

| | | |
|---|---|---|
| Account Name | : | **SURYA PUBLICATIONS** |
| Account Number | : | **446971431** |
| Bank Name | : | **INDIAN BANK** |
| IFSC Code | : | **IDIB000T034** |
| Branch Name | : | **TIRUNELVELI JUNCTION** |
| Account Name | : | **SURYA PUBLICATIONS** |
| Account Number | : | **510909010051752** |
| Bank Name | : | **CITY UNION BANK** |
| IFSC Code | : | **CIUB0000230** |
| Branch Name | : | **PALAYAMKOTTAI** |
| Account Name | : | **SRI GANGA PUBLICATION** |
| Account Number | : | **928507483** |
| Bank Name | : | **INDIAN BANK** |
| IFSC Code | : | **IDIB000T034** |
| Branch Name | : | **TIRUNELVELI JUNCTION** |

**Printed at: Sri Shyamala Printers, Tirunelveli.**
**Marketed by: SURYA Publications & GANGA Publications.**

# தமிழ்

## 10ஆம் வகுப்பு

வி.எண்: 1-11

1 மதிப்பெண்

### பகுதி - I (மதிப்பெண்கள்: 15)

**குறிப்புகள்:**

(i) **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 15×1=15

(ii) **கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

### இயல் - 1

1. **'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது ------.**
   அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
   ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
   இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
   ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும் **விடை: அ**

2. **'<u>காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்</u>' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது** **SEP-21, AUG-22**
   அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
   இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும் **விடை: ஈ**

3. **எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்** **MAY-22**
   அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா
   இ) எம்+தமிழ்+நா ஈ) எந்தம்+தமிழ்+நா **விடை: இ**

4. **'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே ------.** **PTA-3**
   அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய
   இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர் **விடை: ஈ**

5. **வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ------.** **PTA-4, MAY-22**
அ) குலை வகை ஆ) மணி வகை
இ) கொழுந்து வகை ஈ) இலை வகை **விடை: ஆ**

6. **எள்ளிலிருந்து எண்ணெய் எடுத்தலின் மிஞ்சுவதைக் குறிக்கும் சரியான சொல் ------.** **PTA-1,2**
அ) எள் கசடு ஆ) பிண்ணாக்கு
இ) ஆமணக்கு ஈ) எள்கட்டி **விடை: ஆ**

7. **செய்யுளிசை அளபெடையை ----- எனவும் அழைப்பர்.** **PTA-6**
அ) உயிரளபெடை ஆ) இசைநிறை அளபெடை
இ) இன்னிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை **விடை: ஆ**

8. **இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கொண்டவர்** **PTA-2**
அ) தமிழழகனார் ஆ) அப்பாத்துரையார்
இ) தேவநேயப் பாவாணர் ஈ) இரா.இளங்குமரனார்
**விடை: ஈ**

9. **உரனசைஇ - இதில் பயின்று வரும் அளபெடை ------.** **PTA-6**
அ) சொல்லிசையளபெடை ஆ) செய்யுளிசை அளபெடை
இ) இன்னிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை **விடை: அ**

10. **தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது** **PTA-1**
அ) தொழிற்பெயர்
ஆ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்
இ) முதனிலைத் தொழிற்பெயர்
ஈ) வினையாலணையும் பெயர் **விடை: ஈ**

11. **எஃஃஃகிலங்கிய, வெஃஃஃகுவார்க்கில்லை - இச்சொற்களில் பயின்று வரும் அளபெடை** **PTA-6**
அ) சொல்லிசையளபெடை ஆ) செய்யுளிசை அளபெடை
இ) இன்னிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை **விடை: ஈ**

12. **மலர்விழி பாடினாள் - இத்தொடர் ------.** **MAY-22**
அ) பொதுமொழி ஆ) தனிமொழி
இ) தொடர்மொழி ஈ) அடுக்குத்தொடர்
**விடை: இ**

**13. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க. ..........**

1. வினைமுற்று - i. கெடு
2. தொழிற்பெயர் - ii. கட்டு
3. முதனிலைத் தொழிற்பெயர் - iii. எய்தல்
4. வினையடி - iv. வந்தான்

அ) 1-iv 2-iii 3-iii 4-i ஆ) 1-iii 2-i 3-iv 4-ii
இ) 1-iv 2-iii 3-i 4-ii ஈ) 1-i 2-iii 3-ii 4-iv **விடை: இ**

**14. 'சாகும் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும் - என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்' என்று கூறியவர் ------. AUG-22**

அ) திரு.வி.க. ஆ) க. சச்சிதானந்தன்
இ) நம்பூதனார் ஈ) தனிநாயக அடிகள்

**விடை: ஆ**

**15. 'மொழி ஞாயிறு' என்றழைக்கப்படுபவர் யார்? AUG-22**

அ) தமிழழகனார் ஆ) கம்பர்
இ) தேவநேயப் பாவாணர் ஈ) வைரமுத்து **விடை: இ**

**16. 'நாம் ஏன் தமிழ் காக்க வேண்டும்' என்ற நூலை எழுதியவர்**

அ) முனைவர் சேதுமணி மணியன் ஆ) மா.நன்னன்
இ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஈ) உதயசங்கர்

**விடை: அ**

**17. 'தவறின்றித் தமிழ் எழுதுவோம்' என்ற நூலை எழுதியவர்**

அ) உதயசங்கர் ஆ) பாவாணர்
இ) பாரதிதாசன் ஈ) மா.நன்னன் **விடை: ஈ**

**18. 'பச்சை நிழல்' என்ற நூலின் ஆசிரியர்**

அ) பாரதியார் ஆ) உதயசங்கர்
இ) பாவாணர் ஈ) பெருஞ்சித்திரனார் **விடை: ஆ**

## இயல் - 2

**1. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம் உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" - பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை? SEP-20**

அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை
இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை **விடை: ஆ**

2. **செய்தி 1 : ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.**
**செய்தி 2 : காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.**
**செய்தி 3 : காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்!** **PTA-5**
அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி
இ) செய்தி 3 மட்டும் சரி ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி
**விடை: ஈ**

3. **'பாடுஇமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?** **PTA-6**
அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல்
ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல்நீர் ஒலித்தல்
ஈ) கடல்நீர் கொந்தளித்தல் **விடை: அ**

4. **'<u>பெரிய மீசை</u> சிரித்தார்' - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?** **SEP-20, AUG-22**
அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை
**விடை: இ**

5. **பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.**
i) கொண்டல் - 1. மேற்கு
ii) கோடை - 2. தெற்கு
iii) வாடை - 3. கிழக்கு
iv) தென்றல் - 4. வடக்கு
அ) 1, 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2
இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2 **விடை: ஆ**

6. **காலம் கரந்த பெயரெச்சம் என்பது ------.** **PTA-1**
அ) வினைத்தொகை ஆ) உம்மைத்தொகை
இ) பண்புத்தொகை ஈ) அன்மொழித்தொகை
**விடை: அ**

**7. பாரதியார் காற்றை 'மயலுறுத்த' அழைப்பதைக் குறிக்கும் சொற்றொடர் ------.** **PTA-4**

அ) மணம் வீசும் காற்றாய் வா

ஆ) மனத்தை மயங்கச் செய்யும் மணத்தோடு நீ வா

இ) மயிலாடும் காற்றாக வா

ஈ) மகரந்தம் சுமந்து கொண்டு நீ வா **விடை: ஆ**

**8. <u>சிவப்புச் சட்டை</u> பேசினார் - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?** **PTA-2**

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை **விடை: இ**

**9. தமிழ்த்தொண்டு என்னும் தொடர் ------.** **PTA-5**

அ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

ஆ) அன்மொழித்தொகை

இ) உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை

ஈ) வேற்றுமைத்தொகை **விடை: ஈ**

**10. எழுகதிர், முத்துப்பல் - இச்சொற்களில் மறைந்துள்ள தொகை முறையே** **PTA-2**

அ) வினைத்தொகை, பண்புத்தொகை

ஆ) உவமைத்தொகை, வினைத்தொகை

இ) உம்மைத்தொகை, வினைத்தொகை

ஈ) வினைத்தொகை, உவமைத்தொகை **விடை: ஈ**

**11. புதிருக்கான விடையை வரிசைப்படி தேர்ந்தெடுக்க.**
**தவழும்போது ஒரு பெயர்; விழும்போது ஒரு பெயர்**
**உருளும்போது ஒரு பெயர்; திரண்டோடும்போது ஒரு பெயர் - அவை யாவை?** **PTA-3**

அ) நீர், மழை, ஆறு, ஓடை ஆ) மேகம், மழை, நீர், வெள்ளம்

இ) மாரி, கார், நீர், புனல் ஈ) மழை, புனல், மேகம், நீர்

**விடை: ஆ**

**12. கொடுக்கப்பட்டுள்ள அனைத்துச் சொற்களும் அமைந்த பொருத்தமான தொடரைத் தேர்க. (மலை, மழை, மேகம், ஆறு, ஏரி, குளம்)** **PTA-1**

அ) மலைமீது மழை பெய்து ஆற்று வெள்ளம் ஊரின் வழியே பெருக்கெடுத்து ஓடியது.

ஆ) கருத்த மேகம் மலைமீது மழையாகப் பொழிய ஆறு, குளம், ஏரி அனைத்தும் நீரால் நிரம்பின.

இ) திரண்ட மேகங்கள் மலையில் மாரியாகி, ஆறு, ஏரி, குளங்களில் நிறைந்தன.

ஈ) மலைமீது மழைபொழிய ஏரி குளங்கள் நிறைந்து பின் கடலில் சென்று கலந்தது. **விடை: ஆ**

**13. காற்றுள்ள போதே தூற்றிக்கொள் – இப்பழமொழி உணர்த்தும் சரியான பொருள்** **PTA-6**

அ) காலம் வருமென்று காத்திருந்தால் செயல் கெட்டுவிடும்.

ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்.

இ) உரிய காலத்தில் காற்றைவிட வேகமாகச் செயல்பட வேண்டும்.

ஈ) உரிய காலத்தை உணர்ந்து உரிய செயலைத் தேட வேண்டும். **விடை: ஆ**

**14. கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது; வானம் இருண்டது; வாடைக் காற்று வீசியது – என்ற நயமிகு தொடருக்கு ஏற்ற தலைப்பு** **MAY-22**

அ) வனத்தின் நடனம் ஆ) மிதக்கும் வாசம்

இ) மெட்டின் வருகை ஈ) காற்றின் பாடல் **விடை: ஈ**

**15. <u>நீலச்சட்டை</u> பேசினார் – இத்தொடரில் 'நீலச்சட்டை' என்னும் சொல்லுக்கான தொகையின் வகையைத் தேர்க.** **SEP-21**

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

**விடை: இ**

**16. கட்டுரையைப் படித்து, ஆசிரியர் மாணவர்களுக்குப் பரிசு வழங்கினார் – இத்தொடரில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபுகள்:** **SEP-21**

அ) ஐ, ஆல் ஆ) ஆல், கு

இ) ஐ, கு ஈ) இன், கு **விடை: இ**

**17. 'நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்**
**நேர்ப்பட வைத்தாங்கே**
**குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு**
**கோல வெறிபடைத்தோம்' - பாரதியார்**
**- இப்பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களைத் தேர்ந்தெடுக்கவும்.** **SEP-21**

அ) வானத்து - வைத்தாங்கே
ஆ) காற்றையும் - குடித்தொரு
இ) நிலாவையும் - குலாவும்
ஈ) வைத்தாங்கே - வெறிபடைத்தோம் **விடை: இ**

**18. குயில்களின் கூவலிசை, புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும், இலைகளின் அசைவுகள், சூறைக்காற்றின் ஆலோலம்** **SEP-20**

அ) மொட்டின் வருகை ஆ) வனத்தின் நடனம்
இ) உயிர்ப்பின் ஏக்கம் ஈ) நீரின் சிலிர்ப்பு **விடை: ஆ**

**19. 'குயில்பாட்டின்' ஆசிரியர் யார்?**

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்
இ) எஸ்.இராமகிருஷ்ணன் ஈ) கண்ணதாசன் **விடை: ஆ**

**20. 'அதோ அந்தப் பறவைபோல' என்ற நூலின் ஆசிரியர்**

அ) எஸ்.இராமகிருஷ்ணன் ஆ) ச.முகமதுஅலி
இ) பாரதியார் ஈ) பாவாணர் **விடை: ஆ**

**21. 'உலகின் மிகச் சிறிய தவளை' யாருடைய படைப்பு?**

அ) பாரதியார் ஆ) ச.முகமதுஅலி
இ) எஸ்.இராமகிருஷ்ணன் ஈ) நப்பூதனார் **விடை: இ**

## இயல் - 3

**1. பின்வருவனவற்றுள் முறையான தொடர்.**

அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.
ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.
இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.

ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு. **விடை: இ**

2. **''சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி'' என்னும் அடியில் பாக்கம் என்பது ------.** **PTA-3**

அ) புத்தூர் ஆ) மூதூர்
இ) பேரூர் ஈ) சிற்றூர் **விடை: ஈ**

3. **அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ------.**

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்
இ) உவம உருபு ஈ) உரிச்சொல் **விடை: அ**

4. **காசிக்காண்டம் என்பது ------.**

அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்
ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறு பெயர்
இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்
ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல் **விடை: இ**

5. **விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை.**

அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து
இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து
**விடை: ஆ**

6. **''காலின் ஏழடிப் பின் சென்று'' – என்னும் பொருநராற்றுப்படை உணர்த்தும் செய்தி –** **PTA-6**

அ) விருந்தினரின் காலைத் தொட்டு வணங்கினர்.
ஆ) விருந்தினரை ஏழு அடி வரை சென்று வழியனுப்பினர்
இ) எழுவர் விருந்தினரின் பின் சென்று வழியனுப்பினர்.
ஈ) ஏழுநாள்கள் விருந்தளித்துப் பின் விருந்தினரை வழியனுப்புவர். **விடை: ஆ**

7. **''மருந்தே ஆயினும் விருந்தொடு உண்'' என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நூல் ------.** **PTA-1**

அ) குறுந்தொகை ஆ) கொன்றைவேந்தன்
இ) திருக்குறள் ஈ) நற்றிணை **விடை: ஆ**

**8. விடுபட்ட உணவு வகைகளை வரிசைப்படுத்துக.** **PTA-4**

**பச்சரிசியைக் கொண்டு ------ செய்து பாசிப்பருப்பினை வறுத்து ------ பிடித்து கேரட்டைத் துருவி நெய்யிட்டு ------ செய்து முடித்த அம்மா, இறுதியாக உருளைக்கிழங்கைச் சீவி ------ செய்து அனைவரையும் உணவு உண்ண அழைத்தார்.**

அ) பொங்கல், உருண்டை, சீவல், அல்வா

ஆ) சீவல், உருண்டை, அல்வா, சீவல்

இ) பொங்கல், உருண்டை, அல்வா, சீவல்

ஈ) உருண்டை, சீவல், அல்வா, பொங்கல் **விடை: இ**

**9. பழமொழிகளைப் பொருத்துக.** **PTA-5**

அ) ஆறில்லா ஊருக்கு - 1. சோற்றுக்கு ஒரு சோறு பதம்

ஆ) உப்பில்லாப் பண்டம் - 2. நூறு வயது

இ) நொறுங்கத் தின்றால் - 3. குப்பையிலே

ஈ) ஒரு பானை - 4. அழகு பாழ்

அ) அ-4 ஆ-1 இ-3 ஈ-2 ஆ) அ-4 ஆ-3 இ-2 ஈ-1

இ) அ-2 ஆ-4 இ-1 ஈ-3 ஈ) அ-3 ஆ-1 இ-4 ஈ-2

**விடை: ஆ**

**10. அன்பால் கட்டினார்; அறிஞருக்குப் பொன்னாடை ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது -** **PTA-6**

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்

இ) உவம உருபு ஈ) உரிச்சொல் **விடை: அ**

**11. திருவள்ளுவர் அறிவுடையார் எல்லாம் உடையார் என்று அறுதியிட்டுக் கூறுகிறார்?** **PTA-3, SEP-20**

**இத்தொடருக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்ட தொடரைத் தேர்க.**

அ) திருவள்ளுவர், ‘அறிவுடையார் எல்லாம் உடையார்’ என்று ‘அறுதியிட்டுக்’ கூறுகிறார்.

ஆ) திருவள்ளுவர், ‘அறிவுடையார் எல்லாம் உடையார்’ என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

இ) திருவள்ளுவர், “அறிவுடையார் எல்லாம் உடையார்” என்று, அறுதியிட்டுக் கூறுகிறார்.

ஈ) ‘திருவள்ளுவர்’, ‘அறிவுடையார் எல்லாம் உடையார்’ என்று அறுதியிட்டுக் கூறுகிறார். **விடை: ஆ**

12. ''எய்துவர் எய்தாப் பழி'' இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது? **PTA-1, AUG-22**

அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்
இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு

**விடை: அ**

13. கொடுக்கப்பட்டுள்ள பழமொழிகளுள் உணவு தொடர்பான பழமொழியைத் தேர்ந்தெடுக்கவும். **SEP-21**

அ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
ஆ) அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
இ) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
ஈ) ஆடிக்காற்றில் அம்மியும் நகரும் **விடை: ஆ**

14. 'திருக்குறள் தெளிவுரை' என்ற நூலின் ஆசிரியர்

அ) வ.உ.சிதம்பரனார் ஆ) மருத்துவர் கு.சிவராமன்
இ) பாரதியார் ஈ) திருவள்ளுவர் **விடை: அ**

15. 'சிறுவர் நாடோடிக் கதைகள்' என்ற நூலின் ஆசிரியர்

அ) வ.உ.சிதம்பரனார் ஆ) கி.இராஜநாராயணன்
இ) பாரதிதாசன் ஈ) மருத்துவர் கு.சிவராமன்

**விடை: ஆ**

16. 'ஆறாம் திணை' என்ற நூலின் ஆசிரியர் யார்?

அ) கி.இராஜநாராயணன் ஆ) வ.உ.சிதம்பரனார்
இ) மருத்துவர் கு.சிவராமன் ஈ) பாரதியார் **விடை: இ**

## இயல் - 4

1. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' – யாரிடம் யார் கூறியது? **PTA-5, SEP-20, AUG-22**

அ) குலசேகராழ்வாரிடம் இறைவன்
ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
இ) மருத்துவரிடம் நோயாளி
ஈ) நோயாளியிடம் மருத்துவர் **விடை: ஆ**

2. தலைப்புக்கும் குறிப்புகளுக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

**தலைப்பு : செயற்கை நுண்ணறிவு**

**குறிப்புகள் : கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது.திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது.** **PTA-3**

அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

ஆ) குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இ) தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

ஈ) குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது. **விடை: அ**

3. **பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?** **PTA-2**

அ) வானத்தையும் பாட்டையும்

ஆ) வானத்தையும் புகழையும்

இ) வானத்தையும் பூமியையும்

ஈ) வானத்தையும் பேரொலியையும் **விடை: ஈ**

4. **குலசேகர ஆழ்வார் 'வித்துவக் கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால் சோற்றைக் கண்டதும் வருகிறார். ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே**

அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி **PTA-4**

ஆ) இட வழுவமைதி, மரபு வழுவமைதி

இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி

ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி **விடை: இ**

5. **பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?** **PTA-1**

அ) துலா ஆ) சீலா

இ) குலா ஈ) இலா **விடை: ஈ**

6. **தென்னை மரங்கள் நிறைந்த பகுதியைக் குறிப்பிடும் வழாநிலை** **PTA-3**

அ) தென்னந்தோட்டம் ஆ) தென்னஞ்சோலை

இ) தென்னந்தோப்பு ஈ) தென்னங்காடு **விடை: இ**

7. **திணை வழுவமைதி ------.** **PTA-5**
அ) 'இந்தப் பாப்பா தூங்கமாட்டான்' என்று தன்னையே குழந்தை குறிப்பிடுவது.
ஆ) இரவெல்லாம் நாய் கத்திக்கொண்டே இருந்தது.
இ) 'வாடா செல்லம்' என்று தாய் மகளை அழைப்பது.
ஈ) 'என் அம்மை வந்தாள்' என்று பசுவைக் குறிப்பிடுவது.
**விடை: ஈ**

8. **ஆண் குழந்தையை 'வாடி! செல்லம்' என்று கொஞ்சுவது**
அ) பால் வழுவமைதி ஆ) திணை வழுவமைதி **SEP-21**
இ) மரபு வழுவமைதி ஈ) கால வழுவமைதி
**விடை: அ**

9. **'பஞ்சபூதங்களின் அறிவியல் கதைகள்' என்ற நூலின் ஆசிரியர்**
அ) ச.தமிழ்ச்செல்வன் ஆ) நீலமணி
இ) உதயசங்கர் ஈ) கி.இராஜநாராயணன்
**விடை: ஆ**

10. **'அன்றாட வாழ்வில் அறிவியல்' என்ற நூலின் ஆசிரியர்**
அ) ச.தமிழ்ச்செல்வன் ஆ) உதயசங்கர்
இ) ஸ்டீபன் ஹாக்கிங் ஈ) நீலமணி **விடை: அ**

11. **'காலம்' என்ற நூலின் ஆசிரியர் யார்?**
அ) மா.நன்னன் ஆ) பாரதியார்
இ) நீலமணி ஈ) ஸ்டீபன் ஹாக்கிங் **விடை: ஈ**

## இயல் - 5

1. **'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி ------.** **PTA-2, SEP-20**
அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
**விடை: அ**

**2. அருந்துணை என்பதைப் பிரித்தால் ------.**

அ) அருமை + துணை ஆ) அரு + துணை

இ) அருமை + இணை ஈ) அரு + இணை **விடை: அ**

**3. ''இங்கு நகரப் பேருந்து நிற்குமா?'' என்று வழிப்போக்கர் கேட்டது ------ வினா.**

**'அதோ அங்கே நிற்கும்' என்று மற்றொருவர் கூறியது ------ விடை.**

அ) ஐயவினா, வினா எதிர் வினாதல்

ஆ) அறிவினா, மறைவிடை

இ) அறியாவினா, சுட்டுவிடை

ஈ) கொளல் வினா, இனமொழி விடை **விடை: இ**

**4. ''அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி**
**மருளை அகற்றி மதிக்கும் தெருளை''**
**- என்ற இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?** **PTA-3, AIG-22**

அ) தமிழ் ஆ) அறிவியல

இ) கல்வி ஈ) இலக்கியம் **விடை: இ**

**5. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ------**
**இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ------.**

அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்

இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

**விடை: ஈ**

**6. 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்** **PTA-5**
**செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்'**
**- பாரதியாரின் இக்கூற்று உணர்த்தும் கருத்து -** **PTA-5**

அ) பலதுறை நூல்கள் தமிழில் உருவாக்கப்பட வேண்டும்.

ஆ) பலகலைகள் தமிழில் புதிதாகத் தோன்ற வேண்டும்.

இ) உலகெங்கும் காணப்படும் செல்வங்கள் தமிழகத்தில் வந்து சேர்தல் வேண்டும்.

ஈ) கலைச் செல்வங்களை உலகம் முழுவதும் பயணம் செய்து கண்டுகளிக்க வேண்டும். **விடை: அ**

**7. 'சிறந்த சிறுகதைகள் பதின்மூன்று' என்ற நூலை தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?**

அ) வல்லிக்கண்ணன் ஆ) வெ.ஸ்ரீராம்

இ) எம்.பி.அகிலா ஈ) நீலமணி **விடை: அ**

**8. ‘குட்டி இளவரசன்’ என்ற நூலைத் தமிழில் மொழிபெயர்த்தவர்**
அ) கு.இராஜநாராயணன் ஆ) வெ.ஸ்ரீராம்
இ) பாரதியார் ஈ) ம.நன்னன் **விடை: ஆ**

**9. ‘ஆசிரியரின் டைரி’ என்ற நூலின் மொழிபெயர்ப்பாளர் யார்?**
அ) வல்லிக்கண்ணன் ஆ) வண்ணதாசன்
இ) வெ.ஸ்ரீராம் ஈ) எம்.பி.அகிலா **விடை: ஈ**

## இயல் - 6

**1. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ------.** **PTA-3**
அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்
ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்
ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள் **விடை: இ**

**2. ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர். இத்தொடரின் செயப்பாட்டு வினைத்தொடர் எது?** **PTA-6**
அ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்.
ஆ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.
இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.
ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்.
**விடை: இ**

**3. மலர்கள் தரையில் நழுவும். எப்போது?** **PTA-1**
அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்
இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்
**விடை: ஆ**

**4. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?** **PTA-5**
அ) கரகாட்டம் என்றால் என்ன?
ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?
இ) கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் யாவை?
ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை? **விடை: ஈ**

**5. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?**
அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்
ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால் **PTA-4, AUG-22**

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்
ஈ) அங்கு வறுமை இல்லாததால் **விடை: ஈ**

6. **கூத்துக்கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர். - இத்தொடர்களின் சரியான கலவைத் தொடர் -** **PTA-2**

அ) கூத்துக்கலைஞர் பாடவில்லை என்றால் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.
ஆ) கூத்துக்கலைஞர் பாடத்தொடங்கியதும் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.
இ) கூத்துக்கலைஞர் பாடத்தொடங்கினார் என்பதால் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.
ஈ) கூத்துக்கலைஞர் பாடத்தொடங்கி கூட்டத்திலிருந்தவர்களை அமைதிப்படுத்தி வைத்தார்.

**விடை: ஆ**

7. **முல்லைநில மக்களின் உணவுப் பொருள்கள்** **PTA-6**

அ) வெண்நெல், வரகு ஆ) மலைநெல், திணை
இ) வரகு, சாமை ஈ) மீன், செந்நெல் **விடை: இ**

8. **கருப்பொருளுக்கேற்ற உரிப்பொருளைப் பொருத்துக.** **PTA-4**

அ) குறிஞ்சி - 1. உப்பு விளைவித்தல்
ஆ) முல்லை - 2. நெல்லரிதல்
இ) மருதம் - 3. நிரை மேய்த்தல்
ஈ) நெய்தல் - 4. தேனெடுத்தல்

அ) அ-4 ஆ-3 இ-2 ஈ-1 ஆ) அ-3 ஆ-2 இ-4 ஈ-1
இ) அ-1 ஆ-3 இ-2 ஈ-4 ஈ) அ-4 ஆ-1 இ-2 ஈ-3

**விடை: அ**

9. **சங்க இலக்கியங்கள், ஐந்திணைகளுக்குமான ஒழுக்கங்களை இரு திணைகளும் பயன்பெற எடுத்தியம்புகின்றன. இத்தொடரில் அமைந்துள்ள தொகைச் சொற்களின் பொருத்தமான விரியைக் கண்டறிக.** **PTA-5**

அ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை - நல்வினை, தீவினை
ஆ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை - உயர்திணை, அஃறிணை / அகத்திணை, புறத்திணை

இ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருதம் – அறம், பொருள், இன்பம்

ஈ) குறிஞ்சி, முல்லை, மலை, காடு, வயல் – பனை, திணை

**விடை: ஆ**

**10. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைத் தேர்க.** **SEP-20**

**தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டுகளை ஈக்வலாக வையுங்கள்.**

அ) தங்க பிஸ்கட்டுகளைச் சரியாக

ஆ) தங்கக் கட்டிகளை ஈக்வலாக

இ) தங்கக் கட்டிகளை ஈடாக

ஈ) தங்கக் கட்டிகளை முறையாக **விடை: இ**

**11. 'தேன் மழை' என்ற நூலின் ஆசிரியர்**

அ) க.கா.பெருமாள் ஆ) சுரதா

இ) எம்.பி.அகிலா ஈ) ச.தமிழ்ச்செல்வன்

**விடை: ஆ**

**12. 'திருக்குறள் நீதி இலக்கியம்' என்ற நூலை எழுதியவர்**

அ) சுரதா ஆ) வெ.ஸ்ரீராம்

இ) க.த.திருநாவுக்கரசு ஈ) வ.உ.சிதம்பரனார் **விடை: இ**

**13. 'நாட்டார் கலைகள்' என்ற நூலின் ஆசிரியர்**

அ) க.த.திருநாவுக்கரசு ஆ) ச.முகமதுஅலி

இ) நீலமணி ஈ) அ.கா.பெருமாள் **விடை: ஈ**

## இயல் - 7

**1. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.** **PTA-4**

அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு

இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

**விடை: இ**

**2. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே ------.** **PTA-1**

அ) திருப்பதியும் திருத்தணியும்

ஆ) திருத்தணியும் திருப்பதியும்

இ) திருப்பதியும் திருச்செந்தூரும்
ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும் **விடை: அ**

3. **'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' - என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்?**
அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர்
ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர்
ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர் **விடை: ஈ**

4. **இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச்சூடிப் போரிடுவதன் காரணம் ------.** **PTA-2,4, AUG-22**
அ) நாட்டைக் கைப்பற்றல்
ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல்
ஈ) கோட்டையை முற்றுகையிடல் **விடை: இ**

5. **தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ------.** **PTA-3**
அ) திருக்குறள் ஆ) புறநானூறு
இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம் **விடை: ஈ**

6. **மெய்க்கீர்த்தி என்பது:** **MAY-22**
அ) புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லால் பொறிக்கப்படுபவை
ஆ) மன்னர்களின் புகழை ஓலைச்சுவடிகளில் எழுதி வைப்பது
இ) ஒருவரது புகழைப் புலவர்கள் புகழ்ந்து பாடும் இலக்கிய வகை
ஈ) அறக்கருத்துகள் அடங்கிய நூல் **விடை: அ**

7. **திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், புதுச்சேரி, திருநெல்வேலி – இவ்வூர்ப் பெயர்களின் சரியான 'மரூஉ' வரிசையைத் தேர்க.**
அ) திருச்சி, புதுவை, நெல்லை, உதகை **SEP-21**
ஆ) திருச்சி, கோவை, புதுவை, நெல்லை
இ) நெல்லை, உதகை, திருச்சி, கோவை
ஈ) உதகை, திருச்சி, புதுவை, கோவை **விடை: ஆ**

8. **'குமரி மாவட்டம்' போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர்** **PTA-6**

அ) திரு. பிரகாசம் ஆ) மார்ஷல் ஏ. நேசமணி
இ) தனிநாயகம் அடிகள் ஈ) ந. முத்துசாமி **விடை: ஆ**

9. **'என் கதை' என்ற நூலின் ஆசிரியர்**

அ) நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார்
ஆ) இராஜம் கிருஷ்ணன்
இ) பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
ஈ) ந.முத்துசாமி **விடை: இ**

10. **'வேருக்கு நீர்' என்ற நூலின் ஆசிரியர்**

அ) ந. முத்துசாமி ஆ) இராஜம் கிருஷ்ணன்
இ) சுரதா ஈ) வெ.ஸ்ரீராம் **விடை: ஆ**

11. **'நாற்காலிக்காரர்' என்ற நூலின் ஆசிரியர்**

அ) வெ.இராமலிங்கம் ஆ) இராஜம் கிருஷ்ணன்
இ) வல்லிக்கண்ணன் ஈ) ந.முத்துசாமி **விடை: ஈ**

## இயல் - 8

1. **மேன்மை தரும் அறம் என்பது ------.** **PTA-4**

அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது.
ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது.
இ) புகழ் கருதி அறம் செய்வது.
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது. **விடை: அ**

2. **வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் – இவ்வடி குறிப்பிடுவது ------.** **PTA-5**

அ) காலம் மாறுவதை
ஆ) வீட்டைத் துடைப்பதை
இ) இடையறாது அறப்பணி செய்தலை
ஈ) வண்ணம் பூசுவதை **விடை: இ**

3. **உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் ------.** **PTA-6**

அ) உதியன்; சேரலாதன்

ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்
இ) பேகன்; கிள்ளிவளவன்
ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி **விடை: ஆ**

4. **காலக் கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் ------.** **PTA-6**
அ) இகழ்ந்தால் என் மனம் இறந்துவிடாது.
ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது.
இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என் மனம்.
ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால். **விடை: அ**

5. **சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ------.** **PTA-2, AUG-22**
அ) அகவற்பா ஆ) வெண்பா
இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா **விடை: அ**

6. **'கானடை' என்பதைப் பிரித்தால், பொருந்தாத தொடரைத் தேர்க.** **PTA-3**
அ) கான் அடை – காட்டைச் சேர்
ஆ) கான் நடை – காட்டுக்கு நடத்தல்
இ) கால் நடை – காலால் நடத்தல்
ஈ) கால் உடை – காலால் உடைத்தல் **விடை: ஈ**

7. **'ஆறப்போடுதல்' என்ற மரபுத் தொடருக்கான பொருளைத் தேர்க.** **PTA-5**
அ) தாமதப்படுத்துதல் ஆ) ஆற்றில் போடுதல்
இ) ஆறவைத்தல் ஈ) ஆற்றில் இறங்குதல்
**விடை: அ**

8. **'அறமும் அரசியலும்' என்ற நூலின் ஆசிரியர்**
அ) ந.முத்துசாமி ஆ) அபி
இ) மு.வரதராசனார் ஈ) க.த.திருநாவுக்கரசு **விடை: இ**

9. **'அபி கதைகள்' என்ற நூலின் ஆசிரியர்**
அ) எம்.பி.அகிலா ஆ) மு.அகிலன்
இ) அபி ஈ) சுரதா **விடை: இ**

10. **'எண்ணங்கள்' என்ற நூலின் ஆசிரியர்**
அ) இராஜம் கிருஷ்ணன் ஆ) எம்.எஸ்.உதயமூர்த்தி
இ) மு.வரதராசனார் ஈ) அபி **விடை: ஆ**

## இயல் - 9

1. **'இவள் தலையில் எழுதியதோ கற்காலம் தான் எப்போதும்' - இவ்வடிகளில் கற்காலம் என்பது ------.** **PTA-2**
   அ) தலைவிதி ஆ) பழையகாலம்
   இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது
   **விடை: ஈ**

2. **சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது ------.** **PTA-5**
   அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்
   ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்
   இ) அறிவியல் முன்னேற்றம்
   ஈ) வெளிநாட்டு முதலீடுகள் **விடை: ஆ**

3. **பூக்கையைக் குவித்துப் பூவே புரிவோடு காக்க என்று ------, ------ வேண்டினார்.** **PTA-3**
   அ) கருணையன், எலிசபெத்துக்காக
   ஆ) எலிசபெத், தமக்காக
   இ) கருணையன், பூக்களுக்காக
   ஈ) எலிசபெத், பூமிக்காக **விடை: அ**

4. **வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி ------.** **PTA-4, AUG-22**
   அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம்
   இ) உருவகம் ஈ) தீவகம் **விடை: இ**

5. **கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் - இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது?** **PTA-2, SEP-20**
   அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்.
   ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்.
   இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்.
   ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார். **விடை: ஆ**

6. **கருணையன் என்பவர் ------.** **PTA-1**
   அ) வீரமாமுனிவர் ஆ) யோசேப்பு
   இ) அருளப்பர் ஈ) சாந்தா சாகிப் **விடை: இ**

7. **‘யானை சவாரி’ என்ற நூலின் ஆசிரியர்**
அ) திலகவதி ஆ) பாவண்ணன்
இ) வல்லிக்கண்ணன் ஈ) வண்ணதாசன் **விடை: ஆ**

8. **‘கல்மரம்’ என்ற நூலின் ஆசிரியர்**
அ) ந.முருகேச பாண்டியன் ஆ) ந.முத்துசாமி
இ) மு.வரதராசனார் ஈ) திலகவதி **விடை: ஈ**

9. **‘அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்’ என்ற நூலின் ஆசிரியர்**
அ) பாவண்ணன் ஆ) அபி
இ) ந.முருகேசபாண்டியன் ஈ) க.த.திருநாவுக்கரசு
**விடை: இ**

**வி.எண்: 12-15**

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

1. ***“தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!***
***இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!***
***மன்னுஞ் சிலம்பே! மணிமேகலை வடிவே!***
***முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!”***

1. **இப்பாடல் இடம்பெற்ற கவிதைத் தொகுப்பின் பெயர் என்ன?**
அ) பாஞ்சாலி சபதம் ஆ) மலைக்கள்ளன்
இ) கனிச்சாறு ஈ) என் கதை **விடை: இ**

2. **இப்பாடலின் ஆசிரியர்:**
அ) பாரதியார் ஆ) பெருஞ்சித்திரனார்
இ) பாரதிதாசன் ஈ) வாணிதாசன் **விடை: ஆ**

3. **“நற்கணக்கே” என்பது:**
அ) பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்
ஆ) பதினென் மேற்கணக்கு நூல்கள்
இ) ஐம்பெருங்காப்பியங்கள்
ஈ) ஐஞ்சிறு காப்பியங்கள் **விடை: அ**

4. **‘தென்னன் மகள்’ என்பதில் ‘தென்னன்’ என்பவர் யார்?**
அ) சேரன் ஆ) சோழன்
இ) பாண்டியன் ஈ) பல்லவன் **விடை: இ**

2. ***“செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை***
***எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?***
***முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்***
***விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்”*** **SEP-21, MAY-22**

1. **எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்:**
அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா **விடை: இ**

2. **செந்தமிழ் என்பது:**
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை **விடை: அ**

3. **‘உள்ளுயிரே’ என்று கவிஞர் யாரை அழைக்கிறார்?**
அ) தம் தாயை ஆ) தமிழ்மொழியை
இ) தாய்நாட்டை ஈ) தம் குழந்தையை **விடை: ஆ**

4. **வேறார் புகழுரையும் - இத்தொடரில் ‘வேறார்’ என்பது:**
அ) தமிழர் ஆ) சான்றோர்
இ) வேற்றுமொழியினர் ஈ) புலவர் **விடை: இ**

3. ***“முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்***
***மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்***
***அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு***
***இணைகிடந்த தேதமிழ் ஈண்டு”*** **PTA-5**

1. **இப்பாடல் இடம்பெற்ற நூல்:**
அ) நற்றிணை ஆ) முல்லைப்பாட்டு
இ) குறுந்தொகை ஈ) தனிப்பாடல் திரட்டு **விடை: ஈ**

2. **பாடலில் இடம்பெற்றுள்ள பொருத்தமான அணி:**
அ) இரட்டுற மொழிதல் அணி ஆ) தீவக அணி
இ) வஞ்சப்புகழ்ச்சி அணி ஈ) நிரல்நிரை அணி **விடை: அ**

3. **தமிழுக்கு இணையாய்ப் பாடலில் பொருத்தப்படுவது:**
அ) சங்கப் பலகை ஆ) கடல்
இ) அணிகலன் ஈ) புலவர்கள் **விடை: ஆ**

4. **தொழிற்பெயர் அல்லாத சொல்:**
அ) துய்ப்பதால் ஆ) மேவலால்
இ) அணிகலன் ஈ) கண்டதால் **விடை: இ**

4. ***"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு***
***வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை***
***நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல,***
***பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன்ஏர்பு,***
***கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி***
***பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"*** **PTA-1**

1. **இப்பாடல் இடம்பெற்ற நூல்:**
அ) முல்லைப்பாட்டு ஆ) மலைபடுகடாம்
இ) நற்றிணை ஈ) குறுந்தொகை **விடை: அ**

2. **நனந்தலை உலகம் - இத்தொடரின் பொருள்:**
அ) சிறிய உலகம் ஆ) தலையான உலகம்
இ) நனைந்த உலகம் ஈ) அகன்ற உலகம் **விடை: ஈ**

3. **பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்கள்:**
அ) பெரும்பெயல், பொழிந்த
ஆ) பாடுஇமிழ், பணிக்கடல்
இ) பாடுஇமிழ், கோடுகொண்டு
ஈ) நீர்செல, நிமிர்ந்த **விடை: இ**

4. **பாடலில் இடம்பெற்றுள்ள அளபெடை**
அ) தடக்கை ஆ) வளைஇ
இ) பெரும்பெயல் ஈ) கொடுஞ்செலவு **விடை: ஆ**

5. ***"சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்***
***உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்***
***நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய***
***கொடுங்கோற் கோவல் பின்நின்று உய்த்தர***
***இன்னே வருகுவர், தாயர்" என்போன்***
***நன்னர் நன்மொழி கேட்டனம்."***

1. **இப்பாடல் இடம்பெற்ற நூல்:**
அ) காசிக்காண்டம் ஆ) மலைபடுகடாம்
இ) கனிச்சாறு ஈ) முல்லைப்பாட்டு **விடை: ஈ**

2. **இப்பாடலின் ஆசிரியர்:**
அ) நப்பூதனார் ஆ) முன்றுரையரையனார்
இ) கணிமேதாவியார் ஈ) நத்தத்தனார் **விடை: அ**

3. **'உறுதுயர்' என்பதன் இலக்கணக் குறிப்பு:**
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை
**விடை: ஆ**

4. **பாடலில் வந்துள்ள அடிஎதுகைச் சொற்கள்:**
அ) சிறுதாம்பு, உறுதுயர் ஆ) நடுங்கு-கொடுங்கோற்
இ) இன்னே, நன்னர் ஈ) மூன்றும் **விடை: ஈ**

6. ***''விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே''***

1. **இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்:**
அ) மதுரைக் காஞ்சி ஆ) குறிஞ்சிப்பாட்டு
இ) நெடுநல்வாடை ஈ) காசிக்காண்டம் **விடை: ஈ**

2. **இப்பாடலின் ஆசிரியர்:**
அ) பரஞ்சோதி முனிவர் ஆ) புகழேந்திப் புலவர்
இ) அதிவீரராம பாண்டியர் ஈ) சேக்கிழார் **விடை: இ**

3. **இப்பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்கள்:**
அ) விருந்தினனாக, வியத்தல் ஆ) திருந்துற, பொருந்து
இ) வழங்கல், வழிபடும் ஈ) இனிதுரைத்தல், இருத்தல்
**விடை: ஆ**

4. **'வியத்தல்' என்பதன் இலக்கணக் குறிப்பு:**
அ) வேற்றுமைப் பெயர் ஆ) வினையாலணையும் பெயர்
இ) பண்புப் பெயர் ஈ) தொழிற்பெயர் **விடை: ஈ**

7. ***''அன்றுஅவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி
கன்றுஎரி ஒன்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி,
அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்***

*சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி*
*நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்*
*மான விறல்வேள் வயிரியம் எனினே''* **PTA-3**

1. **'அசைஇ' - இச்சொல்லின் இலக்கணக் குறிப்பு:**
அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
இ) சொல்லிசை அளபெடை ஈ) செய்யுளிசை அளபெடை
**விடை: இ**
2. **'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' இவ்வடியில் 'பாக்கம்' என்னும் சொல்லின் பொருள்:**
அ) சிற்றூர் ஆ) பேரூர்
இ) கடற்கரை ஈ) மூதூர் **விடை: அ**
3. **இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்:**
அ) சிலப்பதிகாரம் ஆ) மலைபடுகடாம்
இ) முல்லைப்பாட்டு ஈ) காசிக்காண்டம் **விடை: ஆ**
4. **பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்கள்:**
அ) அன்று, கன்று, அலங்கு, சிலம்பு
ஆ) அன்று, அவண், அசைஇ, அல்கி
இ) சேந்த, செயல், செப்பம், சிலம்பு
ஈ) அல்கி, எய்தி, போகி, எனினே **விடை: அ**

8. ***''வாளால் அறுத்துச்சுடினும் மருத்துவன்பால்***
***மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்***
***மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ***
***ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.''***

1. **இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?**
அ) பெரிய திருமடல் ஆ) பெருமாள் திருமொழி
இ) தேவாரம் ஈ) திருவாசகம் **விடை: ஆ**
2. **இப்பாடலின் ஆசிரியர் யார்?**
அ) திருமங்கை ஆழ்வார் ஆ) ஆண்டாள்
இ) நம்மாழ்வார் ஈ) குலசேகராழ்வார் **விடை: ஈ**
3. **'மாயம்' என்ற சொல்லின் பொருள்:**
அ) மறைதல் ஆ) ஓடுதல்
இ) விளையாட்டு ஈ) மகிழ்தல் **விடை: இ**

4. **'காதல் நோயாளன்' போன்றவர்:**
அ) பெரியாழ்வார் ஆ) பூதத்தாழ்வார்
இ) பேயாழ்வார் ஈ) குலசேகர ஆழ்வார்
**விடை: ஈ**

9. ***''விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்
கடு வளர் வானத்து இசையில் தோன்றி
உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;
உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்''*** **PTA-6**

1. **'ஊழ் ஊழ்' – என்பதன் இலக்கணக்குறிப்பு:**
அ) இரட்டைக்கிளவி ஆ) பண்புத்தொகை
இ) அடுக்குத்தொடர் ஈ) வினைத்தொகை **விடை: இ**
2. **இப்பாடலின் ஆசிரியர்:**
அ) கீரந்தையார் ஆ) பூதஞ்சேந்தனார்
இ) நப்பூதனார் ஈ) குலசேகராழ்வார் **விடை: அ**
3. **இப்பாடலில் உணர்த்தப்படும் கருத்து:**
அ) தத்துவக் கருத்து ஆ) அறிவியல் கருத்து
இ) நிலையாமை ஈ) அரசியல் அறம் **விடை: ஆ**
4. **விசும்பு, இசை, ஊழி – பாடலில் இச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் முறையே:**
அ) காற்று, ஓசை, கடல் ஆ) மேகம், இடி, ஆழம்
இ) வானம், பேரொலி, யுகம் ஈ)வானம், காற்று, காலம்
**விடை: இ**

10. ***''அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.''*** **PTA-4**

1. **இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?**
அ) கலிவெண்பா ஆ) திருக்குற்றாலக் குறவஞ்சி
இ) பிள்ளைத்தமிழ் ஈ) நீதிவெண்பா **விடை: ஈ**
2. **இப்பாடலின் ஆசிரியர் யார்?**
அ) உமறுப்புலவர் ஆ) குணங்குடி மஸ்தான் சாகிபு
இ) வீரமாமுனிவர் ஈ) செய்குதம்பிப் பாவலர்
**விடை: ஈ**

**3. 'மருள்' என்னும் சொல்லின் பொருள்:**

அ) மயக்கம் ஆ) இருள்

இ) சோம்பல் ஈ) தெளிவு **விடை: அ**

**4. பாடலில் பயின்றுவரும் மோனைச் சொற்கள்:**

அ) அருளைப் பெருக்கி, திருத்தி

ஆ) மருளை, தெருளை

இ) அருந்துணையாய், இன்பம்

ஈ) அருளைப், அறிவைத் **விடை: ஈ**

11. ***"செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்***
***திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்***
***பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்***
***பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்***
***கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்***
***கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட***
***வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை***
***ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை"***

**1. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?** **PTA-2, SEP-20**

அ) கலிங்கத்துப்பரணி

ஆ) நந்திக் கலம்பகம்

இ) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

ஈ) பெத்லகேம் குறவஞ்சி **விடை: இ**

**2. இப்பாடலின் ஆசிரியர் யார்?**

அ) குமரகுருபரர் ஆ) திரிகூடராசப்பக் கவிராயர்

இ) ஒட்டக்கூத்தர் ஈ) செயங்கொண்டார்

**விடை: அ**

**3. 'பண்டி' – சொல்லின் பொருள்:**

அ) முதுகு ஆ) வயிறு

இ) நெற்றி ஈ) தலை **விடை: ஆ**

**4. 'ஆடுக' என்பதன் இலக்கணக் குறிப்பு:**

அ) தொழிற்பெயர் ஆ) வியங்கோள் வினைமுற்று

இ) வினையெச்சம் ஈ) பெயரெச்சம் **விடை: ஆ**

12. ***"தூசும் துகிரும் ஆரமும் அகிலும்***
***மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்***
***அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா***
***வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;***
***பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு***
***கூலம் குவித்த கூல வீதியும்"***

1. **இப்பாடல் அடிகள் இடம்பெற்ற நூல் எது?**
அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை
இ) கம்பராமாயணம் ஈ) சீவகசிந்தாமணி **விடை: அ**
2. **இப்பாடலை இயற்றியவர் யார்?**
அ) கம்பர் ஆ) சீத்தலைச் சாத்தனார்
இ) திருத்தக்க தேவர் ஈ) இளங்கோவடிகள் **விடை: ஈ**
3. **பாடலில் பயின்று வரும் எதுகைச் சொற்கள்:**
அ) தூசும், துகிரும் ஆ) வளம்தலை, நனந்தலை
இ) மணியும், பொன்னும் ஈ) தூசும், மாசுஅறு **விடை: ஈ**
4. **'தூசு' என்றும் சொல்லின் பொருள்:**
அ) பவளம் ஆ) நறுமணப் பொடி
இ) பட்டு ஈ) வெற்றிலை **விடை: இ**

13. ***"காற்றே வா***
***மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு, மனத்தை***
***மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன் வா***
***இலைகளின் மீதும், நீரலைகளின் மீதும் உராய்ந்து, மிகுந்த***
***ப்ராண - ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு"*** **AUG-22**

1. **'மயலுறுத்து' என்பதன் பொருள்**
அ) விளங்கச் செய் ஆ) மயங்கச் செய்
இ) அடங்கச் செய் ஈ) சீரா **விடை: ஆ**
2. **'ப்ராண ரசம்' - பொருள் தருக.**
அ) உயிர் வளி ஆ) கார்பன்-டை-ஆக்ஸைடு
இ) ஹைட்ரோ கார்பன் ஈ) கந்தக-டை-ஆக்ஸைடு
**விடை: அ**
3. **'மிகுந்த' - இலக்கணக் குறிப்பு தருக.**
அ) வினையெச்சம் ஆ) முற்றெச்சம்
இ) பெயரெச்சம் ஈ) வினைத்தொகை **விடை: இ**

**4. நீரலைகளின் - பிரித்து எழுதுக.**

அ) நீர் + அலைகளின்  ஆ) நீரின் + அலைகளின்
இ) நீரலை + களின்  ஈ) நீர + அலைகளின்

**விடை: அ**

**வி.எண்: 16-21** 2 மதிப்பெண்கள்

## பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

## பிரிவு - 1 (மதிப்பெண்கள்: 8)

**குறிப்பு:**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 4×2=8

**1. ''மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே! முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!''** **MAY-22**
**- இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.**

சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி

**2. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.**
**ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.**
**ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.**
**மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.**

**சரியான தொடர்கள்:**

- ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
- ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

**பிழையானத் தொடர்:**

- ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.

**பிழைக்கான காரணம்:**

வாழைத்தாற்றின் பகுதியே 'சீப்பு' என்பதால் இத்தொடர் பிழையானது ஆகும்.

3. **'நமக்கு உயிர் காற்று**
**காற்றுக்கு வரம் மரம் – மரங்களை**
**வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்'**
**–இது போன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.** PTA-1

- காற்றின்றி நாம் காலம் தள்ள முடியுமா?
  காற்றில் மாசு கலப்பதைத் தவிர்ப்போம்!
- உயிர்வளி பெற மரங்களை நடுவோம்!
  உயிர்கள் வாழ வழிவகை செய்வோம்!

4. **வசன கவிதை – குறிப்பு வரைக.** SEP-21

உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசன கவிதை எனப்படும். தமிழில் பாரதியார் இதனை அறிமுகம் செய்தார்.

5. **பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும் போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.**

- "தம்பி அழாதே! அம்மா விரைவில் வருவார்கள்.
- நீ சிரித்தால் அழகாக இருக்கிறது. PTA-4, AUG-22.
- அப்பா வரும்போது உனக்குப் பிடித்த இனிப்பு வாங்கி வருவார்" என்று ஆறுதல் தருவேன்.

6. **காற்றின் வேகத்தை (ஆற்றலை) பற்றிப் புறநானூறு எவ்வாறு பாடுகிறது?** PTA-2

காற்றின் ஆற்றலை, 'வளி மிகின் வலி இல்லை' (புறம் 51) என்று ஐயூர் முடவனார் சிறப்பித்துள்ளார்.

7. **நீர் தன்னைப் பற்றி பேசினால் – உங்கள் கற்பனையில் ஆறு தலைப்புகள் தருக.** PTA-6

- பல பெயர்களில் நான்...
- இலக்கியத்தில் நான்...
- முந்நீராக நான்...
- உலகமும் உயிர்களும் நிலைக்க நான்...
- என்னை மாசாக்கும் மனிதர்கள்...
- மனிதரே! என்னைச் சேமியுங்கள்!

**8. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.**

- 'வணக்கம்! வருக!' என அழைத்தல்.
- 'அமருங்கள்' என அன்பாகக் கூறுதல்.
- 'நலமாக இருக்கிறீர்களா?' என நலம் விசாரித்தல்.
- நீர் பருகக் கொடுத்து உபசரித்தல்.

**9. 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' - தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.**

'மாமிசத்தின் பொரியலையும், தினைச் சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள்' என்பதே இதன் பொருளாகும்.

**10. <u>'நச்சப் படாதவன் செல்வன்'</u> - இத்தொடரில் தடித்த சொல்லுக்குப் பொருள் தருக.**

பிறருக்கு உதவி செய்யாததால் 'ஒருவராலும் விரும்பப் படாதவர் பெற்ற செல்வம்' என்பது இதன் பொருள் ஆகும்.

**11. பாடலோடு பொருந்தாத இசையால் பயனில்லை என்னும் உவமையைக் கொண்ட திருக்குறளை எழுதுக.** **PTA-2**

பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

**12. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.** **PTA-6**

- செயற்கை நுண்ணறிவால் இயங்கும் போக்குவரத்து ஊர்திகள்.
- செயற்கை நுண்ணறிவால் விவசாயம் செய்யும் கருவிகள்.
- செயற்கை நுண்ணறிவால் வயதானவர்களுக்கு உதவி செய்யும் கருவிகள்.

**13. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.**

- மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்த நோயாளி அவரை நேசிப்பார்.
- அத்துடன் மருத்துவர் மேல் உள்ள அன்பும் நம்பிக்கையும் அந்நோயாளியை நோயிலிருந்து குணமாக்கும்.

**14. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல்வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.** **PTA-1**

நிலம், நீர், காற்று, வானம், நெருப்பு.

**15. ''கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்''**

**– இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?** **PTA-2**

- கழிந்த பெரும் கேள்வியினான் – மன்னன் பாண்டியன்.
- காதல்மிகு கேண்மையினான் – புலவர் இடைக்காடனார்.

**16. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.**

- அருளைப் பெருக்குக!
- அறிவைச் சீராக்குக!
- மயக்கம் அகற்று!
- கல்வியைப் போற்று!

**17. 'உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்' காலதூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்' கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?** **PTA-6**

- பொய்யான வாழ்வு எல்லாம் இன்றிலிருந்து இறங்கத் தொடங்கி விட்டது; அதைக் காண எழுப்பினர்.
- காற்றாடி போல எல்லா இடங்களிலும் திரிகின்ற வில்லைப் பிடித்த காலனுக்குத் தூதரானவர் 'கையில் இனிமேல் படுத்து உறங்குமாறு' கூறினர்.

**18. ''சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள்'' – இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.** **PTA-5**

- சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்ற ஒல்லித் தண்டுகளாகவும்,
- அமைதியான முறையில் இவ்வுலகை நிலைநிறுத்துபவர்களாகவும் பெண்கள் குறிப்பிடப்படுகின்றனர்.

**19. 'கரப்பிடும்பை இல்லார்' - இத்தொடரின் பொருள் கூறுக.**
தம்மிடமுள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தராத நல்லவர். **PTA-4**

**20. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளி நகையாடுவது குறித்து குறளின் கருத்து என்ன?**
இகழ்ந்து ஏளனம் செய்யாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால் இரப்பவரின் உள்ளத்தின் உள்ளே மகிழ்ச்சி பொங்கும்.

**21. குன்றேறி யானைப் போர் காண்பதைப் போன்றது எது? இப்பொருள் தரும் குறள் யாது?** **PTA-3**
- தன் கைப்பொருளைக் கொண்டு ஒருவர் ஒரு செயலைச் செய்வது, குன்றேறி யானைப் போர் காண்பதைப் போன்றதாகும்.
- குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன் றுண்டாகச் செய்வான் வினை.

**22. யாரை உறவாகக் கொண்டு உலகத்தார் போற்றுவர்?** **PTA-6**
குற்றம் இல்லாமல் தன் குடிப்பெருமையை உயரச் செய்து வாழ்பவரை உலகத்தார் உறவாகக் கொண்டு போற்றுவர்.

**23. பின்வருவனவற்றுள் 'கூரான ஆயுதம் எது?' என்று செந்நாப்போதார் கூறுகிறார் ஏன்? என்பதை எழுதுக.** **PTA-3**
**'பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம்'**
- 'உழைத்ததால் கிடைத்த ஊதியமே' கூரான ஆயுதம் என்றார் திருவள்ளுவர்.
- ஏனெனில், அது பகைவரை அறுத்து அழிக்கும் கருவியாக மாறுகின்றது.

**24. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?** **PTA-5, AUG-22**
- பாசவர் - வெற்றிலை விற்பவர்
- வாசவர் - நறுமணப் பொருட்களை விற்பவர்
- பல்நிண விலைஞர் - பல்வகை இறைச்சிகளை விலைகூறி விற்பவர்
- உமணர் - உப்பு விற்பவர்

**25. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?** **PTA-2,3**

அரசர்கள் தங்கள் வரலாறும் பெருமையும் காலம் கடந்தும் நிலைக்க விரும்பி, அழியாத வகையில் அதனைக் கல்லில் செதுக்கியமையே மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கமாகும்.

**26. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.** **PTA-4**

- நூல் வாங்குவதற்குப் போதிய பணமில்லாத வறுமை நிலையிலும் பழைய புத்தகங்களை வாங்கிப் பயன்படுத்தினார்.
- உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகங்களை வாங்கிவிட்டுப் பட்டினி கிடந்திருக்கிறார்.

**27. குறிப்பு வரைக - அவையம்.** **PTA-5**

- அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரியும் அறம்கூறும் மன்றங்கள் அவையம் எனப்பட்டன.
- ‘அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்’ என்கிறது புறநானூறு.
- ‘மதுரையில் இருந்த அவையம் துலாக்கோல் போல் நடுநிலைமிக்கது’ என்கிறது மதுரைக்காஞ்சி.

**28. காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?** **PTA-6**

- காலங்களைக் கடந்து வயது முதிர்ந்த நிலைக்கு வருவதைக் காலக்கழுதை கட்டெறும்பானதும் என்று கவிஞர் குறிப்பிடுகிறார்.
- முதிர்வயதிலும் வாளித்தண்ணீர், சாயக்குவளை, கந்தைத்துணி, கட்டைத் தூரிகை ஆகியவற்றைக் கையில் கொண்டு அறப்பணி தொடர்தல்.

**29. கொடை என்பது ஓர் அறம் என்பதனை ஔவையார் எவ்வாறு குறிப்பிடுகிறார்?** **PTA-2**

‘உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன்’ என்ற ஔவையின் கூற்று, கொடை என்பது ஓர் அறம் என்பதை தெளிவாக்குகிறது.

**30. 'கவிஞன் யானோர் காலக் கணிதம்' எனத் தொடங்கும் கவிஞர் கண்ணதாசனின் கவிதையில் உங்களைக் கவர்ந்த மூன்று தொடர்களை எழுதிக் காரணத்தைக் குறிப்பிடுக.** **PTA-4**

- 'கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்' – உள்ளத்தில் தோன்றிய உண்மையை வெளிப்படையாகக் கூறுவேன்.
- 'பொன்னிலும் விலைமிகு பொருளென் செல்வம்' – பொன்னைவிட விலை மிகுந்தது கவிஞனின் கருத்து.
- 'இவை தவறாயின் எதிர்ப்பதென் வேலை' – சமுதாயத்தில் தவறு நடந்தால் அவற்றைத் துணிவுடன் எதிர்ப்பது கவிஞனின் வேலை.

**31. 'காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்' – உவமை உணர்த்தும் கருத்து யாது?** **PTA-1**

இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்னே தூய மணி போன்ற தூவும் மழைத்துளி இல்லாமல் வாழக் காய்ந்துவிட்டதைப் போல, நானும் இப்போது என் தாயை இழந்து வாடுகிறேன்.

**32. தேம்பாவணி – குறிப்பு வரைக.** **AUG-22**

- தேம்பாவணி – தேம்பா + அணி (வாடாத மாலை) தேன் + பா + அணி (தேன் போன்ற இனிய பாடல்கள்) என்றும் பிரித்து பொருள் கொள்ளப்படும்.
- இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய யோசேப்பினைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட நூல் இது.
- இது 3 காண்டங்களையும், 36 படலங்களையும், 3615 பாடல்களையும் கொண்டது.

## விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.

1. **அ) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.** **SEP-21**

   உலகத்திலேயே மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு எது?

**ஆ) தமிழ்த்தென்றல் திரு.வி.க போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர் தமிழ்த்திரு. இரா. இளங்குமரனார்.**
தமிழ்த்தென்றல் திரு.வி.க போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர் யார்?

2. **அ) நாயக்கர், மராட்டியர் ஆட்சிக்காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச்செல்வோர்க்காகக் கட்டப்பட்டன.** PTA-2
யாருடைய ஆட்சிக்காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச்செல்வோர்க்காகக் கட்டப்பட்டன?

**ஆ) அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச்சங்கம் 'வாழை இலை விருந்து விழாவை' ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது.**
எச்சங்கம் வாழை இலை விருந்து விழாவை ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது?

3. **அ) செயற்கை நுண்ணறிவுக் கருவியான வாட்சன், சில நிமிடங்களில் நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.** PTA-4
சில நிமிடங்களில் நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்த செயற்கை நுண்ணறிவுக் கருவியின் பெயர் என்ன?

**ஆ) வேர்டுஸ்மித் என்ற எழுத்தாளி தகவல்களைக் கொண்டு சில நொடிகளில் அழகான கட்டுரையை உருவாக்கிவிடும்.**
எது தகவல்களைக் கொண்டு சில நொடிகளில் அழகான கட்டுரையை உருவாக்கிவிடும்?

4. **அ) மொழிபெயர்ப்பு, மொழியில் புதுக்கூறுகளை உருவாக்கி மொழிவளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.** PTA-6
மொழியில் புதுக்கூறுகளை உருவாக்கி மொழிவளர்ச்சிக்கு வழிவகுப்பது எது?

**ஆ) தமிழ்நூல்கள், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், வடமொழி,ரஷ்யமொழி வங்கமொழி, மராத்தி மொழி போன்ற பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.**
தமிழ்நூல்கள் எந்தெந்த மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன?

5. அ) **தப்பாட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப பல்வேறு ஆட்டக்கூறுகளைக் கொண்டுள்ளது.** **PTA-1**
எவ்வாட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப பல்வேறு ஆட்டக்கூறுகளைக் கொண்டுள்ளது?

ஆ) **ஒயிலாட்டத்தில் தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.**
ஒயிலாட்டத்தில் எந்த வகை இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன?

6. அ) **சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாக ம.பொ.சி. இலக்கிய அறிவு பெற்றார்.** **MAY-22**
சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலம் இலக்கிய அறிவு பெற்றவர் யார்?

ஆ) **1906 - ஆம் ஆண்டு வ.உ. சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.**
வ.உ. சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கிய ஆண்டு எது?

7. அ) **ம.பொ.சி. அம்மானைப் பாடல்களை அடிக்கடி பாடிப்பாடி பிள்ளைப் பருவத்திலேயே இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டார்.** **SEP-20**
ம.பொ.சி. பிள்ளைப் பருவத்திலேயே இலக்கிய அறிவை எவ்வாறு வளர்த்துக் கொண்டார்?

ஆ) **நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர்.**
நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்க எவற்றைக் கொடுத்தனர்?

8. அ) **ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.** **GMQP-19, PTA-3**
ஒரு நாட்டு மக்களின் அறிவொழுக்கம் எவற்றால் அமைந்திருக்கும்?

**ஆ) 1956 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது.** GMQP-19
எப்பொழுது கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது?

9. **அ) சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் தமிழ்த்திரு இரா. இளங்குமரனார்.** PTA-3
சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் யார்?

10. **அ) சாலைகளின் இடப்பக்கம் வண்டிகள் செல்வதே சாலை விதிகளில் முதன்மையான விதி.** PTA-5
சாலை விதிகளில் முதன்மையான விதி எது?

**ஆ) ஓட்டுநர் உரிமம், ஊர்தியின் பதிவுச் சான்றிதழ், ஊர்தியின் வழி மற்றும் காப்பீட்டுச் சான்றிதழ் போன்றவற்றை ஊர்தி ஓட்டுபவர் ஒவ்வொருவரும் கட்டாயமாகக் கையில் வைத்திருக்க வேண்டும்.**
ஊர்தி ஓட்டுபவர் ஒவ்வொருவரும் கட்டாயம் கையில் வைத்திருக்க வேண்டிய ஆவணங்கள் யாவை?

11. **அ) சதாவதானம் என்னும் கலையில் சிறந்து விளங்கியவர் செய்குதம்பிப் பாவலர்.** AUG-22
சதாவதானம் என்னும் கலையில் சிறந்து விளங்கியவர் யார்?

**ஆ) பரஞ்சோதி முனிவர் திருமறைக்காட்டில் பிறந்தார்.**
பரஞ்சோதி முனிவர் எங்கு பிறந்தார்?

## வினா எண்: 21 - மனப்பாடம்

1. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.
2. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.
3. பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.
4. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

5. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.
6. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல்.
7. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.
8. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.
9. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.
10. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.

**வி.எண்: 22-28** 2 மதிப்பெண்கள்

## பிரிவு - 2 (மதிப்பெண்கள்: 10)

**குறிப்பு: எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5×2=10

## இலக்கண வினா-விடைகள்

**1. 'வேங்கை' என்பதைத் தொடர் மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.** **PTA-2**

- வேங்கை – வேங்கை என்னும் மரத்தைக் குறிக்கும் (தனிமொழி)
- வேம் + கை – வேகின்ற கை (தொடர்மொழி)
- தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாக இருப்பதால் இது பொதுமொழி எனப்படும்.

**2. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல் வடுக்காண் வற்றாகும் கீழ் - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி அதன் இலக்கணம் தருக.** **PTA-6, AUG-22**

- உடுப்பதூஉம் உண்பதூஉம் – இன்னிசை அளபெடை
- செய்யுளில் ஓசை குறையாத இடத்தும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடையாகும்.

**3. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய கோடிஉண் டாயினும் இல் – இக்குறளில் வரும் அளபெடையை எழுதுக.** **PTA-1,5**

- கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் – இன்னிசை அளபெடை.
- செய்யுளில் ஓசை குறையாத இடத்தும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடையாகும்.

**4. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக; தொடரில் அமைக்க.** **PTA-4, AUG-22**

**தண்ணீர் குடி** – தண்ணீரைக் குடி – இரண்டாம் வேற்றுமைத் தொகை (ஐ) – கபிலன் தண்ணீரைக் குடித்தான்.

**தயிர்க்குடம்** – தயிரை உடைய குடம் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை – கயல்விழி தயிர்க் குடத்திலிருந்து தயிரை ஊற்றினாள்.

**5. மாஅல் – பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.**

**மாஅல்:**

- பொருள் – திருமால்
- இலக்கணக் குறிப்பு – செய்யுளிசை அளபெடை

**6. 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத்தொடரானது. 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத் தொடராகும்.**

சிரித்து சிரித்துப் பேசினார்.

**7. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?** **AUG-22**

| | |
|---|---|
| பாரதியார் கவிஞர் | – (பெயர்) கவிஞர் |
| நூலகம் சென்றார் | – (வினை) சென்றார் |
| அவர் யார்? | – (வினா) யார் |

**8. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய் மொழிக்குச் செல்கிறேன் – இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?** **PTA-6**

உறுதித்தன்மையால் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது.

**9. ''சீசர் எப்போதும் என் சொல்பேச்சை கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்'' என்ற இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் - இதில் உள்ள திணை வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.**

சீசர் எப்போதும் என் சொல் பேச்சைக் கேட்கும். புதியவர்களைப் பார்த்துக் குரைக்குமே தவிர கடிக்காது.

**10. இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது?**

**இதோ... இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா?**

**மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.** **PTA-3**

- மின்விளக்கின் சொடுக்கி, எந்தப்பக்கம் இருக்கிறது? – அறியா வினா.
- மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? – ஐய வினா.

**11. ''நேற்று நான் பார்த்த அர்ச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிழந்தேன்!'' என்று சேகர் என்னிடம் கூறினான். இக்கூற்றை அயற்கூற்றாக மாற்றுக.**

முன்தினம் தான் பார்த்த அர்ச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையும், சிறந்த நடிப்பையும், இனிய பாடல்களையும் நுகர்ந்து மகிழ்ந்ததாக சேகர் என்னிடம் கூறினான்.

**12. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.** **PTA-2**

**முதற்பொருள்:** நிலம் – காடு (முல்லை),
பொழுது (பெரும்பொழுது) – மழைக்காலம் (கார்காலம்)
சிறுபொழுது – மாலை

**கருப்பொருள்:** உணவு – வரகு.

**13. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.**
**உழவர்கள் மலையில் உழுதனர்.**
**முல்லைப்பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.**

உழவர்கள் வயலில் உழுதனர்.
நெய்தல் பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

**14. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப் படுத்துக.** **PTA-1, SEP-21**

| | | |
|---|---|---|
| வெட்சித்திணை | - | கரந்தைத் திணை |
| வஞ்சித் திணை | - | காஞ்சித் திணை |
| நொச்சித் திணை | - | உழிஞைத் திணை |

**15. பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறியிடுக.** **PTA-2, SEP-21**
பழங்காலத்தில் பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட்டு வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன்.

**விடை:**
பழங்காலத்தில் பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட்டு வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன்.

**16. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
- பா நான்கு வகைப்படும்.
- அவை: வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா.

**17. வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவிற்கு உரியது. இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.**

வஞ்சிப்பா தூங்கல் ஓசையையும், கலிப்பா துள்ளல் ஓசையையும் பெற்று வரும்.

**18. வெண்பா, ஆசிரியப்பாவின் ஓசைகளை எழுதுக.** **MAY-22**

- வெண்பா – செப்பலோசை.
- ஆசிரியப்பா – அகவலோசை.

**19. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.**

**குறள் வெண்பாவின் இலக்கணம்:**

- குறள் வெண்பா என்பது வெண்பாவின் பொது இலக்கணம் அமையப் பெற்று இரண்டு அடிகளாய் வரும்.
- முதலடி நான்கு சீராகவும், இரண்டாம் அடி மூன்று சீராகவும் வரும்.

**எ.கா:**

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

**20. தீவக அணியின் வகைகள் யாவை?**

- முதல் நிலைத் தீவகம்
- இடைநிலைத் தீவகம்
- கடைநிலைத் தீவகம் என மூன்று வகைப்படும்.

**21. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது – இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?** **PTA-3**

இக்குறளில் பயின்று வந்துள்ள அணி நிரல்நிறை அணி.

**அணி இலக்கணம்:**

சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி, அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல்நிறை அணி எனப்படும்.

**அன்பு அறன்**
**பண்பு பயன்**

**22. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு - இத்தொடரை இரு தொடர்களாக்குக.**

நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதல் உண்டு; நான் எழுதுவதற்கு காரணமும் உண்டு.

## பகுபத உறுப்பிலக்கணம்

1. **வாழ்க - வாழ் + க** **MAY-22**
   வாழ் - பகுதி, க - வியங்கோள் வினைமுற்று விகுதி.

2. **மயங்கிய - மயங்கு + இ(ன்) + ய் + அ** **SEP-21**
   மயங்கு - பகுதி, இ(ன்) - இறந்தகால இடைநிலை 'ன்' புணர்ந்து கெட்டது, ய் - உடம்படுமெய், அ - பெயரெச்ச விகுதி.

3. **மலைந்து - மலை + த்(ந்) + த் + உ** **SEP-20**
   மலை - பகுதி, த் - சந்தி, ந் - ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி.

4. **தணிந்தது - தணி + த்(ந்) + த் + அ + து** **PTA-1**
   தணி - பகுதி, த் - சந்தி; ந் - ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, அ - சாரியை, து - படர்க்கை வினைமுற்று விகுதி.

5. **வருக - வா(வரு) + க** **PTA-2**
   வா - பகுதி; 'வரு' எனத் திரிந்தது விகாரம், க - வியங்கோள் வினைமுற்று விகுதி.

6. **பொறித்த - பொறி + த் + த் + அ** **PTA-3**
   பொறி - பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி.

7. **உரைத்த - உரை + த் + த் + அ** **PTA-4**
   உரை - பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி.

8. **அறியேன் - அறி + ய் + ஆ + ஏன்** **PTA-5**
   அறி - பகுதி, ய் - சந்தி, ஆ - எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது, ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

9. **ஒலித்து - ஒலி + த் + த் + உ** **PTA-6, AUG-22**
ஒலி - பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி.

10. **பொழிந்த - பொழி + த்(ந்) + த் + அ**
பொழி - பகுதி, த் - சந்தி; ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி.

11. **கிளர்ந்த - கிளர் + த்(ந்) + த் + அ**
கிளர் - பகுதி, த் - சந்தி; ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, அ- பெயரெச்ச விகுதி.

12. **பதிந்து - பதி + த்(ந்) + த் + உ**
பதி - பகுதி, த் - சந்தி; ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி.

13. **அமர்ந்தான் - அமர் + த்(ந்) + த் + ஆன்**
அமர் - பகுதி, த் - சந்தி; ந் ஆனது விகாரம், த் - இறந்தகால இடைநிலை, ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

## கலைச்சொல் அறிவோம்

**இயல் 1:**

| | | |
|---|---|---|
| Vowel | - உயிரெழுத்து | **PTA-1, AUG-22** |
| Consonant | - மெய்யெழுத்து | |
| Homograph | - ஒப்பெழுத்து | **PTA-1** |
| Monolingual | - ஒரு மொழி | |
| Conversation | - உரையாடல் | |
| Discussion | - கலந்துரையாடல் | **AUG-22** |

**இயல் 2:**

| | | |
|---|---|---|
| Storm | - புயல் | |
| Tornado | - சூறாவளி | **PTA-6** |
| Tempest | - பெருங்காற்று | **PTA-6** |
| Land Breeze | - நிலக்காற்று | |
| Sea Breeze | - கடற்காற்று | |
| Whirlwind | - சுழல்காற்று | |

**இயல் 3:**

| | | |
|---|---|---|
| Classical literature | - செவ்விலக்கியம் | |
| Epic literature | - காப்பிய இலக்கியம் | PTA-5 |
| Devotional literature | - பக்தி இலக்கியம் | |
| Ancient literature | - பண்டைய இலக்கியம் | |
| Regional literature | - வட்டார இலக்கியம் | |
| Folk literature | - நாட்டுப்புற இலக்கியம் | PTA-5, SEP-21 |
| Modern literature | - நவீன இலக்கியம் | |

**இயல் 4:**

| | | |
|---|---|---|
| Nanotechnology | - மீநுண் தொழில்நுட்பம் | |
| Biotechnology | - உயிர்த்தொழில்நுட்பம் | |
| Ultraviolet Rays | - புற ஊதாக் கதிர்கள் | PTA-2 |
| Cosmic Rays | - விண்வெளிக் கதிர்கள் | PTA-2 |
| Infra red | - அகச்சிவப்பு கதிர்கள் | |

**இயல் 5:**

| | | |
|---|---|---|
| Emblem | - சின்னம் | |
| Thesis | - ஆய்வேடு | |
| Intellectual | - அறிவாளர் | |
| Symbolism | - குறியீட்டியல் | |

**இயல் 6:**

| | | |
|---|---|---|
| Aesthetics | - அழகியல், முருகியல் | PTA-4 |
| Artifacts | - கலைப் படைப்புகள் | SEP-20 |
| Terminology | - கலைச்சொல் | |
| Myth | - தொன்மம் | PTA-4, SEP-20 |

**இயல் 7:**

| | | |
|---|---|---|
| Consulate | - துணைத்தூதரகம் | SEP-21 |
| Patent | - காப்புரிமை | |
| Document | - ஆவணம் | |
| Guild | - வணிகக்குழு | |
| Irrigation | - பாசனம் | |
| Territory | - நிலப்பகுதி | |

**இயல் 8:**

| | | |
|---|---|---|
| Belief | - நம்பிக்கை | PTA-3, MAY-22 |
| Renaissance | - மறுமலர்ச்சி | PTA-3 |
| Philosopher | - மெய்யியலாளர் | MAY-22 |
| Revivalism | - மீட்டுருவாக்கம் | |

**இயல் 9:**

| | |
|---|---|
| Humanism | - மனித நேயம் |
| Cabinet | - அமைச்சரவை |
| Cultural Boundaries | - பண்பாட்டு எல்லை |
| Cultural values | - பண்பாட்டு விழுமியங்கள் |

## மொழியோடு விளையாடு, மொழியை ஆள்வோம் வினா-விடைகள்

### இயல் - 1

1. **சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.**

“தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை **PTA-5, MAY-22**
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே’’.

**திருத்தம்:**

“தே**னி**லே ஊ**றி**ய செந்தமிழின் - சுவை
தே**று**ம் சிலப்பதி கா**ர**மதை
ஊனிலே எம்முயிர் உ**ள்ளள**வும் - நிதம்
ஓதி யு**ணர்**ந்தின் பு**று**வோமே’’.

2. **கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களை எழுதுக.** **PTA-4**
**கல், ஆடு, கீரை, மக்கள், புல், பழம்.**

| | | | |
|---|---|---|---|
| கல் | - கற்குவியல்; | மக்கள் | - கூட்டம்; |
| ஆடு | - ஆட்டு மந்தை; | புல் | - கட்டு; |
| கீரை | - கீரைக்கட்டு; | பழம் | - குலை. |

**3. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

1. **கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.**
   கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள்.
2. **ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.**
   ஊட்டமிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
3. **நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.**
   நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர்.
4. **பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.**
   பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தவர் போட்டித் தேர்வில் வென்றார்.

**4. தொடர்களில் உள்ள அடிக்கோடிட்ட சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தி தொடர்களை மீள எழுதுக.**

1. **<u>உலகில்</u> வாழும் <u>மக்களில்</u> சிலர் <u>கனி</u>யிருக்கக் காய் <u>புசித்</u>தலைப்போல, இன்சொல் இருக்க வன்சொல் பேசி <u>இன்னற்</u>படுகின்றனர்.**
   **புவியில்** வாழும் **மானிடர்களில்** சிலர் **பழ**மிருக்கக் காய் **உண்**பதைப்போல இன்சொல் இருக்க வன்சொல் பேசி **துன்பப்**படுகின்றனர்.

2. **வள்ளல் குமணன் <u>வறுமையால்</u> வாடிவந்த <u>புலவனுக்குத்</u> தனது தலையைக் <u>கொடுத்து</u> மங்காப் <u>புகழ்</u> பெற்றான்.**
   வள்ளல் குமணன் **ஏழ்மையால்** வாடிவந்த **பாவலனுக்குத்** தனது தலையை ஈந்து மங்காப் **பெருமை** பெற்றான்.

3. **நளனும் அவனது <u>துணைவியும்</u> நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழை<u>முகில்</u> கண்ட <u>மஞ்ஞை</u> போலக் <u>களி</u> கொண்டனர்.**

நளனும் அவனது **மனைவியும்** நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் **மழைமேகம்** கண்ட **மயிலைப்** போல **மகிழ்ச்சி** கொண்டனர்.

4. **சோலையிற் பூத்த மணமலர்களில் சுரும்புகள் மொய்த்துப் பண்பாடி மதுவுண்டன.**
   **காவில்** பூத்த மணமலர்களில் **வண்டுகள்** மொய்த்துப் பண்பாடி **தேனை** உண்டன.

5. **பசுப்போல் சாந்தமும் புலிபோல் தீரமும் யானை போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.**
   **ஆப்**போல் **அமைதியும் வேங்கை** போல் **வீரமும் களிறு** போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

5. **சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக. (தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ)** **PTA-1, SEP-21**

பொன்விலங்கு, விண்மணி, மணிமேகலை, செய்தேன், தேன்மழை, வான்மழை, செய்வான், பூவிலங்கு, பூமழை, தேன்பூ, பொன்மணி, விளக்குவான்.

6. **குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத்தொடர்கள் அமைக்க. (குறளின்பம், சுவைக்காத இளநீர், காப்பியச் சுவை, மனிதகுல மேன்மை விடுமுறை நாள்)**

- குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டா?
- மனிதன் சுவைக்காத இளநீர் உண்டா?
- மனிதகுல மேன்மையைப் பாடாத கவிஞன் உண்டா?
- விடுமுறைநாளை விரும்பாத மாணவர் உண்டா?
- கம்பராமாயணத்தில் இல்லாத காப்பியச் சுவையா?

7. **எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்ணில் எழுதுக.**

நாற்றிசையும் செல்லாத நாடில்லை **PTA -22**
எறும்புந்தன் கையால் எண்சாண்
ஐந்து சால்பு ஊன்றிய தூண்
நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி
ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பது பரணி

| எண்ணுப்பெயர் | தமிழ் எண் |
|---|---|
| நான்கு | ச |
| எட்டு | அ |
| ஐந்து | ரு |
| நான்கு, இரண்டு | ச, உ |
| ஆயிரம் | க000 |

**இயல்: 2**

8. **சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.**
**(இன்சொல், எழுகதிர், கீரிபாம்பு, பூங்குழல் வந்தாள், மலைவாழ்பவர், முத்துப்பல்)**

**இன்சொல்** – பண்புத்தொகை
இனிமையான சொல் கூறுதல் சான்றோர்க்கு அழகு **MAY-22**

**எழுகதிர்** – வினைத்தொகை
மனித வாழ்க்கை எழுகதிர் போன்றது. **PTA-2, MAY-22**

**கீரிபாம்பு** – உம்மைத்தொகை
கலாவும் மாலாவும் கீரியும் பாம்பும் போல எப்பொழுதும் பகைமையோடு வாழ்கின்றனர்.

**பூங்குழல் வந்தாள்** – அன்மொழித்தொகை
பூபோன்ற கூந்தலையுடைய (குழல்) பெண் வந்தாள்.

**மலைவாழ்வார்** – ஏழாம் வேற்றுமைத் தொகை
குறிஞ்சி நில மக்கள் மலையின் கண் வாழ்வர்.

**முத்துப்பல்** – உவமைத் தொகை
மயிலின் நடனத்தைக் கண்டு எழிலி முத்துப்பல் தெரிய சிரித்தாள்.

9. **சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.**

   1. முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும்;
      நீக்காவிட்டாலும் வாசனை தரும். **PTA-2**
      **நறுமணம்.**

   2. பழமைக்கு எதிரானது – எழுதுகோலில் பயன்படும்.
      **புது மை.** **AUG-22**

3. இருக்கும்போது உருவமில்லை - இல்லாமல் உயிரினம் இல்லை.
**காற்று.**
4. நாலெழுத்தில் கண் சிமிட்டும் - கடையிரண்டில் நீந்திச் செல்லும்.
**விண்மீன்.**
5. ஓரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வனம்.
**காடு.** **PTA-2, AUG-22**

**10. நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகளை எடுத்தெழுதுக.**
**(வனத்தின் நடனம், மிதக்கும் வாசம், காற்றின் பாடல், மொட்டின் வருகை, உயிர்ப்பின் ஏக்கம், நீரின் சிலிர்ப்பு.)**

1. கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது. வானம் இருண்டது. வாடைக் காற்று வீசியது.
**காற்றின் பாடல்.**
2. புவி சிலிர்த்து, மண்ணிலிருந்து சின்னஞ்சிறு மொட்டு முகிழ்த்தது; அச்செடியை வரவேற்கும் விதமாகப் பக்கத்துச் செடிகள் தலையாட்டி மகிழ்கின்றன.
**மொட்டின் வருகை.**
3. சோலைக்குள் சத்தமில்லாமல் வீசியது தென்றல்; பூக்கள் அதன் வருகையை உணர்ந்து நறுமணத்துடன் வரவேற்கின்றன. பூவாசம் கலந்த தென்றலில் வண்டுகள் மிதந்து சென்று மலர்களில் அமர்கின்றன.
**மிதக்கும் வாசம்.**
4. இரவின் இருளமைதியில் இரைச்சலாய்ச் சில சுவர்க்கோழிகள். வறண்ட வானத்தின் இருண்ட புழுக்கம்; மழைக்கு ஏங்கும் புவி வெப்பப் பெருமூச்சு விடும்; கசகசத்த உயிரினங்கள்.
**உயிர்ப்பின் ஏக்கம்.**
5. நின்றுவிட்ட மழை தரும் குளிர்; சொட்டுச் சொட்டாக விளிம்புகளிலிருந்தும் மரங்களிலிருந்தும் விழும் மழைநீர்பட்டுச் சிலிர்க்கும் உயிரினம்.
**நீரின் சிலிர்ப்பு.**

6. குயில்களின் கூவலிசை. புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும். இலைகளின் அசைவுகள், சூறைக்காற்றின் ஆலோலம்.
**வனத்தின் நடனம்.**

**இயல் - 3**

**11. பழமொழிகளை நிறைவு செய்க.** PTA-3

1. உப்பில்லா **பண்டம் குப்பையிலே** AUG-22
2. ஒருபானை **சோற்றுக்கு ஒரு சோறு பதம்** AUG-22
3. உப்பிட்டவரை **உள்ளளவும் நினை**
4. விருந்தும் **மருந்தும் மூன்று நாட்களே**
5. அளவுக்கு **மிஞ்சினால் அமுதமும் நஞ்சு**

**12. விடுபட்ட எழுத்துகளை நிரப்பி அந்த எழுத்துகளை மட்டும் இணைத்து ஒளிந்துள்ள ஒரு நூலின் பெயரைக் கண்டுபிடி.**

இ**று**கு (பறவையிடம் இருப்பது)
அ**க்**கா (தங்கைக்கு மூத்தவள்)
கு**ரு**தி (சிவப்பு நிறத்தில் இருக்கும்)
ம**தி** (அறிவின் மறு பெயர்)
வா**ள்** (மன்னரிடம் இருப்பது)
பட**கு** (நீரில் செல்வது படகு) **விடை: திருக்குறள்**

**13. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**
**சிலை - சீலை, தொடு - தோடு, மடு - மாடு, மலை - மாலை, வளி - வாளி, விடு - வீடு, கொடு - கோடு**

1. **சிலை - சீலை:** PTA-5
சிலையைத் திரைச்சீலையால் மறைத்திருந்தார்கள்
2. **தொடு - தோடு:** PTA-1
காதிலுள்ள தோடு தொட்டதும் அழகாக ஆடியது.
3. **மடு - மாடு**
மடுவில் (குட்டையில்) மாடு நீர் குடித்தது.
4. **மலை - மாலை** PTA-1
மலை மீது மாலையில் விளையாடினேன்.

5. **வளி - வாளி**
வளியும் (காற்று) வாளியும் (அன்பும்) இல்லாமல் வாழ முடியாது.

6. **விடு - வீடு:** **PTA-5**
அகந்தையை விடு; வீடுபேறு அடையலாம்.

7. **கொடு - கோடு:** **MAY-22**
பிறருக்குக் கொடுப்பதற்கு எல்லைக் கோடு வரையக் கூடாது.

## இயல் - 4

**14. வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக.**

**காகத்திற்கு காது உண்டா? அதற்கு காது கேட்குமா?**

எல்லா பறவைகளுக்கும் காது உண்டு. செவி துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றபடி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறசெவிமடல் இருக்காது. காகத்திற்கு காது உண்டு. காதுக் கேட்கும்.

பறவைகளுக்கு பார்த்தல், கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சிப் பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்வுக் குறைவாகவும் நுகர்தல் உணர்வு இல்லையென்றேக் கூறலாம். யுரேகா! யுரேகா! - அறிவியல் வெளியீடு.

**விடை:**

**காகத்திற்குக் காது உண்டா? அதற்குக் காது கேட்குமா?**

எல்லாப் பறவைகளுக்கும் காது உண்டு. செவித்துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றபடி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறச்செவிமடல் இருக்காது. காகத்திற்குக் காது உண்டு, காதுக் கேட்கும்.

பறவைகளுக்குப் பார்த்தல், கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சி பெற்று இருக்கும். சுவைத்தல் **உணர்வு** குறைவாகவும் நுகர்தல் உணர்வு **இல்லையென்றே** கூறலாம்.

**15. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.**

**அ) இயற்கை – செயற்கை ஆ) கொடு – கோடு இ) கொள் – கோள் ஈ) சிறு – சீறு உ) தான் – தாம் ஊ) விதி – வீதி**

**அ) இயற்கை – செயற்கை:**

இயற்கைக் காடுகளில் பயணிக்க செயற்கைக் கருவி பயன்படுகிறது.

**ஆ) கொடு – கோடு:** **MAY-22**

நான் கொடுத்த அளவுகோலைக் கொண்டு கோடு வரைந்தான்.

**இ) கொள் – கோள்:**

கோள்களின் இயக்கம் பற்றி அறிந்து கொள்.

**ஈ) சிறு – சீறு:**

சிறு பொந்துக்குள் இருந்து பாம்பு சீறுவதைக் கண்டோம்.

**உ) தான் – தாம்:**

தான் குற்றவாளி என்பதைத் தாமே ஒப்புக் கொண்ட செயல் பெரிது.

**ஊ) விதி – வீதி:**

இரவியின் தலைவிதி அவனை வீதியில் நிறுத்தியது.

**16. தொடரைப் படித்து விடையைக் கண்டறிக.**

**சோறு, கற்றல், கரு, பூவில், எழுத்து**

1. நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் **கற்றல்.**
2. விதைக்குத் தேவை எரு எனில், கதைக்குத் தேவை **கரு.**
3. கல் சிலை ஆகுமெனில், நெல் **சோறு** ஆகும்.
4. குரலில் இருந்து பேச்சு எனில், விரலில் இருந்து **எழுத்து**.
5. மீன் இருப்பது நீரில்; தேன் இருப்பது **பூவில்**.

**17. எதிர்மறையான சொற்கள் தருக.**

**மீளாத் துயர், கொடுத்துச் சிவந்த, மறைத்துக் காட்டு, அருகில் அமர்க, பார்த்த இடம், எழுதாக் கவிதை.**

**PTA-1,2**

| | | |
|---|---|---|
| மீளாத் துயர் | - | மீளும் துயர் |
| கொடுத்துச் சிவந்த | - | கொடுக்காது சிவந்த |
| மறைத்துக் காட்டு | - | மறைக்காது காட்டு |

| | | | |
|---|---|---|---|
| அருகில் அமர்க | - | தொலைவில் அமர்க | PTA-1 |
| பார்த்த இடம் | - | பார்க்காத இடம் | PTA-2 |
| எழுதாக் கவிதை | - | எழுதிய கவிதை | |

## இயல் - 5

**18. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.**

**கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.**
அழகிய குளிர்ந்த கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

**மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.** PTA-6
பயன்தரும் மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

**வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.** PTA-6
இன்பமும் துன்பமும் நிறைந்த வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

**கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.**
நன்னெறிக் கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

**குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.**
படைப்புத்திறன் மிக்க குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.

**19. தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க.**

1. நிலத்துக்கு அடியில் கிடைக்கும் **புதையல்** யாவும் அரசுக்கே சொந்தம். நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில் **புதைத்தல்** நிலத்தடி நீர்வளத்தைக் குன்றச் செய்யும். (புதையல், புதைத்தல்)
2. காட்டுவிலங்குகளைச்**சுடுதல்**தடைசெய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் **சுட்டல்** திருந்த உதவுகிறது. (சுட்டல், சுடுதல்) PTA-2
3. காற்றின் மெல்லிய **தொடுதல்** பூக்களைத் தலையாட்ட வைக்கிறது. கைகளின் நேர்த்தியான **தொடுத்தல்** பூக்களை மாலையாக்குகிறது. (தொடுத்தல், தொடுதல்)

4. பசுமையான **காட்சி**யைக் **காணுதல்** கண்ணுக்கு நல்லது (காணுதல், காட்சி) **PTA-2**

5. பொதுவாழ்வில் **நடித்தல்** கூடாது. **நடிப்பி**ல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடித்தல், நடிப்பு)

## இயல் - 6

**20. தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்று.**

1. **அழைப்பு மணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தாள்.** *(தனிச்சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடராக மாற்றுக)*
   அழைப்பு மணி ஒலித்ததால், கயல்விழி கதவைத் திறந்தாள்.

2. **இன்னாசியர் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கி வைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்** *(தொடர் சொற்றொடராக மாற்றுக.)*
   இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தி, புத்தக அடுக்கங்களில் அடுக்கி, புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.

3. **ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டிக்கொண்டு, காலில் சலங்கை அணிந்து கொண்டு, கையில் ஒரு சிறு துணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர்.**
   *(தனிச் சொற்றொடராக மாற்றுக)*
   ஒயிலாட்டக் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டிக் கொள்வர். கையில் ஒரு சிறு துணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர்.

4. **கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.** *(கலவைச் சொற்றொடராக மாற்றுக)*. **PTA-2**
   கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கியதால் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

5. **ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது.**
*(தனிச் சொற்றொடர்களாக மாற்றுக)*
ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றது. அதனால் அறையில் உள்ளவர்களின் பேச்சு தடைப் பட்டது.

21. **பத்தியிலுள்ள பிறமொழிச் சொற்களைத் தமிழ்சொற்களாக்குக.**
**உங்களிடம் செவன் கோல்டு பிஸ்கட் உள்ளது. தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டை வைத்தால் தராசு ஈக்வலாக இருக்கும். பேலன்ஸாக ஒரு கோல்ட் பிஸ்கட் உங்கள் கையில் இருக்கும்.** **PTA-6**

| | | |
|---|---|---|
| கோல்டு பிஸ்கட் | - | தங்கக் கட்டி |
| ஈக்வலாக | - | சமமாக |
| வெயிட் | - | எடை |
| எக்ஸ்பெரிமெண்ட் | - | பரிசோதனை |
| பட் | - | ஆனால் |
| ரிப்பீட் | - | மறுபடி |
| ஆன்சரை | - | விடையை |
| ஆல் தி பெஸ்ட் | - | எல்லாம் நன்மைக்கே |

22. **தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.**

1. வானம் **கருக்கத்** தொடங்கியதும் மழைவரும் போலிருக்கிறது. **PTA-3**
2. அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் **சிவந்தது**. **PTA-3**
3. **வெள்ளை** மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.
4. கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் **பச்சை** புல்வெளிகளில் கதிரவனின் **மஞ்சள்** வெயில் பரவிக் கிடக்கிறது.
5. வெயிலில் அலையாதே; உடல் **கருத்து** விடும்.

**23. பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.**

| |
|---|
| தங்கும், மரம், வீடு, அவிழும், தயங்கும், மரவீடு, தோற்பாவை, விருது, தோற்பவை, கவிழும், விருந்து. |

1. விரட்டாதீர்கள் - பறவைக்கு மரம் வீடு
   வெட்டாதீர்கள் - மனிதருக்கு அவைதரும் **மரவீடு.**
2. காலை ஒளியினில் மலரிதழ் **அவிழும்** PTA-4
   சோலைப் பூவினில் வண்டினம் **கவிழும்**
3. மலை முகட்டில் மேகம் **தங்கும்** அதைப் PTA-4
   பார்க்கும் மனங்கள் செல்லத் **தயங்கும்**
4. வாழ்க்கையில் **தோற்பவை** மீண்டும் வெல்லும் -இதைத்
   தத்துவமாய்த் **தோற்பாவை** கூத்து சொல்லும்.
5. தெருக்கூத்தில் நடிகருக்குக் கைதட்டலே **விருது** அதில்
   வரும் காசு குறைந்தாலும் அதுவேயவர் **விருந்து**

## இயல் - 7

**24. பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.**

**வரப்போகிறேன், இல்லாமல் இருக்கிறது, கொஞ்சம் அதிகம், முன்னுக்குப் பின், மறக்க நினைக்கிறேன்.**

அ) இன்னும் சிறிது நேரத்தில் **வரப்போகிறேன்** என்றான்.

ஆ) தெரு குப்பை **இல்லாமல் இருக்கிறது**.

இ) தமிழ்ப் புலவர்களுக்குக் கர்வம் **கொஞ்சம் அதிகமாகவே** இருந்தது.

ஈ) **முன்னுக்குப் பின்** முரணாகப் பேசாதிருத்தல் நலம்.

உ) வாழ்வின் கசப்பான நிகழ்வுகளை **மறக்க நினைக்கிறேன்**

**25. தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.** PTA-6

மூவேந்தர்களாலும் நாற்றிசையும் போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழே, உலக மொழிகளில் உயர்ந்ததென்ற செம்மாந்த அமைப்பே காரணமாகும். முப்பாலை முழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை ஐந்திணைகளில் அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள். நானிலத்தில் பசித்தவர்க்கு அறுசுவை

உணவுபோல் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் படிப்பவர்க்கு மனத்திற்கினிமை ஈந்து தமிழ்ப்பெருமை சாற்றுகிறது.

| | | |
|---|---|---|
| மூவேந்தர் | - மூன்று + வேந்தர் | - ௩ |
| நாற்றிசை | - நான்கு + திசை | - ௪ |
| முத்தமிழ் | - மூன்று + தமிழ் | - ௩ |
| இருதிணை | - இரண்டு + திணை | - ௨ |
| முப்பால் | - மூன்று + பால் | - ௩ |
| ஐந்திணை | - ஐந்து + திணை | - ௫ |
| அறுசுவை | - ஆறு + சுவை | - ௬ |

**26. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக.**
**புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, உதகமண்டலம், கோயம்புத்தூர், நாகப்பட்டினம், புதுச்சேரி, கும்பகோணம், திருநெல்வேலி, மன்னார்குடி, மயிலாப்பூர், சைதாப்பேட்டை, தஞ்சாவூர்**

புதுக்கோட்டை - புதுகை
திருச்சிராப்பள்ளி - திருச்சி
உதகமண்டலம் - உதகை
கோயம்புத்தூர் - கோவை
நாகப்பட்டினம் - நாகை
புதுச்சேரி - புதுவை
குமபகோணம் - குடந்தை
திருநெல்வேலி - நெல்லை
மன்னார்குடி - மன்னை
மயிலாப்பூர் - மயிலை
சைதாப்பேட்டை - சைதை
தஞ்சாவூர் - தஞ்சை

## இயல் - 8

**27. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.**

**1. மனக்கோட்டை, 2. கண்ணும் கருத்தும்**
**3. அள்ளி இறைத்தல் 4. ஆறப்போடுதல் 5. கயிறு திரித்தல்**

1. **மனக்கோட்டை** - உழைக்காமல் முன்னேறி விடலாம் என்று சிலர் மனக்கோட்டை கட்டுகின்றனர். **PTA-3**
2. **கண்ணும் கருத்தும்** - ஆசிரியர் மாணவர்களுக்குக் கண்ணும் கருத்துமாகக் கற்பித்தார். **PTA-3,4**
3. **அள்ளி இறைத்தல்** - பணத்தைக் கணக்குப் பார்க்காமல் அள்ளி இறைத்தால் வறுமையே வாட்டும். **PTA-5**

4. **ஆறப்போடுதல்** - பிரச்சனைகளைப் பெரிதுபடுத்தாது ஆறப்போடுதல் நல்ல மருந்து. **PTA-5**
5. **கயிறு திரித்தல்** – இரகு ஆசிரியரிடம் கயிறு திரித்தாற்போல் கதை விட்டுப் பேசுகிறான் என்பது புரிந்தது.

**28. உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.**

1. **‘‘இப்ப ஓசரமா வளந்துட்டான்! ஒனக்கு அடையாளமே தெரியாது! ஊருக்கு எங்ககூட வருவாம் பாரேன்! சரி. போனை வையி. நாங் கௌம்பிட்டேன்...’’** **SEP-21**
   “இப்போது உயரமாக வளர்ந்துவிட்டான், உனக்கு அடையாளமே தெரியாது. ஊருக்கு என்னுடன் வருவான், பார்த்துக்கொள். சரி. தொலைபேசியை வைத்துவிடு. நான் புறப்படுகிறேன்.’’
2. **‘‘தம்பீ! எங்க நிக்கிறே?’’, ‘‘நீங்க சொன்ன எடத்துலதாண்ணே! எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது.’’** **PTA-5**
   “தம்பி, எங்கே நிற்கிறாய்?’’. “நீங்கள் கூறிய இடத்தில்தான் அண்ணா! எதிர்ப்புறத்தில் ஒரு தேநீர் கடை இருக்கிறது.’’

**29. சொற்களைப் பிரித்துப் பொருள் தருக.**

**1. கானடை 2. வருந்தாமரை 3. பிண்ணாக்கு 4. பலகையொலி**

1. கான் அடை - காட்டுச் சேர்
   கான் நடை - காட்டுக்கு நடத்தல்
   கால் நடை - காலால் நடத்தல்
2. வரும் தாமரை - தாமரை மலர்
   வரும் தா மரை - தாவும் மான் வருகிறது
   வருந்தா மரை - துன்புறாத மான்
3. பிண்ணாக்கு - எள், கடலை ஆட்டும்போது கிடைப்பது.
   பிள் நாக்கு - பிளவுபட்ட நாக்கு
4. பலகை ஒலி - பலகையில் ஏற்படும் ஒலி
   பல கை ஒலி - பல கைகள் தட்டும் ஒலி

**இயல் - 9**

**30. உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.**

1. **தாமரை இலை நீர்போல:**
   கமலா தாமரை இலை நீர் போலப் பட்டும் படாமலும் பழகுவாள்.
2. **மழைமுகம் காணாப் பயிர்போல** PTA-6
   தாயை இழந்த கருணையன் மழைமுகம் காணாத பயிர்போல வாடினான்.
3. **கண்ணினைக் காக்கும் இமை போல**
   கண்ணினைக் காக்கும் இமை போலத் தாய் தன் வயிற்றிலுள்ள குழந்தையைச் சுமக்கின்றாள்.
4. **சிலைமேல் எழுத்து போல**
   இளம் வயதில் கற்கும் அறக்கருத்துகள் சிலைமேல் எழுத்துபோல மனத்தில் நிலைத்து நிற்கின்றன.

**31. பொருத்தமான நிறுத்தற் குறியிடுக.** AUG-22

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

**விடை:**

சேரர்களின் பட்டப்பெயர்களில் 'கொல்லி வெற்பன்', 'மலையமான்' போன்றவை குறிப்பிடத்தக்கவை. 'கொல்லிமலை'யை வென்றவன் 'கொல்லி வெற்பன்' எனவும், பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் 'மலையமான்' எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

வி.எண்: 29-31 3 மதிப்பெண்கள்

## பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1 (மதிப்பெண்கள்: 6)

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2×3=6

**வினா எண்: 29, 31**

**1. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' இதுபோல் இளம் பயிர் வகை மூன்றின் பெயர்களைத் தொடர்களில் அமைத்து எழுதுக.** **PTA-3, MAY-22**

- பிள்ளை - தென்னம்பிள்ளை வாங்கி வந்தேன்
- கன்று - மாங்கன்று செழித்து வளர்ந்துள்ளது
- நாற்று - தோட்டத்தில் கத்தரி நாற்று நட்டார்.
- வடலி - பனைவடலியைக் கண்டேன்.
- குருத்து - வாழையின் குருத்து நீண்டுள்ளது.

**2. தமிழ் சொல்வளம் குறித்து கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக.** **PTA-4**

'தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கு சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள' என்று கால்டுவெல் குறிப்பிடுகிறார்.

**3. 'நீர்' தன்னைப்பற்றி பேசினால் ............. உங்கள் கற்பனையில் ஆறு தலைப்புகள் தருக.** **PTA-6, SEP-20**

- பல பெயர்களில் நான் .....
- இலக்கியத்தில் நான் .....
- முந்நீராக நான் .....
- உலகமும் உயிர்களும் நிலைக்க நான் .....
- என்னை மாசாக்கும் மனிதர்கள்
- மனிதரே! என்னைச் சேமியுங்கள்

**4. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.**

மின்விசிறிக் காற்று : வணக்கம் தோழா! எங்கிருந்து வருகிறாய்?

சோலைக் காற்று : வணக்கம் தோழா! நான் சோலைகளைக் கடந்து வருகிறேன்.

மின்விசிறிக் காற்று : நான் எப்படி ஒரே இடத்தில் நிலையாக நின்று வீசிக் கொண்டிருக்கிறேன்? நீ மட்டும் ஏன் இப்படி அலைந்து கொண்டிருக்கிறாய்?

சோலைக் காற்று : நான் உலகம் முழுவதும் அலைந்து திரிவதனால்தான் உலக உயிர்களே வாழ முடிகிறது. நீ இல்லாமல் கூட மனிதர்கள் வாழ்ந்துவிட முடியும்.

மின்விசிறிக் காற்று : அதுவும் சரிதான் நண்பா! என்னை இயக்க மின்சாரம் தேவை.

**5. வாழை இலையில் விருந்து என்பது தமிழர் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்று என்பதை விளக்குக.** **PTA-5**

- தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
- தலைவாழை இலையில் விருந்தளிப்பது தமிழர் மரபு.
- உணவை உண்ணும் உறவினரின் இடப்பக்கம் வாழை இலையின் குறுகலான பகுதியும் வலப்பக்கம் இலையின் விரிந்த பகுதியும் இருக்கும்.
- இலையின் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலான அளவில் சிறிய உணவு வகைகளையும், வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலான அளவில் பெரிய உணவு வகைகளையும், நடுவில் சோறும் வைத்து எடுத்துண்ண வசதியாகப் பரிமாறுவர்.
- உறவினரின் மனமறிந்து, அவர்கள் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளைப் பரிவுடன் பரிமாறுவர்.

**6. காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றம் குறித்து உங்கள் கருத்துகள் மூன்றினை எழுதுக.** **PTA-3**

- இன்று வீட்டிற்குத் திண்ணை வைத்துக் கட்டுவதில்லை. அறிமுகம் இல்லாத புதியவர்களை விருந்தினர்களாக ஏற்பதும் இல்லை.
- இல்ல விழாக்கள் தற்போது திருமண மண்டபத்திலேயே நடைபெறுகிறது.

- திருமணக் கூடங்களில் நடைபெறும் இல்ல விழாக்களில் விருந்தினரை வரவேற்பது முதல் பந்தியில் உபசரித்து வழியனுப்பும் வரை திருமண ஏற்பாட்டாளர்களே செய்யும் விருந்தோம்பல் நடைபெறுகிறது.


**7. நீவிர் அறிந்த செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு மூன்றினை எழுதுக.** **GMQP-19**

- சமூக ஊடகங்கள் வழியாகவும் மின்னணுச் சந்தை மூலமாகவும் செயற்கை நுண்ணறிவு கொஞ்சம் கொஞ்சமாக நம்மிடம் வந்துசேரத் தொடங்கிவிட்டது.
- சமூக ஊடகங்களில் நீங்கள் பார்க்கின்ற ஒவ்வொன்றும் தேடுபொறிகளில் தேடிக் கிடைக்கும் விடைகளும் செயற்கை நுண்ணறிவுதான் தீர்மானிக்கிறது.
- இணையத்தில் வணிகம் செய்யும் தனியார் நிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துகிறது.

**8. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?** **PTA-1**

- கல்வியே நமக்கான மதிப்பைத் தரும்.
- கல்வியே ஒருவனை நல்மனிதனாக்கும்.
- கற்றோருக்குச் செல்லுமிடமெல்லாம் சிறப்பு.
- சிறுவயதில் படிக்காமல் வேலைக்குச் செல்வது தண்டனைக்குரிய குற்றம்.
- நன்கு படித்தால் நல்ல வேலைக்குச் சென்று கை நிறைய சம்பாதிக்கலாம்.

**9. படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்துகலை குறித்து இரண்டு வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் எழுதுக.**



**அ) கரகாட்டம் என்பது யாது?** **PTA-2**

'கரகம்' என்னும் பித்தளைச் செம்பையோ, சிறிய குடத்தையோ தலையில் வைத்துத் தாளத்திற்கு ஏற்ப ஆடுவது கரகாட்டம்.

**ஆ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?**

கரகம், கும்பாட்டம்.

**10. பொய்க்கால் குதிரையாட்டம் பற்றிக் கூறுக.** PTA-4

- மரத்தாலான பொய்க்காலில் நின்று கொண்டும் குதிரை வடிவுள்ள கூட்டை உடம்பில் சுமந்து கொண்டும் ஆடும் ஆட்டமே பொய்க்கால் குதிரையாட்டம் ஆகும்.
- அரசன், அரசி வேடமிட்டு ஆடப்படும் இவ்வாட்டம் புரவி ஆட்டம், புரவி நாட்டியம் எனவும் அழைக்கப்படுகிறது.
- குதிரைமேல் ஏறிப் பயணம் செய்வது போன்று கடிவாளத்தை ஆட்டியும், காலை உயர்த்தியும் நான்கு புறம் ஓடியும் ஆடுகின்றனர்.
- இவ்வாட்டத்திற்கு பாடல் பயன்படுத்தாது நையாண்டி மேளமும் நாகசுரமும் இசைக்கப்படுகின்றன.

**11. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.** PTA-4, MAY-22

- நூல் வாங்குவதற்குப் போதிய பணமில்லாத வறுமை நிலையிலும் பழைய புத்தகங்கள் விற்கும் கடைக்குச் சென்று மிகக் குறைந்த விலைக்குப் புத்தகங்கள் வாங்குவார்.
- உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகங்களை வாங்கிவிட்டுப் பட்டினி கிடந்திருக்கிறார்.
- குறைந்த விலைக்கு நல்ல நூலொன்று கிடைத்துவிட்டால் பேரானந்தம் அடைவார்.

**12. 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.** PTA-6, AUG-22

**இடம்:**

'எனது போராட்டம்' என்னும் தன் வரலாற்று நூலில் 'சிற்றகல் ஒளி' என்னும் கட்டுரையில் ம.பொ.சி அவர்களால் குறிப்பிடப்பட்டதாகும்.

**பொருள்:**

ஆந்திர மாநிலம் பிரியும்போது சென்னைதான் அதன் தலைநகராக இருக்க வேண்டும் என்று ஆந்திர தலைவர்கள் கருதிய நிலையில் ம.பொ.சி அவர்களை எதிர்த்து முழங்கிய கூற்று இதுவாகும்.

**விளக்கம்:**

சென்னை மாநகரத் தந்தை செங்கல்வராயன் மாநகராட்சி சிறப்புக் கூட்டமொன்றைக் கூட்டி, அதில் சென்னை பற்றிய தீர்மானமொன்றை முன்மொழிந்து, **'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்'** என்று ம.பொ.சி. முழங்கினார்.

**13. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.**

- அறம் செய்வதில் வணிக நோக்கம் இல்லாதவன் வள்ளல் ஆய் என்று முடமோசியார் குறிப்பிட்டுள்ளார்.
- 'செல்வத்தின் பயனே ஈதல்' என்கிறது புறநானூறு.
- உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பதுதான் என்கிறார் நல்வேட்டனார்.

இத்தகைய அறங்கள் அனைத்தும் இன்றைக்கும் தேவையான வையே ஆகும்.

**14. முன்னுரையில் முகம் காட்டும் ஜெயகாந்தன் குறித்து எழுதுக.** **PTA-5**

- எழுத்தாளர், ஒருவருடைய படைப்பு நோக்கத்தையும் படைப்பு பாங்கையும் வாழ்க்கைச் சிக்கல்கள் குறித்த கண்ணோட்டத்தையும் உணர்த்துவதுதான் முன்னுரை.
- தன்னுடைய படைப்புகளுக்குத் தானே முன்னுரைகள் எழுதிக் கொள்ளும் ஜெயகாந்தன், பின்னர் வரவிருக்கும் கேள்விகளுக்குத் தரும் பதில்களாக அவற்றை ஆக்கிவிடுவார்.

**15. ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார் - இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் 'தர்க்கத்திற்கு அப்பால்' கதை மாந்தர் வாயிலாக விளக்குக.** **PTA-4**

- ஜெயகாந்தனின் 'தர்க்கத்திற்கு அப்பால்' கதையில் பிச்சை எடுக்கும் கண் தெரியாதவரும், தர்மம் செய்பவராக வரும் ஜெயகாந்தனுமே கதை மாந்தர்கள் ஆவர்.

- காபி அருந்திய ஜெயகாந்தன் இரயில் கட்டணத்திற்கு பன்னிரெண்டனாவை ஒதுக்கிவிட்டு, மீதமிருந்த இரண்டனாவைப் பிச்சைக்காரனுக்குத் தர்மம் செய்கிறார்.
- இரவில் நிலையத்தில் இரயில் கட்டணம் பதின்மூன்றணா வாக விலையேற, பிச்சைக்காரனின் தட்டிலிருந்து தர்மம் செய்ததை எடுக்கப்போகிறார் ஜெயகாந்தன்.
- ஜெயகாந்தன் ஓரணாவைப் பிச்சைக்காரனின் தட்டில் போட்டுவிட்டு இரண்டனா எடுக்கும்போது பிச்சைக்காரன் 'சாமி இதுதாணுங்களா தர்மம்; குருடனை ஏமாத்தாதே' என்றான்.
- மூன்றணாவைத் தர்மம் செய்துவிட்டு அடுத்த இரயில் நிலையம் வரை ஜெயகாந்தன் நடக்க, அவர் ஏற்கனவே செல்லவிருந்த இரயில் விபத்துக்குள்ளானது.
- விபத்திலிருந்து தப்பிக்கக் காரணம் தான் செய்த தர்மம்தானா என்று தர்க்கத்திற்கு அப்பாற்பட்ட சிந்தனையை வெளிப்படுத்துகிறார் ஜெயகாந்தன்.

**16. ஜெயகாந்தனின் 'தர்க்கத்திற்கு அப்பால்' சிறுகதையில் கதை மாந்தர் ஒருவரின் சிறப்புக் கூறு ஒன்றினைக் குறிப்பிட்டு எழுதுக.** **PTA-4**

- 'தர்க்கத்திற்கு அப்பால்' கதை மாந்தர்கள் – கண்ணில்லாத பிச்சைக்காரன், தர்மம் செய்தவன்.
- இரயில் நிலையத்திற்கு வெளியே இருந்த கண்ணில்லாத பிச்சைக்காரனுக்கு இரண்டனாவை அவர் போட்டார். அதைப் பெற்றுக்கொண்டவன் கைகள் குவித்து, 'சாமி, நீங்கபோற வழிக்கெல்லாம் புண்ணியம் உண்டு' என்று வாழ்த்தினான்.
- அந்தப் பிச்சைக்காரனுக்குத் தர்மம் செய்யாமல் இருந்திருந்தாலோ அல்லது தர்மம் செய்த ஓரணாவை எடுத்துச் சென்றிருந்தாலோ விபத்துக்குள்ளான இரயிலில் தான் சென்றிருப்பார் ஜெயகாந்தன். தர்மம் தலைகாக்கும் என்பதைத் தர்மம் செய்தவர் உணர்ந்தார்.
- தர்மம் தந்தவனும் அதைப் பெற்றவனும் மனதார வாழ்த்தும் நன்மாந்தர்களின் சிறப்புக் கூறுகளாகும்.

**17. ஜெயகாந்தனின் திரைப்படப் படைப்புகளைக் கூறுக.** **AUG-22**

'சிறுகதை மன்னன்' என அழைக்கப்பட்ட ஜெயகாந்தன் சில திரைப்படப் படைப்புகளையும் தந்துள்ளார். அவை:

- சில நேரங்களில் சில மனிதர்கள்
- ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்
- ஊருக்கு நூறு பேர்
- உன்னைப் போல் ஒருவன்
- யாருக்காக அழுதான்

**வினா எண்: 30**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

1. தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். பிற நாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும் சில்வகைப்பட்டவனவாகவுமிருக்க, தமிழ்நாட்டிலுள்ளவையோ பலவாகவும் கழிபல வகைப்பட்டனவாகவும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக கோதுமையை எடுத்துக் கொள்ளின் அதில் சம்பாக் கோதுமை, குண்டுக் கோதுமை, வாற்கோதுமை முதலிய சில வகைகளேயுண்டு. ஆனால், தமிழ்நாட்டு நெல்லிலோ, செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும், பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன. **SEP-21**

**அ) தமிழ்நாடு பொருள் வளமுடையது என்பது எதனால் விளங்கும்?**

தமிழ்நாட்டின் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.

**ஆ) கோதுமையின் வகைகளைக் குறிப்பிடுக.**

சம்பாக் கோதுமை, குண்டுக் கோதுமை, வாற்கோதுமை.

**இ) தமிழ்நாட்டு நெல்லின் வகைகளை எழுதுக.**

செந்நெல், வெண்ணெல், கார்நெல்.

2. தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். அதனால்தான் 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார். **GMQP-19**

**அ) விருந்தினர் என்போர் யாவர்?**

முன்பின் அறியாத புதியவர்களே விருந்தினர்.

**ஆ) விருந்து குறித்துத் தொல்காப்பியர் கூறியது யாது?**

விருந்து 'புதுமை' என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

**இ) இவ்வுரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.**

விருந்தோம்பல்.

3. பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் முதலில் தோன்றியது. பின்னர் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. காலமாற்றத்தால் உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது. **PTA-4, AUG-22**

**அ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?**

தொடர்ந்து மழை பெய்ததால் புவி வெள்ளத்தில் மூழ்கியது.

**ஆ) பெய்த மழை – இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.**

பெய்மழை.

**இ) உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை?**

நிலம், நீர் ஆகியவை உருவானதால் உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழல் பூமியில் உருவானது.

4. தற்போது வெளிவருகிற சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிப்படக் கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. கடவுச்சொல்லும் கைரேகையும் கொண்டு திறன்பேசியைத் திறப்பது பழமையானது. உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது, இன்றைய தொழில்நுட்பம். செயற்கை நுண்ணறிவு, படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது. **PTA-1**

**அ) திறன்பேசியைத் திறக்கும் பழைய முறைகள் எவை?**

கடவுச் சொல், கைரேகை.

**ஆ) திறன்பேசியில் படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு செயற்கை நுண்ணறிவு எவ்வாறு செயல்படுகிறது?**

திறன்பேசியில் படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு செயற்கை நுண்ணறிவு அதற்கேற்ப தன்னை தகவமைத்துக் கொள்கிறது.

**இ) உயர்வகைத் திறன்பேசிகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் எது?**

ஒளிப்படக் கருவி மற்றும்
செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம்.

5. சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன. சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழர் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணைசெய்கின்றன. **PTA-5**

**அ) பழந்தமிழ் மக்களின் எந்தெந்த எச்சங்களை அறிவதற்கு நிகழ்கலைகள் துணைசெய்கின்றன?**

மக்களின் கலை, அழகியல் மற்றும் புதுமை.

**ஆ) நிகழ்கலைகளின் பயன்கள் இரண்டினை எழுதுக.**

- மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.
- செய்திகளைத் தரும் ஊடகமாகவும் பயன்படுகின்றன.

**இ) நிகழ்கலைகள் எப்பகுதி மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகத் திகழ்கின்றன?**

சிற்றூர் பகுதி மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாக நிகழ்கலைகள் திகழ்கின்றன.

6. அம்மானைபாடல்கள், சித்தர்பாடல்கள், சொற்பொழிவுகள் போன்றவற்றின் மூலமாக நான் இலக்கிய அறிவு பெற்றேன். அப்போது அவர்கள் வெளியிடும் சிறந்த கருத்துகளை ஏடுகளில் குறித்து வைத்துக்கொள்வேன். யான் முறையாக ஏட்டுக்கல்வி பெற இயலாமல் போனால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யக் கேள்வி ஞானத்தைப் பெறுவதிலேயே மிகுந்த ஆர்வம் காட்டினேன். எனது கேள்வி ஞானத்தைப் பெருக்கிய பெருமை திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளுக்கே அதிகம் உண்டு என்றெல்லாம் தமது செவிச்செல்வம் பற்றி ம.பொ.சிவஞானம் குறிப்பிட்டுள்ளார். **PTA-2**

**அ) ம.பொ.சி. அவர்கள் கேள்வி ஞானத்தை அதிகமாக யாரிடம் பெற்றதாகக் குறிப்பிடுகிறார்?**

திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளிடம்.

**ஆ) ம.பொ.சி. அவர்கள் இலக்கிய அறிவினை எவ்வாறு பெற்றார்?**

அம்மானைப் பாடல்கள், சித்தர் பாடல்கள், சொற்பொழிவுகள் போன்றவற்றின் மூலம் இலக்கிய அறிவைப் பெற்றார்.

**இ) ஏட்டுக்கல்வி பெற இயலாத ம.பொ.சி, அதனை எவ்வாறு ஈடு செய்தார்?**

கேள்வி ஞானத்தின் மூலம்.

7. தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது.

தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

**PTA-3,4, SEP-20**

**அ) ஆவூர் மூலங்கிழாரின் போர் அறம் யாது?**
தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதே.

**ஆ) போர் அறம் என்பது எதனைக் குறிக்கிறது?**
போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது.

**இ) யாருக்கெல்லாம் தீங்கு வராதவண்ணம் போர் புரிய வேண்டும்?**
பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர்.

8. அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அறம் கூறு அவையம் பற்றி 'அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு, உறையூரிலிருந்த அற அவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது; அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.

**MAY-22**

**அ) அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தவை எவை?**
அறம் கூறும் மன்றங்கள்.

**ஆ) அவையம் பற்றி புறநானூறு கூறுவது யாது?**
'அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்' என்று புறநானூறு கூறுகிறது.

**இ) மதுரையில் இருந்த அவையம் எப்படி இருந்ததாக மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது?**
துலாக்கோல் போல நடுநிலை மிக்கது.

**வி.எண்: 32-34**

**பிரிவு - 2 (மதிப்பெண்கள்: 6)**

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** $2 \times 3 = 6$

**வினா எண்: 32, 33**

1. **தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?** **PTA-2, MAY-22**
   - அன்னை மொழியே! அழகான செந்தமிழே!
   - பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே!
   - குமரிக்கண்டத்தில் நிலைபெற்று அரசாட்சி செலுத்திய மண்ணுலகப் பேரரசே!
   - பாண்டியனின் மகளே! திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவளே!
   - பாட்டும்,தொகையும்ஆனவளே!பதினெண்கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே!
   - கடல் கொண்ட குமரியில் நிலையாய் நின்று அரசாட்சி செய்த பெருந்தமிழ் அரசே!
   - பொங்கியெழும் நினைவுகளால் தலைபணிந்து தமிழே உன்னை வாழ்த்துகின்றோம்.

2. **மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.**
   **குறிப்பு: இலைகளில் சொட்டும் நீர் - உடலில் ஓடும் மெல்லிய குளிர் - தேங்கிய குட்டையில் 'சளப் சளப்' என்று குதிக்கும் குழந்தைகள் - ஓடும் நீரில் காகிதக் கப்பல்.** **PTA-4**
   - மழை நின்றதும் மரங்களின் இலைகளில் இலைகளோடு சங்கமித்திருக்கும் மழைத்துளிகள் ஒவ்வொன்றாய் மண்ணின் மடிமீது வந்து விழும்.
   - காற்றின் மொழி கேட்டு, தலையசைக்கும் மரங்கள் தன்னிடம் தஞ்சம் கொண்ட சில மழைத்துளிகளை உதறிவிடும்.
   - மண் வாசனையுடன் மனம் குளிரும் வேளையில் தென்றல் தேடிவந்து உடலில் மெல்லிய குளிரை ஓடச்செய்யும்.

- மழை விடை பெற்றவுடன் மீன்கள் கொஞ்சி விளையாடும் தேங்கிய குட்டைகளில் குழந்தைகள் குளிக்கக் குதிக்கும்போது ‘சளப் தளப்’ என்னும் பேரொலி எழும்பும்.
- அழகாய் ஓடிக்கொண்டிருக்கும் மழைநீரில் பிஞ்சுக்கரங்கள் காகிதக் கப்பல்களைச் செய்துவிட்டு ஆனந்தமாய் ஆடியும் பாடியும் கொண்டிருப்பர்.

**3. ‘மகரந்தத் தூளைச் சுமந்துகொண்டு, மனத்தை ‘மயலுறுத்துகின்ற இனிய வாசனையுடன் வா’ – என்ற பாடல் அடிகளில்** **SEP-21**

**அ) அடிமோனைச் சொற்களை எடுத்து எடுத்துக.**

**ஆ) பாரதியார் எதனை வாசனையுடன் வரச் சொல்லுகிறார்?**

**இ) சுமந்துகொண்டு – என்ற சொல்லைக் கொண்டு தொடர் ஒன்றை அமைக்க.**

அ) அடிமோனைச் சொற்கள்: மகரந்தத், மயலுறுத்து

ஆ) மனதை மயக்கம் கொள்ளும் இதமான காற்றை வாசனையுடன் வருமாறு கூறுகிறார்.

இ) நான் எனது புத்தகப் பையை முதுகில் **சுமந்துகொண்டு** சென்றேன்.

**4. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?** **PTA-1**

- பகலில் இளைப்பாறி, இரவில் சேர்ந்து தங்கி, ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்து, அசோக மரங்களை உடைய பொருத்தமான பாதையில் செல்லுங்கள்.
- மூங்கில்கள் அசைந்து ஓசை எழுப்பும் கடினப்பாதையில் சென்று மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள்.
- சிற்றூரிலுள்ளவர்களிடம், ‘பகைவரைப் பெறாமல் போர் செய்யும் வலிய முயற்சியும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர்கள்’ என்று சொல்லி அவர்களுடைய வீட்டுக்குள் உரிமையுடன் நுழையுங்கள்.
- நன்னனின் ஊரார் உங்களிடம் உறவினர் போலவே பழகி, இனிய சொற்களைப் பேசி, நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் உணவாக அளிப்பார்கள்.

**5. ''மாளாத காதல் நோயாளன் போல்'' என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.** **PTA-6, SEP-20**

**அறுவை மருத்துவம்:**

உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்த நோயாளி மருத்துவரை நேசிப்பார்.

**அருளே எதிர்பார்ப்பு:**

வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே! மருத்துவரைப் போன்று நீ எனக்குத் துன்பத்தைத் தந்தாலும் உன் அடியவனாகிய நான் உன் அருளையே எப்போதும் எதிர்பார்த்து வாழ்கின்றேன்.

**6. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.** **PTA-3**

- குலேச பாண்டியன் என்னும் மன்னன் தமிழ்ப் புலமையில் சிறந்து விளங்கியவர்.
- கபிலரின் நண்பரான இடைக்காடனார் என்னும் புலவர், தாம் இயற்றிய கவிதையினை மன்னன் முன்பு பாட, அதைப் பொருட்படுத்தாமல் மன்னன் புலவரை அவமதித்தான்.
- மனம் வருந்திய இடைக்காடனார், இறைவனிடம் முறையிட்டார்.
- மன்னனின் பிழையை உணர்த்துவதற்காக இறைவன் கடம்பவனக் கோவிலை விட்டு நீங்கி, வடதிரு ஆலவாயில் சென்று தங்கினார்.
- இதை அறிந்த மன்னன் தன் பிழையைப் பொறுத்தருளுமாறு இறைவனை வேண்டி, இடைக்காடனாருக்குச் சிறப்புச் செய்தான்.

**7. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் குழந்தையாகச் செங்கீரை ஆடிய நயத்தினை விளக்குக.** **PTA-1**

- கால்களில் அணிந்திருந்த சிறு செம்பொன் கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடின.
- இடையில் அரைஞாண் மணியோடு ஒளி வீசுகின்ற அரை வட்டங்கள் ஆடின.

- பசும்பொன் என ஒளிரும் தொந்தியுடன் சிறு வயிறு சரிந்தாடியது.
- பட்டம் கட்டிய நெற்றியில் பொட்டுடன் வட்டவடிவான சுட்டி பதிந்தாடியது.
- கம்பிகளால் உருவான குண்டலங்களும் காதின் குழைகளும் அசைந்தாடின.
- உச்சிக்கொண்டை அதில் சுற்றிக் கட்டப்பட்டுள்ள ஒளியுள்ள முத்துக்களோடு ஆடியது.

வைத்திய நாதபுரி முருகனே! செங்கீரை ஆடி அருள்புரிவாயாக!

**8. நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப் பாடலில் வெளிப்படுகிறது. ஒப்பிட்டு எழுதுக.** **PTA-5**

| | |
|---|---|
| இறுக்கி முடிச்சிட்டால்<br>காம்புகளின் கழுத்து முறியும்.<br>தளரப் பிணைத்தால்<br>மலர்கள் தரையில் நழுவும்.<br>வாசலில் மரணம் நிற்பதறிந்தும்<br>வருந்தாமல் சிரிக்கும்<br>இந்தப் பூவை<br>எப்படித் தொடுக்க நான்<br><br>**நவீன கவிதை** | கையாலே வெடுத்தா – மாரிக்குக்<br>காம்பழுகிப் போகுமின்னு<br>விரலாலே வெடுத்தா – மாரிக்கு<br>வெம்பி விடுமென்று சொல்லி<br>தங்கத் துரட்டி கொண்டு – மாரிக்குத்<br>தாங்கி மலரெடுத்தார்<br>**நாட்டுப்புறப்பாடல்** |

**நவீன கவிதையில்:**

பூவின் மென்மை, அழகு, நளினத்தன்மை, எதற்கும் வருந்தாமல் சிரிக்கும் மலரைப் பெண்ணோடு ஒப்பிட்டுள்ளார்.

**நாட்டுப்புறப் பாடல்:**

பெண் தெய்வமாகிய மாரியோடு ஒப்பிட்டுப் பாடப்பட்டுள்ளது.

| நவீன கவிதை கருத்து | நாட்டுப்புறப் பாடல் கருத்து |
|---|---|
| ◆ பூவை இறுக்கி முடிச்சிட்டால் காம்பின் கழுத்து முறிவது போலப் பெண்களின் கழுத்து முறியும். | ◆ மாரியாகிய பெண் தெய்வத்திற்குக் கையாலே பூப்பறித்தால் காம்பு அழுகிவிடும் என்று கையால் பூப்பறிக்கவில்லை. |
| ◆ தளரப் பிணைத்தால் மலர்கள் தரையில் நழுவுவது போல பெண் தளர்ந்தால் வாழ்வும் நழுவும். | ◆ விரலால் பூப்பறித்தால் பயனற்றதாய் வெம்பிவிடும் என்று விரலால் பூப்பறிக்கவில்லை. |
| ◆ வாசலிலே மரணம் வந்து நின்றாலும் வருந்தாமல் சிரிக்கும் பூவைப் போல பெண்ணும் வருத்தங்கள் வந்தபோது அவற்றைச் சுமையாகக் கருதாமல் குடும்பத்தைக் காப்பாள். | ◆ மேற்கண்ட காரணத்தால் மாரியாகிய பெண் தெய்வத்துக்குத் தங்கத் துரட்டி கொண்டு பூப்பறித்தார். |

**9. கம்பராமாயணம் - குறிப்பு வரைக.** **MAY-22**

- இராமனது வரலாற்றைக் கூறும் நூல் இராமாயணம் எனப்பட்டது.
- வடமொழியில் வால்மீகி எழுதிய நூலைத் தழுவி தமிழில் கம்பரால் எழுதப்பட்ட வழிநூல் கம்பராமாயணம்.
- கம்பர் தம் நூலுக்கு இட்ட பெயர் 'இராமாவதாரம்'.
- கம்பராமாயணம் ஆறு காண்டங்களைக் கொண்டது.

**10. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக.** **PTA-3**

**பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்.**

**கூரான ஆயுதம்:**

உழைத்ததால் கிடைத்த ஊதியம் கூரான ஆயுதம் என்கிறார் திருவள்ளுவர்.

**காரணம்:**

அது பகைவரை அறுத்து அழிக்கும் கருவியாக மாறுகிறது என்பதே அவரது கருத்தாகும்.

**11. முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?** **PTA-5**

- முதல் மழை விழுந்ததும் நிலம் உழுவதற்கு ஏற்ற வகையில் பதமாகிவிட்டது.
- விரைந்து சென்று பொன் போன்ற ஏரில் காளைகளைப் பூட்டி, நிலத்தை உழுதனர்.
- மண் புரண்டு, மழையும் பெய்தது; நிலம் சிலிர்த்து நாற்றுகள் நிமிர்ந்தன.
- கிழக்கு வெளுத்ததினால் கவலை காணாமல் போகிறது.

**12. மருவூர்ப்பாக்கக் கடைத்தெருவையும், உங்கள் ஊரில் உள்ள கடைத்தெருவையும் ஒப்பிட்டு மூன்று தொடர்கள் எழுதுக.**

- மருவூர்ப்பாக்க வீதிகளில் விற்கப்பட்ட நறுமணப் பொருட்கள் போன்றவை, இக்காலத்தில் கடைகளில் விற்கப்படுகின்றன. **SEP-21**
- பட்டு, பருத்திநூல், முடி ஆகியவற்றினைக் கொண்டு நூற்கும் கைத்தொழில் வல்லுநர்களை நெசவாளர்களாகக் கொண்டதாக மருவூர்ப்பாக்க வீதிகள் இருந்த நிலையில், இக்காலத்தில் எம் ஊரில் விசைத்தறி ஆடைகளையே மிகுதியாகக் கொண்ட கடைகள் நிரம்ப அமைந்துள்ளதைக் காண முடிகிறது.
- மருவூர்ப்பாக்க வீதிகளில் குவிக்கப்பட்டிருந்த முத்தும் மணியும் பொன்னும் இன்றைக்கு குளிரூட்டப்பட்ட வணிக வளாகங்களில் பலவித அலங்காரங்களுடன் காட்சிப்படுத்தப்பட்டு விற்கப்படுகின்றன.

**13. வாளித்தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை - இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.** **PTA-2**

வீட்டின் சுவர், சாளரங்கள், கதவுகள் போன்றவற்றை அவ்வப்போது தூய்மை செய்து கொண்டே இருக்க வேண்டும். வாளித் தண்ணீரைக் கொண்டு அவற்றை நன்கு கழுவி, கந்தைத் துணியால் நன்கு துடைத்துவிட வேண்டும்.

பின்னர் சாயக் குவளையிலிருக்கும் சாயத்தைக் கட்டைத் தூரிகையைக் கொண்டு அழகாய்ப் பூச வேண்டும். இவ்வாறு செய்வதால் வீடும் தூய்மையாவதோடு கரையான் போன்றவை அணுகாது; பாதுகாப்பாய்ப் பராமரிக்கப்படும்.

**14. 'கவிஞர் யானோ காலக் கணிதம்' எனத் தொடங்கும் கவிஞர் கண்ணதாசனின் கவிதையில் உங்களைக் கவர்ந்த மூன்று தொடர்களை எழுதி காரணத்தைக் குறிப்பிடுக.** **PTA-4**

- **'புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக்காது**
  **இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது'**

  – தன்னை ஒருவர் புகழ்வதினால் பெருமகிழ்ச்சியடைவதோ, இகழ்வதினால் மனம் வருந்துவதோ இல்லை என்பது பண்பட்ட மனத்திற்குச் சான்றாகிறது.

- **'செல்வந்தர்தங் கையில் சிறைப்பட மாட்டேன்**
  **பதவி வாளுக்கும் பயப்பட மாட்டேன்!'**

  – என்பதிலிருந்து பணமோ, பதவியோ தன்னை ஒருபோதும் அடிமைப்படுத்த இயலாது என்பதற்குச் சான்றாக அமைகிறது.

- **'எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை**
  **என்ப தறிந்து ஏகுமென் சாலை!'**

  – நல்லது எது கெட்டது எது என்பதறிந்து பகுத்தறிவுடன் செயல்படுவதற்குச் சான்றாகிறது.

**15. 'சித்தாளின் மனச்சுமைகள் செங்கற்கள் அறியாது' – இடஞ்சுட்டிப் பொருள் தருக.** **PTA-6, SEP-20**

**இடம்:**

இவ்வரிகள் 'சித்தாளு' என்னும் தலைப்பில் நாகூர் ரூமி எழுதியுள்ள கவிதையில் இடம்பெற்றுள்ளன.

**பொருள்:**

சித்தாளின் இன்னல்களை உயிரற்ற செங்கற்கள் அறிவதில்லை.

**விளக்கம்:**

அடுத்த வேளை உணவுக்காக அலுக்காமல் அனுதினமும் சித்தாளு கற்களைச் சுமக்கின்றாள். ஒருவேளை இவள் மரணம் அடைந்தால்கூட அது சிறிதளவே சலனத்தை ஏற்படுத்தும்.

**16. ‘உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது’ - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.** GMQP-19

**இடம்:**

இவ்வரிகள் ‘காலக்கணிதம்’ என்னும் தலைப்பில் கவிஞர் கண்ணதாசன் எழுதியுள்ள கவிதையில் இடம்பெற்றுள்ளது.

**பொருள்:**

உள்ளத்தில் இருக்கும் வார்த்தை என் உடம்பைத் தொடாது.

**விளக்கம்:**

நான் சொல்வதை ஏற்றுக்கொள்பவர்கள் ஏற்றுக் கொள்ளட்டும்; குறை கூறுபவர்கள் குறை கூறட்டும். உள்ளத்தில் இருக்கும் வார்த்தை என் உடம்பை ஒன்றும் செய்யாது என கண்ணதாசன் கூறுகிறார்.

**17. பெருமாள் திருமொழி - நூற்குறிப்பு வரைக.** AUG-22

- பன்னிரு ஆழ்வார்கள் பாடிய தீந்தமிழ்ப் பனுவல் நாலாயிரத் திவ்விய பிரபந்தம்.
- இந்நூலில் முதலாயிரத்தில் ஐந்தாவது திருமொழியாகப் பெருமாள் திருமொழி இடம்பெற்றுள்ளது.
- பெருமாள் திருமொழியில் 105 பாடல்கள் உள்ளன.
- இந்நூலைப் பாடியவர் குலசேகராழ்வார் ஆவார்.

**18. பூவின் நிலைகளை வரிசைப்படுத்தி எழுதுக.** AUG-22

பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள்:

- அரும்பு : பூவின் தோற்றநிலை.
- போது : பூவிரியத் தொடங்கும் நிலை.
- மலர் (அலர்) : பூவின் மலர்ந்த நிலை.
- வீ : மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலை.
- செம்மல் : பூ வாடின நிலை.

## வினா எண்: 34 - அடிபிறழாமல் எழுதுக

**1. அன்னை மொழியே - அழகார்ந்த செந்தமிழே!**

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்

மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!
தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!
*-பாவலரேறு பெருஞ்சித்திரனார்*

**2. முல்லைப்பாட்டு**

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்" என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம். *-நப்பூதனார்*

**3. காசிக்காண்டம்**

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே *-அதிவீரராம பாண்டியர்*

**4. பெருமாள் திருமொழி**

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே. *-குலசேகராழ்வார்*

**5. நீதி வெண்பா**

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.
*-கா.ப. செய்குதம்பிப் பாவலர்*

6. **திருவிளையாடற் புராணம்**
புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா.
*-பரஞ்சோதி முனிவர்*

7. **முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்**
செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்
கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட
வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை
*- குமரகுருபரர்*

8. **கம்பராமாயணம்**
★ தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கண் முழவி னேங்கக் குவளை கண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ. *-கம்பர்*

★ வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான்.
*-கம்பர்*

9. **சிலப்பதிகாரம்**
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்;

பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்; *-இளங்கோவடிகள்*

**10. காலக்கணிதம்**

மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்! *-கண்ணதாசன்*

**11. தேம்பாவணி**

நவமணி வடக்க யில்போல்
    நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
    தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
    துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
    ஒலித்து அழுவ போன்றே. *-வீரமாமுனிவர்*

**வி.எண்: 35-37**

**பிரிவு - 3 (மதிப்பெண்கள்: 6)**

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2×3=6

**1. '<u>அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது</u>' இவை அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும்.**

**இக்கூற்றில் அடிக்கோடிட்ட எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.**

| வினைமுற்று | தொழிற்பெயர் | வினைமுற்று | தொழிற்பெயர் |
|---|---|---|---|
| அறிந்தது | அறிதல் | அறியாதது | அறியாமை |
| புரிந்தது | புரிதல் | புரியாதது | புரியாமை |
| தெரிந்தது | தெரிதல் | தெரியாதது | தெரியாமை |
| பிறந்தது | பிறத்தல் | பிறவாதது | பிறவாமை |

2. **தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர் கடிகாரத்தில் மணி பார்த்தாள்.**

   **இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.** **MAY-22**

   - **மல்லிகைப்பூ** - இருபெயரொட்டுப் பண்புத்தொகை மல்லிகை - சிறப்புப் பெயர்; பூ - பொதுப்பெயர்.
   - **குடிநீர் நிரப்பினாள்** - இரண்டாம் வேற்றுமைத்தொகை - குடிநீரை நிரப்பினாள்.
   - **ஆடு மாடுகளுக்கு** - உம்மைத்தொகை - ஆடுகளுக்கும் மாடுகளுக்கும்.
   - **குடிநீர்** - வினைத்தொகை - குடித்த நீர், குடிக்கின்ற நீர், குடிக்கும் நீர்.
   - **மணி பார்த்தான்** - இரண்டாம் வேற்றுமைத் தொகை - மணியைப் பார்த்தான்.

3. **கண்ணே கண்ணுறங்கு!**
   **காலையில் நீ எழும்பு!**
   **மாமழை பெய்கையிலே**
   **மாம்பூவே கண்ணுறங்கு!**
   **பாடினேன் தாலாட்டு**
   **ஆடி ஆடி ஓய்ந்துறங்கு - இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.** **PTA-2, SEP-21**

   - கண்ணே கண்ணுறங்கு - விளித்தொடர்
   - காலையில் நீயெழும்பு - ஐந்தாம் வேற்றுமைத் தொகா நிலைத் தொடர்
   - மாமழை பெய்கையிலே - உரிச்சொற்றொடர்

- பாடினேன் தாலாட்டு – வினைமுற்றுத்தொடர்
- ஆடி ஆடி ஓய்ந்துறங்கு– அடுக்குத் தொடர்

4. **நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைந்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது; தந்தை என்னிடம், ''இலச்சுமி கூப்பிடுகிறாள் போய்ப்பார்'' என்றார். ''இதோ சென்றுவிட்டேன்'' என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து, ''என்னடா விளையாட வேண்டுமா?'' என்று கேட்டு அவனை அவிழ்த்து விட்டேன். என் தங்கை அங்கே வந்தாள். அவளிடம், ''நீயும் இவனும் விளையாடுங்கள்'' என்று கூறினேன். அவிழ்த்துவிடப்பட்ட இலச்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள். – இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக.** **PTA-5**

**திருத்தப்பட்ட வழுக்கள்:**

- நேற்று பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது *(நிறைந்தது)* – கால வழுவமைதி.
- இலட்சுமி கூப்பிடுகிறாள் *(மாட்டைக் குறிக்கிறது)* – திணை வழுவமைதி.
- இதோ சென்றுவிட்டேன் *(சென்று விடுகிறேன்)* – கால வழுவமைதி.
- என்னடா விளையாட வேண்டுமா? *(பசுங்கன்றைக் குறிக்கிறது)* – திணை வழுவமைதி.
- இலச்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள் *(மாட்டைக் குறிக்கிறது)* திணை வழுவமைதி.

5. **கொண்டு கூட்டுப் பொருள்கோளினை விளக்கி, எடுத்துக் காட்டு ஒன்று தருக.** **PTA-4**

**கொண்டு கூட்டுப் பொருள்கோள்:**

ஒரு செய்யுளில் பல அடிகளில் சிதறிக் கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடொன்று கூட்டிப் பொருள் கொள்வது கொண்டு கூட்டுப் பொருள்கோளாகும்.

**எ.கா:**

'ஆலத்து மேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு'

**விளக்கம்:**

இப்பாடலில் ஆலத்து மேல் குவளை என்றும் குளத்தில் வாலின் நெடிய குரங்கு என்றும் பொருள் கொண்டால் பொருத்தமற்றதாகிவிடும். இதில் ஆலத்து மேல குரங்கு, குளத்துள குவளை - என்று கருத்தைக் கொண்டு அங்குமிங்கும் கொண்டு பொருள்கோள் அமைந்திருப்பதால் இது கொண்டு கூட்டுப் பொருள்கோள் எனப்படும்.

6. **'கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது; மலைப் பகுதிகளில் மலைப் பயிர்களுக்கும் நிலப் பகுதிகளில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன' - காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்த போதிலும், பண்டைத் தமிழரின் திணை நிலத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக.** **PTA-3**

**குறிஞ்சி:**

- பலவகை கிழங்குகள் உற்பத்தியும், தேன் எடுத்தலும் நடைபெறுகிறது.
- மலையில் விளைந்த பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர்.

**மருதம்:**

- உழவுத் தொழிலோடு ஆடு, மாடு, கோழி உள்ளிட்ட கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன.
- நெசவுத் தொழிலும் இங்கு நடைபெறுகிறது.

**நெய்தல்:**

- மீன் பிடித்தலும், மீன்களைப் பதப்படுத்தலும், உப்பு விளைவித்தலும் இங்கு நடைபெறுகின்றது.
- கடற்பாசி உற்பத்தியாளர்களுக்கும் நல்ல வருமானம் கிடைக்கிறது.

7. **அவந்தி நாட்டு மன்னன், மருதநாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான்; அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.** **PTA-5**

- மண்ணாசை காரணமாகப் பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடிப் போருக்குச் செல்வது வஞ்சித்திணையாகும்.

- அவந்தி நாட்டு மன்னன், மருத நாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைப்பதால் 'வஞ்சித்திணைக்குச்' சான்றாகிறது.
- நாடு சொத்தாக மாறிய காலத்தில் மண்ணைக் கவர்தல் போராயிற்று.

8. **வெண்பாவின் பொது இலக்கணம் யாது?** **PTA-6**

- செப்பல் ஓசை பெற்று வரும்.
- ஈற்றடி முச்சீராகவும், ஏனைய அடிகள் நாற்சீராகவும் வரும். இயற்சீர், வெண்சீர் மட்டுமே பயின்று வரும்.
- இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை மட்டும் பயின்று வரும்.
- இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை அமையும்.
- ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடியும்.

9. **ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் யாது?** **SEP-20**

- அகவல் ஓசை பெற்று வரும்.
- ஈரசைச் சீர் மிகுதியாகவும், காய்ச்சீர் குறைவாகவும் பயின்று வரும்.
- ஆசிரியத் தளை மிகுதியாகவும், வெண்டளை, கலித்தளை ஆகியவை விரவியும் வரும்.
- மூன்று அடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அமையும்.
- ஏகாரத்தில் முடித்தல் சிறப்பு.

10. **தீவக அணியை விளக்கி, அதன் வகைகளை எழுதுக.**

**தீவக அணி:** **PTA-1,6 MAY-22**

தீவகம் என்னும் சொல்லுக்கு விளக்கு என்று பொருள். செய்யுளில் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குவது தீவக அணியாகும்.

**எ.கா:**

"சேந்தன வேந்தன திருநெடுங்கண், தெவ்வேந்தர்
ஏந்து தடந்தோள், இழிகுருதி - பாய்ந்து....."

**அணிப் பொருத்தம்:**

முதலில் உள்ள சேந்தன் (சிவந்தன) என்ற சொல் பாடலில் கண்கள், தோள்கள், திசைகள், அம்புகள், பறவைகள் அனைத்தோடும் பொருந்திப் பொருள் தருகிறது.

**வகைகள்:**

முதல்நிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம் என மூன்று வகைப்படும்.

**11. கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.** **PTA-2**

**தற்குறிப்பேற்ற அணி:**

இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

**எ.கா:** "போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
'வாரல்' என்பனபோல் மறித்துக்கை காட்ட"

**அணிப் பொருத்தம்:**

கோவலனும், கண்ணகியும் மதுரை மாநகருக்குள் சென்றபோது மதிலின் மேலிருந்த கொடிகள் காற்றில் இயற்கையாக அசைந்தன. ஆனால், இளங்கோவடிகள், 'இம்மதுரைக்குள் வரவேண்டாம்' என்று தெரிவிப்பது போலக் காற்றில் அசைவதாக தம் குறிப்பைக் கொடியின் மீது கவிஞர் ஏற்றிக் கூறியதால் இது தற்குறிப்பேற்ற அணியாகும்.

**12. நிரல்நிறை அணியை விளக்குக.** **PTA-4, SEP-20, AUG-22**

**நிரல்நிறை அணி:**

சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல்நிறை அணி எனப்படும்.

**எ.கா:** 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.'

**விளக்கம்:**

இக்குறளில் அன்பும் அறனும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, பண்பும் பயனும் என்ற சொற்களை முறைப்படக் கூறியுள்ளமையால் இது நிரல்நிறை அணி ஆகும்.

**13. தன்மையணி என்பதனை விளக்கி, அதன் வகைகளைக் குறிப்பிடுக.** **PTA-3**

**தன்மையணி:**

எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மையினைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப் பாடுவது தன்மையணியாகும்.

**எ.கா:**

'மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் .....'

**அணிப்பொருத்தம்:**

கண்ணகியின் துயர் நிறைந்த தோற்றத்தினை இயல்பாக உரிய சொற்களின் மூலம் கூறியமையால் இது தன்மை நவிற்சியணி எனப்படும்.

**வகைகள்:**

பொருள் தன்மையணி, குணத் தன்மையணி, சாதித் தன்மையணி, தொழிற் தன்மையணி என நான்கு வகைப்படும்.

**அலகிடுதல்**

| | | |
|---|---|---|
| க | - குறில் தனித்து | நேரசை |
| கல் | - குறில் ஒற்றடுத்து | |
| கா | - நெடில் தனித்து | |
| கால் | - நெடில் ஒற்றடுத்து | |
| பட | - இரு குறில் இணைந்து | நிரையசை |
| படம் | - இரு குறில் இணைந்து ஒற்று | |
| படா | - குறில் நெடில் இணைந்து | |
| படாம் | - குறில் நெடில் இணைந்து ஒற்று | |

| | | **கடைசி சீர்** | |
|---|---|---|---|
| நேர் நேர் | - தேமா | நேர் | - நாள் |
| நிரை நேர் | - புளிமா | நிரை | - மலர் |
| நிரை நிறை | - கருவிளம் | தேமா - நேர்பு | - காசு |
| நேர் நிறை | - கூவிளம் | புளிமா-நிரைபு | - பிறப்பு |

நேர் நேர் நேர் - தேமாங்காய்
நிரை நேர் நேர் - புளிமாங்காய்
நிரை நிரை நேர் - கருவிளங்காய்
நேர் நிரை நேர் - கூவிளங்காய்

**அலகிடலில் பிரிக்கும் போது**

- புள்ளி வைத்த எழுத்திற்குப் பின் கோடு போடுதல் வேண்டும்.
  **கற்/க கற்/பவை விண்/ணின்/று**
- நெடில் எழுத்தின்பின் கோடிட வேண்டும்.
  **மா/னடி நீ/டு தே/ரா**
- இரு குறில் எழுத்துகளின் பின் கோடிட வேண்டும்.
  **கச/டற றுல/கம்**
- புள்ளி வைத்த எழுத்தை மறைத்து கோட்டிற்கு முன் ஒரெழுத்து மட்டும் இருந்தால் நேர் புள்ளி வைத்த எழுத்தை மறைத்து கோட்டிற்கு முன் இரண்டெழுத்து இருந்தால் நிரை.
  **அக/ர - நிரை நேர் - புளிமா**
  **எழுத்/தெல்/லாம் - நிரை நேர் நேர் - புளிமாங்காய்**

1. **‘உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.’** **PTA-5, AUG-22**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| உல/கத்/தோ | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| டொட்/ட | நேர் நேர் | தேமா |
| வொழு/கல் | நிரை நேர் | புளிமா |
| பல/கற்/றும் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| கல்/லார் | நேர் நேர் | தேமா |
| அறி/விலா | நிரை நிரை | கருவிளம் |
| தார் | நேர் | நாள் |

இக்குறட்பா ‘நாள்’ என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

2. **'அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.'** **PTA-1**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| அரி/யவற்/றுள் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| எல்/லாம் | நேர் நேர் | தேமா |
| அரி/தே | நிரை நேர் | புளிமா |
| பெரி/யா/ரைப் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| பே/ணித் | நேர் நேர் | தேமா |
| தம/ராக் | நிரை நேர் | புளிமா |
| கொளல் | நிரை | மலர் |

இக்குறட்பா 'மலர்' என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

3. **'பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.'** **PTA-6**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| பண்/என்/னாம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| பா/டற் | நேர் நேர் | தேமா |
| கியை/பின்/றேல் | நிரை நேர்நேர் | புளிமாங்காய் |
| கண்/என்/னாம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| கண்/ணோட்/டம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| இல்/லா/த | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| கண் | நேர் | நாள் |

இக்குறட்பா 'நாள்' என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

4. **'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்.'** **PTA-4**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| ஊ/ழை/யும் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| உப்/பக்/கம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| காண்/பர் | நேர் நேர் | தேமா |
| உலை/வின்/றித் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| தா/ழா | நேர் நேர் | தேமா |
| துஞற்/று | நிரை நேர் | புளிமா |
| பவர் | நிரை | மலர் |

இக்குறட்பா 'மலர்' என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

**5. 'கருவியும் காலமும் செய்கையும் செய்யும்**
**அருவினையும் மாண்ட தமைச்சு.'** **MAY-22**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| கரு/வியும் | நிரை நிரை | கருவிளம் |
| கா/லமும் | நேர் நிரை | கூவிளம் |
| செய்/கை/யும் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| செய்/யும் | நேர் நேர் | தேமா |
| அரு/வினை/யும் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| மாண்/ட | நேர் நேர் | தேமா |
| தமைச்சு | நிரைபு | பிறப்பு |

இக்குறட்பா 'பிறப்பு' என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

**6. 'வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ**
**டைந்துன் மாண்ட தமைச்சு.'** **PTA-2**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| வன்/கண் | நேர் நேர் | தேமா |
| குடி/காத்/தல் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| தற்/றறி/தல் | நேர் நிரை நேர் | கூவிளங்காய் |
| ஆள்/வினை/யோ | நேர் நிரை நேர் | கூவிளங்காய் |
| டைந்/துன் | நேர் நேர் | தேமா |
| மாண்/ட | நேர் நேர் | தேமா |
| தமைச்சு | நிரைபு | பிறப்பு |

இக்குறட்பா 'பிறப்பு' என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

**7. 'செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்**
**தியற்கை அறிந்து செயல்.'** **SEP-21**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| செயற்/கை | நிரை நேர் | புளிமா |
| அறிந்/தக் | நிரை நேர் | புளிமா |
| கடைத்/தும் | நிரை நேர் | புளிமா |
| உல/கத் | நிரை நேர் | புளிமா |
| தியற்/கை | நிரை நேர் | புளிமா |
| அறிந்/து | நிரை நேர் | புளிமா |
| செயல் | நிரை | மலர் |

இக்குறட்பா 'மலர்' என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

8. **'பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்,'** **GMQP-19**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| பொரு/ளல் | நிரை நேர் | புளிமா |
| லவ/ரைப் | நிரை நேர் | புளிமா |
| பொரு/ளா/கச் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| செய்/யும் | நேர் நேர் | தேமா |
| பொரு/ளல்/ல | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| தில்/லை | நேர் நேர் | தேமா |
| பொருள் | நிரை | மலர் |

இக்குறட்பா 'மலர்' என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

9. **'தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து.'** **PTA-3, SEP-20**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| தொழு/தகை | நிரை நிரை | கருவிளம் |
| யுள்/ளும் | நேர் நேர் | தேமா |
| படை/யொடுங்/கும் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| ஒன்/னார் | நேர் நேர் | தேமா |
| அழு/தகண் | நிரை நிரை | கருவிளம் |
| ணீ/ரும் | நேர் நேர் | தேமா |
| அனைத்து | நிரைபு | பிறப்பு |

இக்குறட்பா 'பிறப்பு' என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

**வி.எண்: 38-42** 5 மதிப்பெண்

## பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5×5=25

### செய்யுள் - வினா விடைகள்

1. **தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.** **PTA-6**

| பாடல் அடிகள் | தமிழ் | கடல் |
|---|---|---|
| முத்தமிழ் | இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் | முத்தினை அமிழ்ந்து எடுத்தல். |

| | | |
|---|---|---|
| முச்சங்கம் | முதல், இடை, கடை ஆகிய முச்சங்கம். | வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்ச சன்யம் ஆகிய மூன்று சங்குகளைத் தருதல். |
| மெத்த வணிகலமும் (மெத்த + அணிகலன்) | ஐம்பெருங் காப்பியங்கள். | மிகுதியான வணிகக் கப்பல்கள். |
| சங்கத்தவர் காக்க | சங்கப் பலகையிலிருந்து சங்கப்புலவர்கள் பாதுகாத்தமை. | நீரலையைத் தடுத்து நிறுத்தி சங்கினைக் காத்தல். |

**2. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக. PTA-5, AUG-22**

தாயே! தமிழே! வணக்கம்.

**''நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்''** என்று மனோன்மணீயம் சுந்தரனார் நிலத்தைப் பெண்ணாக உருவகம் செய்து, முகமாகப் பரதக் கண்டத்தையும், அப்பரதக் கண்டத்தில் திராவிட நல்திருநாட்டை பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம்வீசும் திலகமாக தமிழையும் குறிப்பிடுகிறார்.

**''அன்னைமொழியே! அழகார்ந்த செந்தமிழே''** என்று குமரிக் கண்டத்தில் நிலைத்த அரசாண்ட மண்ணுலகப் பேரரசாகவும், பாண்டியன் மகளாகவும் குறிப்பிட்டுச் சிறப்புடன் பாடுகிறார், பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

அனைத்துலகும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி இருக்கின்ற பெருமை மிக்க தமிழ்ப்பெண்ணை **''எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே''** எனச் சிறப்புடன் பாடுகிறார் சுந்தரனார்.

திருக்குறளின் பெருமையாக, பத்துப்பாட்டாக, எட்டுத்தொகையாக, பதினெண்கீழ்கணக்காக, நிலைத்த சிலப்பதிகாரமாக, அழகான மணிமேகலையாகத்

திகழும் தமிழன்னையை **“முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே”** என்று பணிந்து வாழ்த்துகிறார் பெருஞ்சித்திரனார்.

அந்த வகையில் நாமும் தமிழன்னையைப் பணிந்து வாழ்த்துவோம். நன்றி வணக்கம்!

**3. முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.** **PTA-2**

**மழைப்பொழிவு:**

அகன்ற உலகத்தை வளைத்துப் பெருமழை பொழிகிறது. மழை மேகமானது, மாவலி மன்னன் நீர்வார்த்துத் தரும்பொழுது மண்ணுக்கும், விண்ணுக்கும் பேருருவம் எடுத்து நின்ற திருமாலைப் போன்றுள்ளது.

**முதுபெண்டிரின் வழிபாடு:**

மாலை வேளையில் முதிய பெண்கள் மலர்ந்த முல்லைப் பூக்களோடு நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின் முன் தூவி, தொழுது தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர்.

**கன்றின் வருத்தம்:**

சிறு தாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்றை இடைமகள் கண்டு, **“புல்லை மேய்ந்து உன் தாய்மார் வளைந்த கத்தியை உடைய கம்பைக் கொண்ட எம் இடையர் ஓட்டிவர இப்போது வந்துவிடுவர், வருந்தாதே”** என்றாள்.

**தலைவியை ஆற்றுப்படுத்தும் முதுபெண்டிர்:**

தலைவனின் வருகை குறித்து விரிச்சி கேட்டு நின்ற முதுபெண்டிர், நின் தலைவன் பகைவரை வென்று திறைப்பொருளோடு வருவது உறுதி. தலைவியே! மனத்தடுமாற்றம் கொள்ளாதே! என்று ஆற்றுப்படுத்தினர்.

**4. ஆற்றுப்படுத்தல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.** **PTA-3**

ஆற்றுப்படுத்தல் தமிழ் மக்களின் பண்பாடாக இருந்தது. அது இன்றைய காலத்தில் ஒரு வழிகாட்டுதலாக அமைகிறது என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

**அரசின் நலத்திட்டங்களை மக்கள் பெற வழிகாட்டுதல்:**

மக்களின் வாழ்வுக்கு வளம் சேர்க்கும் வகையில் அரசுப் பணியாளர்கள் வாயிலாக உரிய வழிகாட்டுதலை அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது.

**பேரிடர் காலத்தில் வழிகாட்டுதல்:**

நிலநடுக்கம், புயல், வெள்ளம், சுனாமி, கொள்ளை நோய்கள் போன்ற பேரிடர் காலங்களில் அரசுடன் இணைந்து பல்வேறு தன்னார்வ அமைப்புகளும் இணைந்து வழிகாட்டுவதுடன் பற்பல உதவிகளையும் செய்கின்றன.

**கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கான அமைப்புகளின் வழிகாட்டுதல்:**

பள்ளி மாணவர்கள் முதல் பட்ட மேற்படிப்பு மாணவர்கள் வரை மேற்கொண்டு என்ன படிக்கலாம்? கல்வி உதவித்தொகையினை எவ்வாறு பெறலாம் என்பதை அரசு மற்றும் தனியார் அமைப்புகளின் வழிகாட்டுதல் மூலம் அறியலாம்.

**போட்டித் தேர்வுகளுக்கான வழிகாட்டுதல்:**

பல்வேறு போட்டித் தேர்வுகளை எதிர்கொள்வதற்குத் தன்னார்வ நிறுவனங்கள் முன்வந்து வழிகாட்டுகின்றன.

**கல்விசார் திறன் வழிகாட்டுதல்:**

இன்றைய உலகத்தில் கல்வியையும் கடந்து கலை, இலக்கியம், விளையாட்டு உள்ளிட்ட பல்துறை சார்ந்தும் தன்னை வளர்த்துக்கொள்வதற்கான வாய்ப்பினை உரிய திறனாளிகளுக்கு வழங்குவதில் ஊடகங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்கள் வழிகாட்டி முன்நிற்கின்றன.

5. **காசிக்காண்டம் குறிப்பிடும் இல்லற ஒழுக்கங்களில் எவையேனும் ஐந்தினை எழுதி, உங்கள் வீட்டிற்கு வந்த விருந்தினரை எதிர்கொண்டு, நீங்கள் விருந்தளித்த நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதுக.** **SEP-20**

- விருந்தினராக ஒருவர் வந்தால், அவரை வியந்து உரைத்தல்.
- நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல்.
- முகமலர்ச்சியுடன் அவரை நோக்குதல்.
- ‘வீட்டிற்குள் வருக’ என வரவேற்றல்.

- அவர் எதிரில் நிற்றல்.
- எனது வீட்டிற்கு விருந்தினர் வந்தபோது, அவரை வரவேற்று முகமலர்ச்சியுடன் தேநீர் அருந்துவதற்குக் கொடுத்தோம். அவரையும், அவர் குடும்பத்தையும் நலம் விசாரித்து, இனிய நினைவுகளைப் பகிர்ந்து கொண்டோம். அவர் விடை பெற்றபோது வீட்டின் வாயில்வரை வந்து வழியனுப்பினோம்.

**6. இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.** **PTA-1,4**

**கவிதையைப் படித்தல்:**

புலவர் இடைக்காடனார் பாண்டிய மன்னன் குலேச பாண்டியனின் அவைக்குச் சென்று தான் இயற்றிய கவிதையைப் படித்தார்.

**புலவர் இறைவனிடம் முறையிடல்:**

இடைக்காடனார், “பாண்டியன், பொருட்செல்வத்தோடு கல்விச் செல்வமும் மிக உடையவன் என்பதால் சொற்சுவை நிரம்பிய கவிதை பாடினேன். அவனோ புலமையை அவமதித்தான்” என்றார்.

**இறைவன் கோவிலைவிட்டு நீங்குதல்:**

‘பாண்டியன் என்னை இகழவில்லை. சொல்லின் வடிவான பார்வதியையும் சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையுமே அவமதித்தான்’ என்றார் இடைக்காடனார். இறைவன், திருஆலவாயில் திருக்கோவிலைவிட்டு வெளியேறி நேர் வடக்கே வைகை ஆற்றின் தென்பக்கத்தே திருக்கோவிலை அடைந்து உமாதேவியாரோடு தங்கினார்.

**மன்னன் இறைவனை வேண்டுதல்:**

புலவனின் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர தவறு உன்னிடம் இல்லை. இடைக்காடனார்மீது கொண்ட அன்பினால் இங்கு வந்தேன் என்று கூறினார். என் மேலான பரம்பொருளே! தன் குற்றத்தையும் பொறுக்க வேண்டுகிறேன் என்றான் மன்னன்.

**புலவருக்கு மன்னன் மரியாதை செய்தல்:**

மன்னன் புலவர்களிடம், தான் இடைக்காடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று

பணிந்து வணங்கினான். அப்போது புலவர்கள் மன்னனிடம் ‘அமுதம் போன்ற உமது சொல்லால் எங்களது சினமான தீ தணிந்தது’ என்று கூறினர்.

**7. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.** **PTA-2, AUG-22**

| சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகள் | இக்கால வணிக வளாகங்கள், அங்காடிகள் |
|---|---|
| நறுமணப்பொருட்கள், வண்ணக்குழம்பு, சுண்ணப் பொடி போன்றவற்றை வீதிகளில் வணிகம் செய்தனர். | நறுமணப்பொருட்கள் போன்றவை கடைகளில் மட்டுமே பெரும்பாலும் விற்கப்படுகின்றன. |
| பட்டு, பருத்தி நூல், முடி ஆகியவற்றினைக்கொண்டு நூற்கும் கைத்தொழில் வல்லுநர்களான நெசவாளர் களை நிரம்பக் கொண்ட மருவூர்பாக்க வணிக வீதி. | இன்றைக்கு கைத்தறி ஆடைகளைவிட விசைத்தறி ஆடைகளே அதிகம் விற்கின்றன. வீதிக்கு வீதி பல நவீன ஆடையகங்கள் காணமுடிகின்றது. |
| முத்தும் மணியும் பொன்னும் அளக்க முடியாத அளவிற்கு மருவூர்ப்பாக்க வீதிகளில் குவிந்து கிடக்கின்றன. | குளிரூட்டப்பட்ட வணிக வளாகங்களில் பலவித அலங்காரங்களுடன் காட்சிப் படுத்தப்படுவதில் வெள்ளி, பொன், வைர நகைகள் முன் நிற்கின்றன. |
| எட்டுவகைத் தானியங்களும் குவிந்து கிடக்கும் கூலக்கடைத் தெருக்களும் உள்ளன. | எல்லாவிதப் பொருட்களையும் ஒரே இடத்தில் வாங்கும் பொருட்டு, பல்பொருள் அங்காடிகள் உள்ளன. |
| மருவூர்பாக்க வீதிகளில் பொற் கொல்லர், இரத்தின வேலை செய்பவர், தையற்காரர், தச்சர், தோல்பொருள் செய்பவர், பொம்மைகள் செய்பவர் என்ற பலரும் இருந்தனர். | இன்றைய வணிக வளாகங்களில் பல வகையான நவீன சாதனங்களை விற்பவர்கள் மற்றும் பழுது நீக்குபவர்கள், முகவர்கள் போன்றோார் உள்ளனர். |

**8. முதல் மழை விழுந்ததும்' - தொடர்ந்து நிகழும் உழவுச் செயல்களை 'ஏர் புதிதா?' கவிதை கொண்டு விவரித்து எழுதி, 'பொன்னேர் பூட்டுதல் தமிழர் பண்பாட்டின் மகுடம்' என்பதையும் விளக்குக.** **PTA- 6**

- முதல் மழை விழுந்ததும், மேல் மண் பதமானது; விடிவெள்ளி முளைத்துவிட்டது. நண்பா விரைந்து உழவுக்குப் போ!
- காளைகளை ஓட்டி, பொன் ஏர் தொழுது, புலன் வழிபட்டு, மாட்டைப் பூட்டிக் காடு - கழனிகளை உழுவர்.
- ஏர் புதிதல்ல; ஏறும் நுகத்தடி கண்டு, காடும் புதிதல்ல; உழுகின்ற கைகளும் புதிதல்ல; கார் மழையும் புதிதல்ல; நாள் - நட்சத்திரம் பார்த்து ஊக்கமாய் - வலிமையாய் உழுவர்.
- உழுவதால் மண்புரளும்; பயிரிட்டால் மழை பொழியும்; நிலம் செழித்து, நாற்றுகள் நெற்கதிர்களாக நிமிர்ந்து வளரும்.
- எல்லாத் தெய்வங்களும் நெல்லைக் காக்கும். அதனால் கவலை இல்லை. நல்ல நேரத்தில் கொழுவைப் பொருத்தி நாட்டுவோம் உழுதொழிலை.

**9. பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள மெய்க்கீர்த்தி பாடலின் நயத்தை விளக்குக.** **PTA- 4**

இந்திரன் முதல் திசைபாலகர் ஒன்று சேர்ந்து ஆட்சி செய்தால் சோழனது ஆட்சியும் சிறப்பும் பெருமையும் பெற்றது.

**சோழ நாட்டின் இயல்பு:**

- யானை பிணிக்கப்படுவதும், சிலம்பு புலம்புவதும், ஓடை கலங்குவதும், மாங்காய் வடுப்படுவதும், மலர்கள் பறிக்கப்படுவதும், வண்டுகள் கள் உண்ணுவதும் உண்டு.
- மூங்கில்கள் வெறுமை பெறுவதும், வயலில் போர் அடிப்பதும், மலைகளில் இருள் சூழ்வதும், மான்கள் மருளுவதும், செவிலியர் சினம் காட்டுவதும், பாணர் தெருவில் ஆடுவதும் சோழ நர்டடில் நடைபெறுகிறது.
- மாறாக மக்கள் யாரும் அத்தகைய செயல்களிலோ துன்பத்திற்கோ ஆளாவது இல்லை.

**இரண்டாம் இராசராச சோழனின் பெருமை:**

இரண்டாம் இராசராச சோழன் சோழநாட்டை நெறியோடு நின்று காவல் காத்து, தந்தையில்லாதோருக்குத் தந்தையாக, தாயில்லாதோருக்குத் தாயாக, மகனில்லாதோருக்கு மகனாக, உலகில் உயிர்களுக்கு எல்லாம் உயிராக இருக்கின்றான்.

10. **நதியின் பிழையன்று**
**நறும்புனலின்மை அன்றே**
**பதியின் பிழையன்று**
**பயந்த நம்மைப் புரந்தான்**
**மதியின் பிழையன்று**
**மகன் பிழையன்று மைந்த**
**விதியின் பிழை நீ**
**இதற்கென்னை வெகுண்டதென்றன் - கம்பன்**

**நதிவெள்ளம் காய்ந்து விட்டால்**
**நதிசெய்த குற்றம் இல்லை**
**விதிசெய்த குற்றம் இன்றி**
**வேறு - யாரம்மா! - கண்ணதாசன்**

**கவிச்சக்கரவர்த்தியின் கவிதையையும் கவியரசின் கவிதையையும் ஒப்பிட்டுக் கருத்துகளை எழுதுக.** **PTA- 1**

**கம்பர்:**

நல்ல தண்ணீர் வரத்து இன்மை நதியின் பிழையில்லை! நம்மைப் படைத்துக் காத்துப் பராமரித்து வரும் இறைவனின் தவறுமல்ல; அறிவின் தவறுமல்ல; மகனின் தவறுமல்ல; மைந்தனே! எல்லாம் விதியின் தவறு - இதற்காக நீ என்னை ஏன் சினந்து கொள்கிறாய்? என்று கம்பர் அருமையாக அழகாகக் கேட்கிறார்.

**கண்ணதாசன்:**

**''நதியின் வெள்ளம் காய்ந்து விட்டால், நதி செய்த குற்றமில்லை, விதி செய்த குற்றம்தான் - வேறு யாரும் இதற்குப் பொறுப்பில்லை அம்மா''** என்ற பாடிப்பரவசம் அடைகிறார். யாரையும் குற்றம் சொல்லிப் பயனில்லை. நடப்பது நடக்கும். நாம் எதிர்கொள்ளத் தயாராய் இருப்போம்.

**11. காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.** **PTA- 4,5, MAY-22**

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல் இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக! – கண்ணதாசன்

**''காலக்கணிதம்''**

**திரண்ட கருத்து:**

கவிஞன் நான் காலத்தைச் சரியாகக் கணிப்பவன். உள்ளத்தில் தோன்றும் கருத்தை அழகிய சொற்களாக வடிப்பதால், உலகினில் புகழுடைய தெய்வமாகத் திகழ்கின்றேன். பொன்னைவிட விலை மதிப்புள்ள கருத்துகள். சரியானவற்றை எடுத்துச் சொல்வதும், தவறானவற்றை எதிர்த்து உரைப்பதும் என்னுடைய வேலை. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்றையும் நானும் இறைவனும் அறிந்தவை என்று கவிஞர் கண்ணதாசன் குறிப்பிடுகிறார்.

**மோனை நயம்:**

செய்யுளில் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை.

**சான்று:** **க**விஞன் – **க**ருப்படு;

**இ**வை சரி – **இ**வை தவறாயின் ...

**எதுகை நயம்:**

செய்யுளில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.

**சான்று:** க**வி**ஞன் – பு**வி**யில்; க**ரு**ப்படு – பொ**ரு**ளை

**முரண் நயம்:**

எதிர்சொற்களால் அமைவது முரண்.

**சான்று:** ஆக்கல் × அழித்தல்

**இயைபு நயம்:**

செய்யுளில் இறுதி எழுத்து ஒன்றி வருவது இயைபு.

**சான்று:** தெய்**வம்** – செல்**வம்**

**அணி நயம்:**

செய்யுளை அழகுற அமைப்பது 'அணி' ஆகும். கண்ணதாசன் இக்கவிதையில் தன்னைக் கடவுளுக்கு இணையாக உருவகப்படுத்திப் பாடியுள்ளமையால் உருவக அணி பயின்று வந்தள்ளது.

**சான்று:** கவிஞன் யானோர் காலக் கணிதம்
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்.

**பொருள் நயம்:**

இறைவனைப் போன்று தானும் படைப்பவன் என்று கூறும் கண்ணதாசன் ஆக்கல், அளித்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களும் தனக்கும் உரியவை என்று கூறுவது மிகுந்த பொருட்சுவையைக் கொண்டுள்ளதாக அமைகிறது.

12. **கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.** **PTA-3**

கருணையன், தன் மலர் போன்ற கையைக் குவித்து, **"பூமித்தாயே! என் அன்னையின் உடலை நீ அன்போடு காப்பாயாக"** என்று கூறி, குழியினுள் அழகிய மலர்ப்படுக்கையைப் பரப்பி, அதனுள் தனது அன்னையின் உடலை அடக்கம் செய்து, அதன்மேல் மலர்களையும் கண்ணீரையும் ஒரு சேரப்பொழிந்தான்.

**"பூக்கையைக் குவித்துப் பூவே"...**

இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்னே தூய மணி போன்ற தூவும் மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்ந்துவிட்டதைப்போல, நானும் இப்போது என் தாயை இழந்து வாடுகின்றேன் என்று கருணையன் கூறுகிறான்.

**"காய்மணி யாகு முன்னர்க்**
**காய்ந்தெனக் காய்ந்தேன் அந்தோ....."**

என் மனம் பரந்து நின்ற மரக்கிளையிலிருந்து பறிக்கப் பட்ட மலரைப் போல வாடுகிறது. அம்பினால் உண்டான புண்ணின் வலியால் வருந்துவது போன்றது என் துயரம் என்றும் துணையைப் பிரிந்து வாடும் பறவை போல

வாடுவதாகவும், செல்லும் வழி தெரியாமல் தவிப்பதாகவும் கருணையன் வருந்துகின்றான்.

**''விரிந்தன கொம்பில் கொய்த**
**வீயென உள்ளம் வாட''**

தாயை இழந்த துயரத்தைக் கருணையன் வெளிப்படுத்தும் உணர்வுகளை மிக அழகாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் வீரமாமுனிவர்.

## கடிதங்கள் & மதிப்புரைகள்

**1. மாநில அளவில் நடைபெற்ற ''மரம் இயற்கையின் வரம்'' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.** PTA-4

தஞ்சாவூர்,
20.06.2022.

அன்புள்ள நண்பா,

நலம். நலமறிய ஆவல்.

மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்றுள்ளாய் என்பதை அறிந்தேன்.

உன் நண்பனாக பெருமிதமடையும் நான், நீ மென்மேலும் பற்பல போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிவாகை சூட வாழ்த்துகிறேன்.

இதய அன்புடன்,
மா. கவின்.

உறைமேல் முகவரி:

பெறுநர்
ப. இளமாறன்,
10, காந்தி நகர்,
சேலம் - 14.

**2. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.** PTA-1, SEP-21, AUG-22

அனுப்புநர்

க.கதிரவன்,
10, காந்தி நகர்,
மதுரை – 2.

பெறுநர்

உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவுப் பாதுகாப்பு ஆணையர் அலுவலகம்,
மதுரை.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் உணவு வழங்கிய உணவு விடுதியின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுதல் – தொடர்பாக.

வணக்கம். நான் நேற்று என் தெருவில் உள்ள 'குயில்' உணவகத்திற்குச் சென்று உணவு உண்டேன். விலைப்பட்டியலில் இருந்ததைவிட கூடுதலாகப் பணம் பெற்றுக்கொண்டனர். மேலும் அந்த உணவை உண்டவுடன் எனக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். எனவே தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் விற்ற உணவு விடுதியின்மீது உரிய நடவடிக்கை எடுக்க ஏதுவாக உரிய சான்றுகளையும் இத்துடன் இணைத்துள்ளேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி,

இணைப்பு: உணவு விடுதியின் இரசீது.

மதுரை.
20.06.2022

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
க. கதிரவன்.

உறைமேல் முகவரி:

பெறுநர்

உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவுப் பாதுகாப்பு ஆணையர் அலுவலகம்,
மதுரை.

**3. நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் ''உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்'' என்ற உங்கள் கட்டுரையை, வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.** PTA-3,4

அனுப்புநர்

ம. அரசன்,
20, நேரு நகர்,
தென்காசி – 2.

பெறுநர்

ஆசிரியர் அவர்கள்,
கங்கா நாளிதழ்,
திருநெல்வேலி – 1.

ஐயா,

பொருள்: கட்டுரையை வெளியிட வேண்டுதல் – தொடர்பாக.

வணக்கம்.

நாள்தோறும் தங்கள் 'கங்கா' நாளிதழைப் படித்து வருகிறேன். வரும் பொங்கல் திருநாளின் மாண்பினைப் போற்றும் வகையில் சிறப்பு மலரொன்றைத் தாங்கள் வெளியிடப் போவதை அறிந்து ''உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்'' என்ற கட்டுரையை எழுதி அனுப்பியுள்ளேன். எனவே தங்கள் நாளிதழ் சார்பாக வெளியிடும் பொங்கல் மலரில் என்னுடைய கட்டுரையும் வெளிவர ஆவன செய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி!

தென்காசி, இப்படிக்கு,
20.06.2020. ம. அரசன்.

உறைமேல் முகவரி:

பெறுநர்
ஆசிரியர்,
கங்கா நாளிதழ்,
திருநெல்வேலி –1.

**4. பள்ளித் திடலில் கிடந்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும், அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.** **PTA-6, AUG-22**

**உறவினருக்கு மடல்**

திருச்சி,
20.06.2022.

அன்புள்ள சித்தப்பாவிற்கு,

நலம். நலமறிய ஆவல். நேற்று பள்ளி முடிந்து வீட்டிற்குத் திரும்பும்போது பள்ளித்திடலில் பணப்பை ஒன்று கிடந்தது. அதைத் தலைமையாசிரியரிடம் ஒப்படைத்தேன். பள்ளியில் வசூலிக்கப்பட்ட கட்டணத்தை வங்கியில் செலுத்துவதற்காக அலுவலக ஊழியர் எடுத்துச் சென்றபோது பணத்தைத் தவறவிட்டுள்ளதைக் கூறினார்கள். மறுநாள் தலைமையாசிரியர் வழிபாட்டு நேரத்தில் என்னைப் பாராட்டி ‘நல்மாணாக்கன்’ விருது வழங்கினார். மற்ற ஆசிரியர்களும் மாணவர்களும் வெகுவாக என்னை வாழ்த்தினர். இதனை அறிந்து தாங்கள் மகிழ்வீர்கள் என்று பேரன்புடன் இக்கடிதத்தை எழுதுகிறேன்.

தங்கள் அன்புள்ள,
இரகு.ம.

உறைமேல் முகவரி:

| |
|---|
| பெறுநர்<br>வீ. ஆனந்தன்,<br>72, நேரு நகர்,<br>சேலம் – 2. |

**5. உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்பவருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.** **PTA-2,5; MAY-22,**

அனுப்புநர்
மு. அரவிந்தன்,
20, பாரதி நகர்,
மதுரை – 3.

பெறுநர்
மின்வாரிய அலுவலர் அவர்கள்,
மின்வாரிய அலுவலகம்,
மதுரை – 1.

ஐயா,

பொருள்: தெரு மின்விளக்குகள் பழுது நீக்குதல் – தொடர்பாக.

வணக்கம். எங்கள் தெருவில் மின் விளக்குகள் பத்து நாட்களாகப் பழுதடைந்துள்ளன. இதனால் சாலையில் செல்வோருக்கு அடிக்கடி விபத்துகள் நேரிடுகின்றன. சில சமூகவிரோதிகளும் இச்சூழலைப் பயன்படுத்தி, திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுகின்றனர். இரவு நேரத்தில் சரியாக ஒளிராத மின்விளக்குகளால் பெருந்துன்பத்தில் இருக்கின்றோம். எனவே, தாங்கள் அருள்கூர்ந்து உடனடியாக நடவடிக்கை எடுத்து மின்விளக்குகளைப் பழுதுநீக்கித் தருவதற்கு ஆவன செய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை, இப்படிக்கு,
20.06.2022 மு. அரவிந்தன்.

உறைமேல் முகவரி:

| |
|---|
| பெறுநர்<br>மின்வாரிய அலுவலர் அவர்கள்,<br>மின்வாரிய அலுவலகம்,<br>மதுரை – 1. |

6. **ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள உறவினருக்கு, முக்கியச் சாலை விதிகளை விளக்கி, அவற்றைக் கடைபிடிக்க வலியுறுத்திக் கடிதம் ஒன்று எழுதுக.** **PTA-6**

தஞ்சாவூர்,
22.06.2022.

அன்புள்ள அண்ணா,

நலம். நலம் அறிய ஆவல். தாங்கள் ஓட்டுநர் உரிமம் பெற்றதை எண்ணி மகிழ்கிறேன். உரிமம் பெற்றால் மட்டும் போதாது; விதிமுறைகள்படி ஓட்டுவது நல்லது.

இருசக்கர வாகனத்தில் செல்லும்போது தலைக்கவசம், மகிழுந்தில் செல்லும்போது இருக்கைப்பட்டை, மூன்று நிற எச்சரிக்கை விளக்கு உணர்த்தும் அறிவிப்புகள், முன் செல்லும் வாகனத்திற்கும் பின்தொடரும் வாகனத்திற்குமான இடைவெளி,இடப்புறம்-வலப்புறம்திரும்பும்போதுகவனிக்க வேண்டிய விதிமுறைகள் உள்ளிட்டவற்றையெல்லாம் பின்பற்ற வேண்டும்.

சாலை விதியைப் பின்பற்றி விபத்தில்லா வாழ்க்கை வாழ்வோம்!

இப்படிக்கு,
அன்புடன்,
க. வளவன்.

உறைமேல் முகவரி:

| |
|---|
| பெறுநர்<br>அ. அறிவழகன்,<br>5, பாரதிதாசன் நகர்,<br>கரூர் – 5. |

**7. புதிதாகத் திறன்பேசி வாங்கியிருக்கும் தங்கைக்கு, திறன்பேசிப் பயன்பாடு குறித்த அறிவுரைகளைக் கூறிக் கடிதம் ஒன்று எழுதுக.** **PTA-2**

கோவை,
20.06.2022

அன்புள்ள தங்கைக்கு,

நலம். நலம் அறிய ஆவல்.

நீ புதிதாகத் திறன்பேசி வாங்கியுள்ளாய் என்பதைக் கேட்டு மகிழ்ந்தேன். இனிமேல் உலகமே உன் விரல் நுனியில், எத்துறையைச் சாந்த செய்தியாக இருந்தாலும் அத்தனையும் உடனே அறியமுடியும்.

பல்வேறு பயனுள்ளவைகள் கொட்டிக் கிடந்தாலும் பாழும் கிணற்றில் விழவும் வாய்ப்புள்ளது. முகநூல், புலனம், படவரி போன்றவற்றைப் பயன்படுத்தும்போது மிகக் கவனம் தேவை.

உன் முகவரியையோ, அலைபேசி எண்ணையோ, புகைப்படத்தையோ பகிரக் கூடாது. உன் கல்விக்கும், அறிவுக்கும், தனித்திறமைக்கும் பயனுள்ள வகையில் திறன்பேசியுடனான உறவை அமைத்துக்கொள். இனிய வாழ்த்துகள்!

இப்படிக்கு,
அன்பு அண்ணன்,
க. அறிவழகன்.

உறைமேல் முகவரி:

பெறுநர்
க.கயல்விழி,
த/பெ. பெ. கதிரவன்,
25, கம்பர் நகர், மதுரை - 06.

**8. நீங்கள் விரும்பி படித்த நூல் ஒன்றின் சிறப்புகளைக் கூறி, உங்கள் நண்பரையும் அந்நூலினைப் படிக்குமாறுப் பரிந்துரைத்துக் கடிதம் எழுதுக.** PTA-3

குற்றாலம்,
20.02.2022.

அன்புள்ள நண்பா!

நலம், நலம் அறிய ஆவல். என்னைப் போன்றே நீயும் புத்தகம் படிப்பதில் ஆர்வம் மிகுந்தவன் என்ற வகையில் இக்கடிதத்தை எழுதுகிறேன். இ.ஆ.ப. அதிகாரியான வெ.இறையன்புவின் 'சந்தித்ததும் சிந்தித்ததும்' என்னும் நூலை அண்மையில் வாசித்தேன். இந்நூலில் "வாழ்வில் ஒவ்வொரு நாளும் பலவிதமான மனிதர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள ஏதாவது ஒரு விஷயம் இருக்கிறது" என்கிறார் இறையன்பு.

எளிய நடையில், ஆங்கிலத்தில் இனிய மேற்கோளுடன் 50 கட்டுரைகளாக அமைந்துள்ளது இந்நூல். படிக்க விறுவிறுப்பாகவும், படித்து முடித்தவுடன் புதிய தெளிவை அளிப்பதாகவும் அமைந்துள்ள இந்நூலை சக நண்பர்களுக்குப் பரிசளிக்கலாம். இச்சிறப்புமிகு நூலை நீயும் படித்துப் பயன் பெறுவாயாக!

இப்படிக்கு,
உன் அன்பு நண்பன்,
க. அகில்.

உறைமேல் முகவரி:

| |
|---|
| பெறுநர்<br>மு.முகிலன்,<br>52, கபிலர் நகர்,<br>திருநெல்வேலி. |

**9. ''பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல்'' - குறித்த செயல்திட்ட வரைவு ஒன்றை உருவாக்கி, அதனைச் செயல்படுத்தத் தலைமை ஆசிரியரின் ஒப்புதல் வேண்டி, தலைமை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.** **PTA-4**

அனுப்புநர்
மாணவர்கள்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
சென்னை - 18.

பெறுநர்
தலைமையாசிரியர் அவர்கள்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
சென்னை - 18.

ஐயா,

பொருள் : பள்ளித் தூய்மை குறித்த செயல் திட்ட வரைவு ஒப்புதல் வழங்கி செயல்படுத்த வேண்டுதல் - தொடர்பாக.

**வணக்கம்!**

நாங்கள் நம்பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்து வருகிறோம். நம் பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தலுக்கு தடையாக இருக்கும் காரணிகளைப் பற்றி ஆய்வு செய்து அதைச் செயல்திட்டமாக வடிவமைத்தோம். நீங்களும் பார்வையிட்டு, உங்கள் கருத்துகளையும் தங்களுக்கு வழங்கினால், அதையும் நாங்கள் செயல்படுத்தி நம் பள்ளியை 'தூய்மைப் பள்ளி'யாக மாற்ற உங்கள் ஒப்புதல் வழங்க வேண்டுகிறோம்.

நன்றி.

இடம் : சென்னை
நாள் : 01.07.2022

இப்படிக்கு,
மாணவர்கள்,
அரசு உயர்நிலைப்பள்ளி.

**10. உங்கள் பகுதியில் ஏற்பட்ட கடும்புயலில் சாய்ந்துவிட்ட மரங்களை அகற்றியும், பழுதுபட்ட சாலைகளைச் சீரமைத்தும், பழுதடைந்த மின்கம்பங்களைச் சரிசெய்தும் தருமாறு மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.** **PTA-5**

அனுப்புநர்
த. இலக்கியன்,
5, பாரதி நகர்,
சேலம் - 5.

பெறுநர்
மாநகராட்சி ஆணையர் அவர்கள்,
மாநகராட்சி ஆணையர் அலுவலகம்,
சேலம் - 1.

ஐயா,

பொருள்: கடும்புயலின் பாதிப்பிலிருந்து மீட்பு நடவடிக்கை வேண்டுவது - தொடர்பாக.

வணக்கம். கடந்த வாரம் வீசிய புயலினால் தெருவில் மரங்கள் எல்லாம் வீழ்ந்து விட்டன. நீர் தேங்கியதால் சாலைகள் மிக மோசமாகி, மின்சாரம் தடைப்பட்டு மக்கள் மிகவும் துன்பப்படுகின்றனர். ஆதலால் தயவு செய்து நேரில் ஆய்வு செய்து சரிசெய்து தருமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

சேலம்,
20.02.2022

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
த. இலக்கியன்.

உறைமேல் முகவரி:

பெறுநர்
மாநகராட்சி ஆணையர் அவர்கள்,
மாநகராட்சி ஆணையர் அலுவலகம்,
சேலம் - 1.

**11. பெருந்தொற்று ஏற்படுவதைத் தடுக்கத் தேவையான முன்னெச்சரிக்கைகளை விவரித்துச் சிற்றூரில் உள்ள உங்களது தாத்தா பாட்டிக்குக் கடிதம் ஒன்றை எழுதுக. MAY-22**

மயிலாடுதுறை,
22.06.2022.

அன்புள்ள தாத்தா பாட்டிக்கு,

நலம். நலமறிய ஆவல். கடந்த இரண்டு ஆண்டுகளாக பெருந்தொற்று (கொரோனா) பரவி மக்களை ஆட்டுவிக்கிறது. பொதுவாக வயதில் முதியவர்களைத்தான் அதிகம் பாதிக்கிறது. எனவே நீங்கள் இருவரும் மிகப் பாதுகாப்பாக இருப்பதுடன் கிருமி நாசினி, சோப்பு போன்றவற்றைப் பயன்படுத்துங்கள். கட்டாயம் முகக்கவசம் அணியுங்கள். நீரையும் உணவுப் பொருட்களையும் சூடாகவே பயன்படுத்துங்கள். தொற்றுக் குறைந்த பிறகு நான் நேரில் வருகிறேன்.

இப்படிக்கு,
உங்கள் அன்பு பேரன்,
வி. மிளிரன்.

உறைமேல் முகவரி:

| |
|---|
| பெறுநர்<br>வே. ஆனந்தன்,<br>72, நேரு நகர்,<br>சேலம் – 2. |

**12. நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றிற்கான மதிப்புரையினைக் குறிப்புகளைப் பயன்படுத்தி எழுதுக. PTA-5**

குறிப்பு: நூலின் தலைப்பு – நூலின் மையப்பொருள் – மொழி நடை – வெளிப்படுத்தும் கருத்து – நூலின் நயம் – நூல் கட்டமைப்பு – சிறப்புக்கூறு – நூல் ஆசிரியர்.

**நூலின் தலைப்பு:**

நமக்குள் சில கேள்விகள்.

**நூலின் மையப் பொருள்:**

நமக்குள் எழும் அறிவார்ந்த கேள்விகளுக்குப் பதிலளிப்பதாக இறையன்புவின் ஆளுமைமிக்க இந்நூல் அமைந்துள்ளது.

**மொழி நடை:**

அனைவருக்கும் ஏற்ற மொழி நடையுடன் எளிதில் பொருள் விளங்கும் வண்ணம் இந்நூலை யாத்துள்ளார் நூலாசிரியர்.

**வெளிப்படுத்தும் கருத்து:**

நூலில் உள்ள அனைத்துக் கேள்விகளும் பதில்களும் பயனுள்ளவையாக அமைந்து, எள்ளல் சுவையுடனும், ஆய்வின் முடிவாகவும், வாழ்வியல் சிந்தனைகளை உள்ளடக்கியதாகவும் திகழ்கின்றன.

**நூலின் நயம்:**

இறையன்பு, கேள்விகளைத் தனக்குத்தானே உருவாக்கி அதற்குத் தக்க பதில்களை அளிப்பதாக இந்நூல் நயம்பட அமைந்துள்ளது.

**நூல் கட்டமைப்பு:**

தன்னம்பிக்கை, சுய முன்னேற்றம், வாழ்வியல் சிந்தனைகள், நேர மேலாண்மை, மருத்துவம், ஆன்மீகம், வரலாறு, அறிவியல் என பல்துறை அறிவு சார்ந்த கட்டமைப்பாக இந்நூல் விளங்குகிறது.

## நிற்க அதற்குத் தக - வினா விடைகள்

**1. இன்சொற்களைப் பேசுவதனால் விளையும் நன்மைகள் ஐந்தினை எழுதுக.**

- இன்சொல் வழியில் பிறர்மனம் மகிழும்படி செய்வேன்.
- அறம் வளர்த்தால் புகழ் பெருகும் என்று நண்பரிடம் கூறுவேன்.
- நல்ல நண்பர்களுடன் சேர்வேன்.
- அன்புடன் நடந்து கொள்வேன்.
- பகைமை நீங்க இன்சொல் வழியில் நடந்து, அதையே நண்பருக்கும் வழிகாட்டுவேன்.

**2. புயல் அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.**

- புயலின் போது வெளியே செல்ல மாட்டோம்.
- தொலைபேசி மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்ப்போம்.

- வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பைக் கேட்டுப் பின்பற்றுவோம்.
- மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தளப் பகுதியிலேயே தங்குவோம்.
- வாகனத்தை ஓட்ட நேர்ந்தால் கடற்கரைப் பகுதிகளுக்குத் தொலைவிலும், மரங்கள் மின்கம்பிப் பாதைகள், நீர் வழிகள் ஆகியவற்றிலிருந்து விலகியும் வாகனத்தின் உள்ளேயே தங்கியிருப்போம்.

**3. பாரம்பரிய உணவு முறையே சிறந்தது என்பதற்கான 5 காரணங்களைக் குறிப்பிட்டு எழுதுக.**

- நம்முடைய பாரம்பரிய உணவு முறை உடல்நலத்திற்கு மிகவும் ஏற்றது.
- உணவை மருந்தாகக் கொண்டால் மருந்தை உணவாகக் கொள்ள வேண்டியதில்லை.
- கீரைவகைகள் உடல்நலத்திற்குச் சத்துகளை நிரம்பத் தருகிறது.
- நாச்சுவை கருதி உண்ணும் துரித உணவுகளால் உடல்நலம் கெடுகிறது.
- நம் நாட்டுச் சூழலுக்கேற்ற உணவுகளை உட்கொள்வதே நலம்.

**4. எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கின்ற உங்கள் நண்பர்கள், உறவினர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியல் இடுக.**

- குழுவாக ஓடியாடும் விளையாட்டுகளில் ஈடுபடச் செய்வேன்.
- தமிழகத்தின் பாரம்பரிய விளையாட்டுகளான பல்லாங்குழி, பரமபதம் போன்றவற்றையும் விளையாடச் செய்வேன்.
- பெரியோர்களிடம் உட்கார்ந்து நீதிக்கதைகளைக் கேட்கச் செய்வேன்.
- உலக நடப்புகளைக் கலந்துரையாடச் செய்வேன்.
- உடற்பயிற்சியிலும் யோகாவிலும் ஈடுபடச் செய்வேன்.

**5. பள்ளியில் நான், வீட்டில் நான் - என்னும் தலைப்புகளில் நீங்கள், பள்ளியிலும் வீட்டிலும் நடந்து கொள்ளும் முறைகள் ஐந்தினைப் பட்டியலிடுக.** **PTA- 4, AUG-22**

| பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|
| நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன். | வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து செய்வேன். |
| உடன்பயிலும் மாணவரின் திறமையைப் பாராட்டுவேன். | **வீட்டுக்கான பொருள்களை வாங்க கடைக்குச் செல்வேன்.** |
| **மெல்லக் கற்கும் நண்பர்களுக்குப் பாடம் கற்பதில் உதவி செய்வேன்.** | **பெற்றோரின் சொல்பேச்சைத் தட்டமாட்டேன்.** |

**6. நிகழ்கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேன்மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்ய விரும்பியனவற்றை வரிசைப்படுத்துக.**

- பிறந்த நாள் விழாக்களில் மயிலாட்டம் முதலான கலைகளை நிகழ்த்த முனைவேன்.
- எங்கள் குடும்ப விழாக்களில் பொம்மலாட்டம் நிகழ்த்த ஏற்பாடு செய்வேன்.
- எங்கள் ஊர்த்திருவிழாவில் கரகாட்டம், காவடியாட்டம் முதலிய கலைகள் இடம்பெறச் செய்வேன்.
- நிகழ்கலையைப் பாதுகாக்க பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க அரசினை வலியுறுத்திக் கையெழுத்து இயக்கம் நடத்துவேன்.
- சேவை அமைப்புகள் வாயிலாக நிகழ்கலையில் ஈடுபடும் கலைஞர்களுக்கு விருதளித்து, பொருளாதார அளவிலும் உதவுவேன்.
- வருங்காலத்தில் ‘நிகழ்கலைகள்’ குறித்த நூல் ஒன்றினை எழுத உள்ளேன்.

**7. நம் பழம்பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்களான கல்வெட்டுகள், கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் காணப்படும். அவற்றைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் உங்களால் இயன்ற ஐந்து செயல்களைப் பட்டியலிடுக.** **PTA-1**

- கல்வெட்டுகளின் வழி அறியலாகும் செய்திகளை என் நண்பர்களுக்குக் கூறுவேன்.
- கல்வெட்டுகளைக் குறித்து அவர்களைப் பெருமிதம் அடையச் செய்வேன்.
- கல்வெட்டுகளின் வழியாகப் பண்டைய வரலாற்றை அறியச் செய்வேன்.
- அவற்றின் மதிப்பைக் குறைக்கும்படி எதுவும் கூற அனுமதிக்கமாட்டேன்.
- கல்வெட்டில் குறிப்பிடப்படும் மன்னர்களின் வாழ்வினைப் பின்பற்றி, புகழ்பட வாழ்தலின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பேன்.

**8. இதுகாறும் கற்ற அறங்கள் நமக்குக் கைகொடுக்கும் நிலையில், நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் பட்டியலிடுக.** **PTA-2**

- நல்ல சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பேசினால், நல்ல நண்பர்களைப் பெறலாம்.
- ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் மாற்றிப் பேசாதிருந்தால், எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை.
- பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிட்டால், எதிரியையும் நண்பனாக்கலாம்.
- நேர்மையுடன் வாழ்ந்தால், வாழ்வில் உயரலாம்.
- அனைவரிடத்தும் அன்பு காட்டினால், மனிதநேயம் வளரும்.

**9. நீங்கள் செய்த, பார்த்த உதவிகளால் எய்திய மனநிலைகள் ஐந்தினைக் குறிப்பிட்டு எழுதுக.**

| உதவி | மனநிலை |
|---|---|
| வகுப்பறையில் எழுதுகோல் கொடுத்து உதவிய போது. | இக்கட்டான சூழலில் செய்த உதவியால் எனக்கு மனநிறைவு; அவருக்கு மகிழ்ச்சி. |
| உறவினருக்கு என் அம்மா பணம் அளித்து உதவிய போது. | கல்லூரிப் படிப்பைத் தொடர முடிந்ததால் உறவினருக்கு ஏற்பட்ட நன்றியுணர்வு. |

| | |
|---|---|
| பிறந்தநாளின்போது முதியோர் இல்லத்திற்கு உணவு வழங்கியபோது. | மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. |
| விபத்தில் சிக்கியவருக்கு என் நண்பன் குருதித் தானம் வழங்கியபோது. | பெருமித உணர்வு உண்டானது. |
| பார்வையற்றவரைச் சாலையைக் கடக்க உதவியபோது. | என்னுள் மனிதத்தன்மையை உணர முடிந்தது. |

10. **தூய்மையான காற்றைப் பெறுவதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளாக நீங்கள் கருதுவனவற்றை ஐந்து தொடர்களில் பட்டியலிடுக.** PTA-3

- காற்றில்லாமல் மனித உயிர் வாழ முடியாது. எனவே காற்றை மாசடையச் செய்யும் செயல்களை விடுத்தால் தூய காற்றைப் பெறலாம்.
- தூய காற்றைப் பெற அதிகமான மரங்களை வளர்க்க வேண்டும்.
- காற்றை மாசுபடுத்தும் தொழிற்சாலைப் புகைகளை சுத்திகரித்து வெளிவிட்டால் தூய காற்றைப் பெறலாம்.
- நெகிழிகளைஎரிக்காமல்மறுசுழற்சிக்குப்பயன்படுத்தினால் தூய காற்றைப் பெறலாம்.
- தனிமனித வாகனங்களைக் குறைத்துக் கொண்டால் தூய காற்றைப் பெற முடியும்.

## காட்சியைக் கண்டு கவினுற எழுதுதல் (அ)

## படம் உணர்த்தும் கருத்தைத் தொடர்களில் எழுதுதல்

1. **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.** PTA-1



பூங்காற்று செல்லாத பூட்டிய வீடதனாய்
புற்றாய்ச் சிதைந்திடும் பூட்டிய சிந்தையது
பூமழையில் விழித்தெழும் பசுமையாய்
புத்துணர்வில் துளிர்த்திடும் கற்றிடும்
புத்தகத்தின் அறிவொளிய தனாலே.

**2. காட்சியைக் கண்டு கவினுற கவிதை ஒன்றை எட்டு வரிகளில் எழுதுக.** **PTA-5**



இயற்கையின் நினைவிழந்து
இறுமாப்பதனில் சுயமிழந்து
செயற்கை வாழ்வென்னும்
சேற்றினில் மூழ்கியெழும் மானிடா
செயற்கை சுவாசக் கருவியையும்
சேர்த்தே சுமந்திடுவாய் நாளை!
இயற்கையோடு இணைந்தே வாழ்ந்திடு
இன்னலின்றி உலகை வென்றிடு!

**3. படம் உணர்த்தும் கருத்தை ஐந்து தொடர்களில் எழுதுக.**



**PTA-2**

- நமக்குத் தெரிந்த நல்ல வழிகளை மற்றவர்களுக்குத் தெரிவிப்பதே ஆற்றுப்படுத்தல்.
- குழு மற்றும் தனிநபர் வழிகாட்டுதல் இன்றைக்கு மிக முக்கியமானது.
- கல்வி நிலையங்களிலும் தொழிற்சாலைகளிலும் இளந்தலைமுறைக்கு வழிகாட்டுதல் மிக தேவையான ஒன்றாகும்.
- யாம் பெற்ற இன்பம் பெறுக எல்லோரும் என்ற தாராள மனநிலை நாம் அனைவரும் பெறுதல் நலம்.
- வாய்ப்புத் தேடுவோருக்கு வழிகாட்டுதல் இன்று அதிகம் தேவை.

**4. படம் உணர்த்தும் கருத்தை கவினுற எழுதுக.** **SEP-21**



பசித்தோருக்கு உணவிடல் தமிழர் பண்பாடு – அதை
வறியோருக்குக் கொடுத்து புன்னகையைக் கண்டிடு!
இல்லாமை அகற்றுவது இனிய அறம் – இதுவே
இவ்வுலகம் ஏற்கவேண்டிய நல்லறம்!
பசிப்பிணிப் போக்கும் பகலவனாய் – நீ
பாரினில் ஒளிவீசி மகிழ்ந்திடு!

5. **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.** **AUG-22**



தானம் செய்திட
தனம் தேவையில்லை
மனம் இருந்தால் போதும்
மார்க்கம் பல உண்டு
இன்பம் கோடி உண்டு
இன்னல் பல நீங்கும் என்றும்

6. **காட்சியைக் கண்டு எட்டு வரிகளில் கவினுற கவிதை ஒன்று எழுதுக.** **PTA-3**



ஏழாம் அறிவாய்ப் பிறந்து
ஆறாம் விரலாய் வளர்ந்து
ஐம்பூதம் போல் நிறைந்து
நாற்றிசையும் அடக்கியாளும்
அலைபேசி அரக்கனுடனே
அலைகின்றோம் கிறுக்கராய்....
தொடுதிரையில் தொலையாமல்
தொடுவானமாய் கல்வியைப் போற்றிடு!


7. **படம் உணர்த்தும் கருத்தை ஐந்து தொடர்களில் விளக்கி எழுதுக.** **PTA-4**



- மனிதன் ஒரே இடத்தில் வாழ்ந்தாலும் அவன் மற்றவர்களைப் பற்றிக் கவலை கொள்வதில்லை.

- திறன்பேசியின் வாயிலாக உலகம் உள்ளங்கையில் இருந்தாலும் உள்ளதால் அவர்கள் இணைக்கப்படவில்லை.
- பிறர் சொல்வதைக் கேட்பதற்கோ நற்கருத்துகளை வழங்குவதற்கோ போதிய ஆளில்லை.
- குழந்தைகள் உடலை வருத்தும் விளையாட்டை விடுத்து திறன்பேசியில் விளையாடும் விளையாட்டுகளையே விரும்புகின்றனர்.
- ஒரே குடும்பமாய் உடலாலும் உள்ளத்தாலும் வாழ வேண்டியதன் அவசியத்தை இப்படம் உணர்த்துகிறது.

**8. காட்சியைக் கவிதையாக்குக.**



தாய் பூமி மானம் காத்த
தாவர இனத்தை எல்லாம்
தினம் ஒன்றாய்த் துகிலுரித்து
திறந்தவெளி ஆக்கிவிட்டு
காகிதத்தில் காண்கின்றோம்...
காட்சிப் பொருளாய்
மரத்தினையே...

**9. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



கட்டிய வெள்ளை வேட்டி கசங்காமல்
கொட்டிடும் பானைத்தாளம் பிறழாமல்
காலோடு கால்சலங்கை உரசாமல்
கைப்பிடித் துணியது தவறாமல்
மந்தையில் ஆடிடும் ஒயிலாட்டம்
மகா கதைகளைப் பாடிடுமே...


**10. படம் உணர்த்தும் கருத்தை ஐந்து தொடர்களில் வெளிப்படுத்துக.** PTA- 6



- கண்ணுக்குக் காட்சியையும் சிந்தைக்குக் கருத்தினையும் தருபவை கலைகள்.
- சிற்றூர் மக்கள் வாழ்வோடு இணைந்தவை நிகழ்கலைகள்.
- சமூகப் பண்பாட்டுத்தளத்தின் கருத்துக் கருவூலமாக இக்கலைகள் விளங்குகின்றன.

- கலைகள் மக்களின் வாழ்வியலைக் காட்டும் கண்ணாடி போன்றது.
- கற்றோராலும் மற்றோராலும் விரும்பப்படும் கலைகளை நாமும் காப்போம்.

**11. படம் தரும் செய்தியைப் பத்தியாகத் தருக.**




பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடி வீறுகொண்டு போருக்குச் செல்கின்றனர். காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை என்னும் முப்படைகளும் பகைவர் நாட்டைக கைப்பற்ற முன்னேறி செல்கின்றன. இத்தகு அழகியதோர் காட்சி திருநெல்வேலி, திருப்புடைமருதூரில் 17-ஆம் நூற்றாண்டில் சுவரோவியமாகத் தீட்டப்பட்டுள்ளது.

**12. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



உள்ளத்தை விதையாக்கு
உறுபசியில் நெல்லாக்கு
அன்னத்தை உலகிற்கு
அள்ளித்தினம் தந்து
இல்லத்தில் களிப்பூட்டி
இன்பத்தை நமக்களித்து
காலமெல்லாம் கரைந்திடும்
மெழுகெனவே
கால்வயிற்றுப் பசியோடு
கனியுழவன் வாழ்வதுவே...

**13. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



அடுத்தவர் குருதியைக் குடித்து
அவனியில் வலமிடும் கிருமி
கொடுப்பவர் கரத்தினைத் தடுத்து
கொள்ளைகள் செய்திடும் கருமி
விடுத்திடு இழிந்த குணத்தை
விரும்பிடு அறம்செயும் மனத்தை

**14. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.** **PTA-1**



பட்டினியால் பரிதவித்து வாழ்வோரைப்
பரிதாப்படுவதாய் நடித்தங்கு
பரிகாசமாய் உதவி செய்ததைப்
படம்பிடித்து புகழ்தனைத் தேடிடுவோர்
பாரினில் மிகக் கொடியவர் ஆவாரே...

**15. மெல்லக் கற்கும் மாணவர்களுக்காக....**

**குறிப்பு: எந்தப் படம் கேட்டாலும்..**

காட்சியைக் கண்டேன்
கவினுற எழுத நினைத்தேன்
கண்களைக் கவரும் காட்சி
கருத்தினை ஈர்க்கும் மாட்சி
மாற்றம் நோக்கும் படம்
மனித வாழ்விற்கான பாடம்
புதுமைகள் நோக்குவோம்
பூமிதனைப் புதுமையாக்குவோம்

## படிவங்கள் நிரப்புதல்

**1. நூலக உறுப்பினர் படிவம்.** **PTA-3,4**

**நூலக உறுப்பினர் படிவம்**

**விருதுநகர்** மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய ✓ / கிளை / ஊர்ப்புற நூலகம் **விருதுநகர்**

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண்: **432** உறுப்பினர் எண்: **234**

| | | |
|---|---|---|
| 1. பெயர் | : | **க. நந்தினி** |
| 2. தந்தை பெயர் | : | **ம. கணேசன்** |
| 3. பிறந்த நாள் | : | **15.06.2007** |
| 4. வயது | : | **16** |
| 5. படிப்பு | : | **பத்தாம் வகுப்பு** |
| 6. தொலைபேசி/அலைபேசி எண் | : | **9994142883** |
| 7. முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) | : | **326, திரு.வி.க. நகர், விருதுநகர்-626005.** |

நான் **க. நந்தினி** நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ₹ **30** சந்தா தொகை ₹ **6** ஆக மொத்தம் ₹ **36** செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.
இடம் : விருதுநகர்
நாள்: 29.7.2022 தங்கள் உண்மையுள்ள,
*க.நந்தினி.*

திரு / திருமதி / செல்வி ✓ / செல்வன் **நந்தினி** அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச்சான்று அளிக்கிறேன்.

**நளினி,**
பிணையாளர் கையொப்பம்.
அலுவலக முத்திரை (பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)

**2. மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பப் படிவம்** **PTA-2,6**

**மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பப் படிவம்**

சேர்க்கை எண்: 1106 நாள்: 01.07.2022 வகுப்பும் பிரிவும்: XI அ

| | | |
|---|---|---|
| 1. மாணவரின் பெயர் | : | **வெ. குணசேகரன்** |
| 2. பிறந்த நாள் | : | **29.03.2007** |
| 3. தேசிய இனம் | : | **இந்தியன்** |
| 4. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் | : | **ச. வெற்றிச்செல்வன்** |
| 5. வீட்டு முகவரி | : | **வீட்டு எண்: 21, வ.உ.சிதம்பரனார் தெரு, கரூர்.** |
| 6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு | : | **பத்தாம் வகுப்பு** |
| 7. பயின்ற மொழி | : | **தமிழ் வழி** |
| 8. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு | : | **அரசினர் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு.** |

9. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :

| தேர்வின் பெயர் | பதிவு எண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| **பள்ளிக்கல்வி இடைநிலைக் கல்விச் சான்றிதழ் (எஸ்.எஸ்.எல்.சி)** | **73265 / 2022** | தமிழ் | **81** |
| | | ஆங்கிலம் | **78** |
| | | கணிதம் | **91** |
| | | அறிவியல் | **90** |
| | | சமூக அறிவியல் | **92** |
| | | மொத்தம் | **432** |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? : **ஆம்**

11. தாய்மொழி : **தமிழ்**

12. சேரவிரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் : **கணித உயிரியல் - தமிழ் வழி**

மாணவ / மாணவியின் கையெழுத்து

*வெ. குணசேகரன்*

**3. எழுத்தர் பணியினை வேண்டி, வேலைவாய்ப்பிற்காக, கொடுக்கப்பட்ட தன்விவரப் பட்டியலைப் பூர்த்தி செய்க.**

**PTA-5, SEP-20, AUG-22**

**பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புதல்**

1. பெயர் : **க. நகுல்**
2. பாலினம் : **ஆண்**
3. பிறந்த நாள் மற்றும் வயது : **01.04.2000, 22**
4. தேசிய இனம் : **இந்தியன்**
5. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் : **கா. கதிரவன்**
6. வீட்டு முகவரி : **15, இளங்கோ நகர், மதுரை-4**
7. தொலைபேசி/அலைபேசி எண் : **9998887766**
8. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் : **454**

| | | | |
|---|---|---|---|
| 9. | தாய்மொழி | : | **தமிழ்** |
| 10. | பயின்ற மொழிகள் | : | **தமிழ், ஆங்கிலம்** |
| 11. | தட்டச்சு | : | **உயர்நிலை** |
| 12. | கணினி | : | **பி.சி.ஏ** |

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் உண்மையென உறுதிகூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் தட்டச்சர் பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : மதுரை
நாள் : 20.05.2022

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
க. நகுல்.

**4. கடலூர் மாவட்டம், பாரதியார் நகர், கம்பர் தெருவிலுள்ள 112ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் நிலவனின் மகள் பூங்குழலி, நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் படிக்கிறார். அவர் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கால்பந்து விளையாட்டில் பயிற்சி பெற விரும்புகிறார். தேர்வர், தம்மை பூங்குழலியாகக் கருதி, கொடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் சேர்க்கைப் படிவத்தை நிரப்புக.** **SEP-21**

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | மாணவரின் பெயர் | : | **பூங்குழலி** |
| 2. | பாலினம் | : | **பெண்** |
| 3. | பிறந்த தேதி | : | **10-09-2007** |
| 4. | தேசிய இனம் | : | **இந்தியன்** |
| 5. | இரத்த வகை | : | **ஏ$^{+}$** |
| 6. | உயரம் மற்றும் எடை | : | **156 செ.மீ** |
| 7. | பெற்றோர்/பாதுகாவலர் பெயர் | : | **நிலவன்** |
| 8. | வீட்டு முகவரி | : | **112, கம்பர் தெரு,<br>பாரதியார் நகர்.<br>கடலூர் மாவட்டம்.** |
| 9. | தொலைபேசி/அலைபேசி எண் | : | **98765 43210** |

10. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு : **பத்தாம் வகுப்பு**
11. பள்ளியின் முகவரி : **நகராட்சி மேல்நிலைப்பள்ளி, கடலூர்.**
12. சேர விரும்பும் விளையாட்டு : **கால்பந்து**
சேர்க்கை எண் : **123**

*நி. பூங்குழலி*
இடம் : **கடலூர்** மாணவரின் கையெழுத்து
தேதி : **22.07.2022** **நிலவன்**
பெற்றோர்/பாதுகாவலரின் கையெழுத்து

**மொழிபெயர்க்க**

**1. மொழிபெயர்க்க:** **PTA-2, SEP-21**

1. If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart – Nelson Mandela.
**நீங்கள் ஒரு மனிதனிடம் ஏதாவது ஒரு மொழியில் பேசினால் அதை அவன் புரிந்து கொள்வது அவன் மூளைக்குச் செல்கிறது. ஆனால் அவனுடைய மொழியில் பேசினால் அது அவன் நெஞ்சத்தைத் தொடும் – நெல்சன் மண்டேலா.**

2. Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going – Rita Mae Brown.
**மொழியே கலாச்சாரத்தின் வழிகாட்டி. அதுவே மக்கள் எங்கிருந்து வந்தார்கள். எங்குப் போகிறார்கள் என்பதைச் சொல்லும். – ரிட்டா மே பிரவுண்.**

**2. மொழிபெயர்க்க:** **MAY-22**

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

### இயற்கை

பொன்னான சூரியன் தினமும் காலையில் எழுந்து அதன் ஒளிக்கதிர்களை வீசி இருளை மறையச் செய்யும். பால் போன்ற மேகங்கள் சுற்ற ஆரம்பித்துவிடும். வண்ணப் பறவைகள் இதமான சூழ்நிலையை தன் இறகுகளை அடிப்பதன் மூலம் உருவாக்கும். அழகான வண்ணத்துப் பூச்சி மலர்களைச் சுற்றி ஆடும். பூக்களின் நறுமணம் காற்றை நிரப்பும். அந்தக் காற்று அனைத்து இடங்களிலும் பரவி ஒரு மகிழ்வான சூழ்நிலையை உருவாக்கும்.

3. **மொழிபெயர்க்க:** **PTA-5**

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years age. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel pround about our culture. Thank you on and all.

### தமிழ் கலாச்சாரம்

மரியாதைக்குரியவர்களே! என் பெயர் இளங்கோவன். நான் பத்தாம் வகுப்பில் படிக்கிறேன். நான் தமிழ் கலாச்சாரத்தைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல வந்திருக்கிறேன். இரண்டாயிரம் வருடத்திற்கு முன் கலாச்சாரத்திலும், நாகரிகத்திலும் சிறந்து விளங்கியவர்கள் தமிழர்கள் என்று சங்க இலக்கியம் கூறுகிறது. மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழரே வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்தனர். தமிழர்களின் கலாச்சாரம் இந்தியா, ஸ்ரீலங்கா, இங்கிலாந்து, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் உலகமெங்கும் உள்ள தமிழர்களின் வாழ்க்கைத்தரத்தில் வேரூன்றி உள்ளது. நம் கலாச்சாரம் பழமையானதாக இருந்தாலும் அது சீரான முறையில் மேம்பட்டுள்ளது. நாம் நம் கலாச்சாரத்தைப் பற்றி பெருமிதம் கொள்ள வேண்டும். அனைவருக்கும் நன்றி!

**4. மொழிபெயர்க்க:** **PTA-6**

Malar : Devi, switch off the lights when you leave the room.
Devi : Yeah, we have to save electricity.
Malar : Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.
Devi : Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!
Malar : I have read some other countries are going to lunch these types of illumination satellites near future.
Devi : Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power.

மலர் : தேவி, நீ அறையை விட்டு வெளியே செல்லும் முன் விளக்கை அணைத்துவிடு.
தேவி : ஆம், நாம் மின்சாரத்தைச் சேமிக்க வேண்டும்.
மலர் : நம் நாடு தெரு விளக்குகளை எரிய வைப்பதற்கு நிறைய மின்சாரத்தைச் செலவு செய்கிறது.
தேவி : யாருக்குத் தெரியும்? வருங்காலத்தில் நம் நாடு செயற்கை நிலாவை நிறுவி இரவில் வானத்தில் விளக்குகளை எரிய வைக்கலாம்.
மலர் : வருங்காலத்தில் நிறைய நாடுகள் இவ்வகையான செயற்கைக்கோளை நிறுவ இருப்பதாக நான் வாசித்துள்ளேன்.
தேவி : நல்ல செய்தி! நாம் செயற்கை நிலவை நிறுவினால் அது பேரழிவு மற்றும் மின்சாரம் இல்லாத சமயத்தில் ஒளியூட்டி நிவாரண உதவிகளை செய்ய வழி செய்கிறது.

**5. மொழிபெயர்க்க.** **PTA-3**

| | |
|---|---|
| <u>யாழிசை</u> | <u>It's like new lute music</u> |
| அறைக்குள் யாழிசை | Wondering at the lute music |
| ஏதென்று சென்று | Coming from the chamber |
| எட்டிப் பார்த்தேன் | Entered I to look up in still |
| பேத்தி, | My grand–daughter |
| நெட்டுருப் பண்ணினாள் | Learning by rote the verses – |

| | |
|---|---|
| நீதிநூல் திரட்டையே | of a didactic compilation |
| - பாரதிதாசன் | -Translated by Kavingnar Desini |

அ. Lute Music - யாழிசை
ஆ. Grant-daughter - பேர்த்தி
இ. To look up - எட்டிப் பார்
ஈ. Rote - நெட்டுரு
உ. Didactic compilation - நீதிநூல் திரட்டு

6. **மொழிபெயர்க்க.** **PTA- 4, SEP-20**

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was the fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

பண்டைய சங்க இலக்கிய காலத்தில், பூகோள அடிப்படையில் (நில அமைப்புப்படி) தமிழ்நாடு ஐந்து வகையாக இருந்தது. அவற்றுள் மருத நிலப்பகுதியே உழவுத் தொழிலுக்கு ஏற்றதாய் இருந்தது. அந்த நிலப்பகுதியில் விவசாயிகள் (உழவர்கள்) பயன்பெறும் வகையான தேவையான பருவ காலங்கள் சிறந்திருந்தது. தேவையான சூரிய வெப்பம், வளமான நிலம், போதுமான அளவு மழையும் இருந்தது. அதனால் விவசாயம் செழித்தது. மருத நிலத்தின் இயற்கைக் கூறுகளாலும், போதுமான சூரிய வெப்பத்தினாலும் பழந்தமிழகத்தில் மருதநிலத்தில் உழவுத்தொழில் சிறந்திருந்தது.

7. **மொழிபெயர்க்க.** **AUG-22**

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

### கூத்து

தெருக்கூத்து அதன் பெயருக்கு ஏற்றாற்போல் தெருவில் நடக்கும் ஒரு மிகச் சிறந்த கலை. இதில் கிராமப்புற கலைஞர்கள் பங்கேற்கிறார்கள். இதன் கதைகள் பழங்காவியமான ராமாயணம் மகாபாரதம் மற்றும் பழைய புராணங்களில் இருந்து எடுக்கப்படுகிறது. இதில் பழைய பாடல்களை உரையாடலுடன் கலைஞர்கள் உருவாக்குகிறார்கள். பதினைந்து முதல் இருபது கலைஞர்கள் சிறிய இசைக்குழுவாக சேர்ந்ததுதான் தெருக்கூத்து. கலைஞர்கள் தங்கள் குரலிலேயே பாடுவார்கள். கலைஞர்கள் மிகச் சிறந்த உடையலங்காரமும் ஒப்பனையும் செய்திருப்பர். கிராமப்புறங்களில் கூத்துமிகவும் பிரபலமானது.

**8. மொழிபெயர்க்க.**

1. Education is what remains after one has forgotten what one has learned in School – Albert Einstein.
   ஒரு பள்ளியில் கற்றுக்கொண்டதை மறந்து விட்டால், பள்ளியில் கற்ற கல்வியினால் பயன் என்னே - ஆல்பிரட் ஐன்ஸ்டீன்.

2. Tomorrow is often the busiest day of the week – Spanish Proverb.
   இவ்வாரத்தில் நாளை ஒருநாள் மட்டுமே அதிக வேலைப்பளு உள்ளது - ஸ்பானிஷ் பழமொழி.

3. It is during our darkest moments that we must focus to see the light – Aristotle
   நம் இருண்ட தருணங்களிலும் ஒளியைப் பார்ப்பதையே நோக்கமாகக் கொள்ள வேண்டும் - அரிஸ்டாட்டில்.

4. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts. – Winston Churchill.
   வெற்றி என்பது முடிவல்ல, தோல்வி என்பதும் விதியல்ல. இரண்டுக்காகவும் தொடர்ந்து முயற்சியுடனும் ஊக்கத்துடனும் செயல்படுவதே எண்ணப்படும் - வின்ஸ்டன் சர்ச்சில்.

**வி.எண்: 43-45** 24 மதிப்பெண்கள்

## பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

**குறிப்பு:** 3×8=24

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.**

## வினா எண்: 43 - உரைநடை வினாக்கள்

**1. தமிழின் சொல்வளம் பற்றியும் சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.** **PTA-3 MAY-22**

அனைவருக்கும் வணக்கம்!

**தமிழின் சொல்வளம்:**

- சொல்வளம் இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவேனும், தமிழ் மட்டும் அதில் தலைசிறந்தது.
- பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள்ளன என்கிறார் கால்டுவெல்.
- தமிழில் இலைகளைப் பாகுபாடு செய்வதற்கு அவற்றின் வன்மை, மென்மை பற்றித் தாள், இலை, தோகை, ஓலை எனக் கூறுதல்.
- சம்பா நெல்லில் அறுபது வகைகள் உண்டு.

**புதிய சொல்லாக்கத்திற்கான தேவை:**

- ஒரு மொழிக்கு அறிமுகமாகும் புதிய கண்டுபிடிப்புகள் அல்லது சிந்தனையை விளக்கிடப் புதுசொல் படைக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது.
- இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கேற்ப நூல்களைப் புதிய சொல்லாக்கத்துடன் படைத்தல் வேண்டும்.
- காலமாற்றத்திற்கு ஏற்றவகையில் தன்னை மாற்றிக் கொண்டு புதிய சொல்லாக்கங்களை உருவாக்கிக் கொள்ளும் மொழியே தொடர்ந்து நிலை நிற்கும்.
- பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்தால் தமிழின் இனிமை குறையும். அத்துடன் தமிழ்ச்சொற்கள் நாளடைவில் மறைந்து பிறமொழிச் சொற்களே நிலைபெற்றிடும். அதனால் தமிழில் புதிய சொல்லாக்கம் தேவை.

- மொழியின் வாயிலாக கலாச்சாரத்தை நிலைநாட்ட புதிய சொல்லாக்கம் தேவை.
- மக்களிடையே பரந்த மனப்பான்மையையும் விரிவான ஆளுமையையும் நிலைநாட்ட புதிய சொல்லாக்கம் தேவைப்படுகிறது.

**2. காற்று பேசியதைப் போல், நிலம், நீர், வானம் பேசுவதாகவும் அவை இன்றைய சுற்றுச்சூழல் பாதுகாப்பினை வலியுறுத்துவ தாகவும் ஓர் உரையாடல் அமைக்க.** **PTA-5**

நிலம் : மனிதன் என்மேல் நிற்பதால் அவனை சுமையாக நான் ஒருபோதும் நினைத்ததில்லை.

நீர் : "தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே" என்பார்கள். நான் எப்போதும் மனிதர்களின் தாகம் தீர்க்கவே விரும்புகிறேன்.

வானம் : மனிதனுக்குக் குடையாக இருந்து சூரியனின் சுடர் ஒளியிலும் அதன் வெப்பத்திலிருந்தும் மனிதனை காக்கின்றேன்.

நிலம் : மனிதன் பயன்படுத்தும் மக்காத நெகிழிகளாலும் செயற்கை உரங்களாலும் நான் பலவீனப்படுத்தப் படுகின்றேன்.

நீர் : செயற்கை உரங்களும், தொழிற்சாலைக் கழிவுகளும் என்னை மாசுபடுத்தி நஞ்சாக மாற்றுகின்றன.

வானம் : தேவையற்ற பொருட்களை எரிப்பதால் நானும் மாசடைகின்றேன்.

நிலம் : நான் காயப்பட்டாலும் என்னை நம்பி வாழ்கின்ற மக்களுக்கு உணவு உற்பத்தி செய்வதை நான் ஒருபோதும் நிறுத்தமாட்டேன்.

நீர் : மக்களுக்கு உணவாகவும் உணவை உற்பத்தி செய்யவும் நான் எப்போதும் உறுதுணையாக இருப்பேன்.

வானம் : நஞ்சு கலந்த காற்றை மாசு நீக்கப்பட்ட காற்றாக மாற்றி மனிதனுக்கு உதவுவேன்.

**3. விருந்தோம்பல் அன்றும்-இன்றும் என்ற தலைப்பில் பதினைந்து வரிகளுக்கு மிகாமல் எழுதி, மாற்றத்திற்கான காரணத்தை உன் சொந்த நடையில் விளக்குக.**

- சங்க காலத்திலிருந்தே அரசராயினும் வறியோராயினும் விருந்தினர்களைப் போற்றினர்.
- கால மாற்றத்தில் புதியவர்களாகிய விருந்தினர்களை வீட்டுக்குள் அழைத்து உணவிடுவது குறைந்தது.
- விருந்து புரப்பது குறைந்ததால் சத்திரங்கள் பெருகின.
- நாயக்கர் மராட்டியர் ஆட்சிக் காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச் செல்வோர்க்காகக் கட்டப்பட்டன.
- புதியவர்களான விருந்தினர்களை ஏற்பது குறைந்துவிட்ட காலத்தில், ஓரளவு தெரிந்தவர்களை மட்டுமே விருந்தினர்களாக ஏற்றனர்.
- படிப்படியாக உற்றார் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோரையே விருந்தினர்களாகப் போற்றும் நிலைக்கு மாறினர்.
- புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர் முன்னோர்.
- இன்று வீட்டுக்குத் திண்ணை வைத்துக் கட்டுவதுமில்லை; அறிமுகமில்லாத புதியவர்களை விருந்தினர்களாக ஏற்பதுவும் இல்லை.
- திருமணத்தை உறுதி செய்தல், திருமணம், வளைகாப்பு, பிறந்தநாள், புதுமனை புகுவிழா போன்றவற்றை இல்ல விழாக்களாகவே கொண்டாடினர்.
- காலப்போக்கில் வீட்டில் நடைபெற்ற விழாக்கள் திருமணக்கூடங்களுக்கு இடம்பெயர்ந்து விட்டன.
- பண்பாட்டு மாற்றமாக இன்று சில இடங்களில் விருந்தினர்களை வரவேற்பது முதல் பந்தியில் உபசரித்து வழியனுப்பும் வரை 'திருமண ஏற்பாட்டாளர்' செய்யும் விருந்தோம்பல் நடைபெறுவதைக் காணமுடிகிறது.
- நாகரிக மாற்றமும், தற்கால விரைவான வாழ்க்கைச் சூழலும் பல்வேறு மாற்றங்களைத் தமிழர் விருந்தோம்பலில் மாற்றங்களை உண்டாக்கியுள்ளது.
- நகரமயமாதல், பணிச்சூழல் போன்றவையும் தமிழர் விருந்தோம்பல் பண்பாட்டில் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கின்றன.

**4. ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறைகொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் ''செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்'' பற்றி ஒரு கட்டுரை எழுதுக.** **PTA-2**

**முன்னுரை:**

உயிரினங்களில் மனிதரை உயர்த்திக் காட்டுவது அவர்களின் சிந்தனை ஆற்றலே ஆகும். அந்தச் சிந்தனைக்குத் தொழில்நுட்பமும் துணை செய்கிறது. அந்த வகையில் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**வேலை வாய்ப்பு:**

வேலை வாய்ப்புகளில் கணிசமான மாற்றங்களைச் செயற்கை நுண்ணறிவு கொண்டுவரப் போகிறது.

**இல்லங்கள்:**

எதிர்காலத்தில் 'ரோபோ' விடம் குழந்தையை ஒப்படைத்து விட்டு நிம்மதியாக அலுவலகம் செல்லும் பெற்றோர்களைக் காணும் வாய்ப்பு உள்ளது. வயதானவர்களுக்கு உதவிகள் செய்தும் அவர்களுக்கு உற்ற தோழனாய்ப் பேச்சுக் கொடுத்துப் பேணும் ரோபோக்களையும் காணும் நிலை ஏற்படலாம்.

**ஊர்திகள்:**

எதிர்காலத்தில் நாம் பயணிக்கும் ஊர்திகளைச் செயற்கை நுண்ணறிவைக்கொண்டு இயக்க வேண்டியிருக்கும்.

**கல்வித்துறை:**

கல்வித்துறையில் செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பம் எல்லாவிதமான கலைகளையும் அறிவையும் தந்து எண்ணத்தை விசாலமாக்கும்.

**மருத்துவம்:**

மனித இனத்தைத் தீங்குகளிலிருந்து காப்பாற்றவும் உடல்நலத்தைப் பேணவும் கொடிய நோய்களைத் தொடக்க நிலையிலேயே கண்டறியவும் மருத்துவம் செய்யவும் உதவும்.

**வணிகம்:**

பெருநிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யவும் சந்தைப்படுத்தவும் செய்கின்ற நிலையில், எதிர்காலத்தில் புதிய வணிக வாய்ப்புகளைச் செயற்கை நுண்ணறிவே நல்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

**பிற பணிகள்:**

விடுதிகளில், வங்கிகளில், அலுவலகங்களில் தற்போது மனிதர் அளிக்கும் சேவைகளை ரோபோக்கள் அளிக்கும். மேலும் நம்முடன் உரையாடுவது, ஆலோசனை வழங்குவது, பயண ஏற்பாடு செய்து தருவது, தண்ணீர் கொண்டு வந்து தருவது எனப் பலவற்றைச் செய்யும்.

**முடிவுரை:**

மனிதக் கண்டுபிடிப்புகள் அனைத்திலும் நன்மை, தீமை என்று இரண்டு பக்கங்கள் வந்திருக்கின்றன. அதற்கேற்ப செயற்கை நுண்ணறிவை நல்லவற்றிற்காகப் பயன்படுத்தினால் எதிர்காலத்தில் உலகின் ஒவ்வொரு துறையிலும் அளவிடற்கரிய முன்னேற்றத்தைத் தரும்.

5. **தமிழர் மருத்துவ முறைக்கும் நவீன மருத்துவ முறைக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.**

**தமிழ் மருத்துவ முறை:**

- பதினெண் சித்தர்கள் வளர்த்த மருத்துவ முறையே தமிழ் மருத்துவ முறையாகும்.
- அகத்தியர், தேரையர், போகர், புலிப்பாணி முதலிய சித்தர்களின் மருத்துவம் சார்ந்த நூல்கள் இன்றும் கிடைக்கின்றன.
- தாவரங்களின் உறுப்புகளிலிருந்து பல்வேறு மருந்துகள் தயாரிக்கப்பட்டு மனித உடலில் ஏற்படும் நோய்களைக் குணப்படுத்துகின்றன.
- நோய் வருவதற்கான காரணம் அறிந்தும், மீண்டும் நோய் தாக்காமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சித்த மருத்துவம் பயன்படுகின்றது.
- இம்முறையை உரிய முறையில் எடுத்துக்கொள்ளாவிட்டால் நோய்கள் தீர்வதற்கான வாய்ப்பு குறைவாக உள்ளது.

**நவீன மருத்துவ முறை:**

- பெருநோய்களுக்கும், அறுவை சிகிச்சை தேவைப்படும் நோய்களுக்கும் உடனடி தீர்வாக இம்முறை பயன்படுகிறது.
- இம்முறையில் பலவித நவீன மருத்துவ கருவிகள் கையாளப்படுவதால் நோய்களைப் பற்றிய ஒரு தெளிவு கிடைத்து, உரிய சிகிச்சை அளிப்பதற்கும் குணப்படுத்துவதற்கும் ஏதுவாகிறது.
- இயற்கைக்கு மாறாக வேதி முறையில் நம் உடலுக்குள் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் செயற்கை மருந்துகள் கொடுக்கப்படுகின்றன.
- சில மருந்துகளினால் ஏற்படக்கூடிய ஒவ்வாமையினால் உடலில் பக்க விளைவுகள் வர வாய்ப்புண்டு.
- இம்முறையில் நீண்ட காலமாகக் குணப்படுத்த முடியாத நோய்களும் உண்டு.

6. **தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி - பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிறதுறைக் கருத்துகள் - தமிழுக்குச் செழுமை.**

**மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை, என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப் பக்க கட்டுரை எழுதுக.** **PTA-4**

**முன்னுரை:**

"ஒரு மொழியில் ஏற்படும் புதுமைகளை வேற்று மொழிக்கு கொண்டுவரும் அரிய பெரிய கலையே மொழிபெயர்ப்புக் கலையாகும்." அந்த வகையில் செம்மொழியான தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை குறித்து ஈண்டுக் காண்போம்.

**தமிழின் இலக்கிய வளம்:**

வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்த நெறியோடு வாழ்ந்த தமிழரின் சங்க இலக்கியங்கள், அறக்கருத்துகளை வலியுறுத்தும் பதினெண்கீழ்க்கணக்கு காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், அறஇலக்கியம், சிற்றிலக்கியம், மரபுக்கவிதை, சந்தக்கவிதை, புதுக்கவிதை, புதினம் போன்றவை தமிழின் இலக்கிய வளத்திற்குச் சான்றாகின்றன.

**கல்வி மொழி:**

மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும், நாம் பெறமுடியும். பல அறிவுத்துறைகளுக்கும் தொழில்துறைகளுக்கும் பிறரை எதிர்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டியதை உருவாக்கிக் கொள்ளமுடியும்.

**பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள்:**

பிறமொழி இலக்கியங்களை அறிந்துகொள்ளவும், புதிய படைப்புகள் உருவாக்கவும் மொழிபெயர்ப்பு தேவையாகிறது. மொழிபெயர்ப்பு இல்லாவிடில் ஷேக்ஸ்பியரோ, கம்பரோ, தாகூரோ உருவாகியிருக்க முடியாது. வால்ட் விட்மனின் புல்லின் இதழ்கள் ஏற்படுத்திய கவிதை தாக்கம் தமிழுக்கு மகுடம் சூட்டியது.

**அறிவியல் கருத்துகள்:**

எடிசன், நியூட்டன், கலிலியோ கண்டுபிடிப்புகள் மொழிபெயர்க்கப்பட்டபின் அறிவியல் வளர்ச்சியில் திருப்பம் ஏற்பட்டது.

**பிறதுறைக் கருத்துகள்:**

இன்றைக்குப் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது. மொழிபெயர்ப்பு இல்லை எனில் உலகை எல்லாம் வகையாகப் பிடித்திருக்கிற ஊடகத்தின் வளர்ச்சி இல்லை.

**தமிழுக்குச் செழுமை:**

வெவ்வேறு படைப்புகள் மட்டுமின்றி, துறை சார்ந்த நூல் மொழிபெயர்ப்புகளையும் தமிழில் மேற்கொள்ள வேண்டும்.

**''சென்றிடுவீர் எட்டுத்திக்கும் – கலைச்**
**செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்''**

என்று பாரதி கூறுவதைத் தமிழுலகம் செயல்படுத்த வேண்டும்.

**முடிவுரை:**

**''தேமதுரத் தமிழோசை உலகமெலாம்**
**பரவும் வகை செய்தல் வேண்டும்''** – என்ற பாரதியின் கூற்றிற்கேற்ப தமிழ் நூல்களை உலகமொழிகளில்

மொழிபெயர்க்க வேண்டும். செப்புமொழிகள் பலவாக இருப்பினும் சிந்தனை ஒன்றுடையதாக உலகம் ஆக்கப்பட வேண்டும்.

**7. நிகழ்கலை வடிவங்கள் அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழமையும் - இத்தகைய மக்கள் கலைகள் அருகி வருவதற்கான காரணங்கள் - அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.** **PTA-3**

**நிகழ்கலை:**

சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாத கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள் ஆகும். பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணை செய்கின்றன.

**நிகழ்கலை வடிவங்கள் அவை நிகழும் இடங்கள்:**

பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் நிகழ்கலைகளில் கரகாட்டம், மயிலாட்டம், காவடியாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், சேவையாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், தப்புஆட்டம், புலி ஆட்டம், தெருக்கூத்து, தோற்பாவைக்கூத்து போன்றவை. இவை கோவில் திருவிழாக்கள், திறந்தவெளி, களத்துமேடு, தெருசந்திப்பு போன்ற இடங்களில் நடைபெறும்.

**ஒப்பனைகள்:**

கரகாட்டத்தில் சில நேரங்களில் ஆண், பெண் வேடமிட்டு ஆடுவதும் உண்டு. மயில் வடிவுள்ள கூட்டுக்குள் உடலை மறைத்துக்கொண்டு மயிலாட்டத்தில் ஆடப்படுகிறது. ஒரே நிறத்துணியை முண்டாசு போலக் கட்டியும் காலில் சலங்கை அணிந்தும் கையில் சிறுதுணியைக் கொண்டு இசைக்கேற்ப வீசியும் ஒயிலாட்டம் ஆடப்படுகிறது. பொய்க்கால் குதிரையாட்டத்தில் அரசன், அரசி வேடமிட்டு ஆடுகின்றனர்.

**சிறப்பும், பழைமையும்:**

நிகழ்கலைகள் ஊரக மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்திருக்கின்றன. திருவாசகம் மற்றும் பட்டினத்தார் பாடல்களில் தோற்பாவைக் கூத்து பற்றியும் செய்திகளைக் காண முடிகிறது.

**அருகி வருவதற்கான காரணங்கள்:**

நவீன ஊடகங்களின் வளர்ச்சியும், நாகரிக மாற்றமும் இந்நிகழ்கலைகள் அருகி வருவதற்கான காரணிகளில் முதன்மையானதாகும். போதிய வாய்ப்புகளும் வருமானமின்மையும் இத்தொழிலில் ஈடுபடும் கலைஞர்கள் வேறுதொழில்களுக்குச் செல்வதற்குக் காரணமாகிறது.

**வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன:**

நாட்டில் நடைபெறும் விழாக்களில் நிகழ்கலைகள் அதிகம் இடம்பெற வேண்டும். நிகழ்கலைகளுக்குத் தனியே பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டு, அதன் வாயிலாக இக்கலைகள் பயிற்றுவிக்கப்பட்டு, வேலைவாய்ப்பினை நல்ல வருமானத்துடன் வழங்க வேண்டும். இக்கலைகளில் சிறந்து விளங்குவோருக்கு அரசின் உயர்விருதுகளை வழங்கி உரிய முறையில் சிறப்பிக்கப்பட வேண்டும்.

8. **மூன்று நிகழ்கலை கலைஞர்களை நேர்முகம் கண்டு அவர்களது கருத்துகளையும் அவர்களது மறுவாழ்விற்கான வழிமுறைகளாக நீங்கள் கருதுவனவற்றையும் குறிப்பிட்டு எழுதுக.**

**அறிமுகம்:**

எங்கள் ஊரிலுள்ள நிகழ்கலை கலைஞர்களில் கரகாட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் ஆகியவற்றை நிகழ்த்திக்காட்டும் கலைஞர்களை நேர்முகம் கண்டு, அவர்களின் வாழ்வியல் சூழல்களையும், கலை நிலையையும் குறித்துக் கேட்டறிந்தேன்.

**நிகழ்கலை கலைஞர்களின் கருத்துகள்:**

தமிழ்நாட்டில் ஏறக்குறைய 1,026 கலைகள் இருந்ததாகவும் அவை இன்றைக்கு ஒவ்வொன்றாக மறைந்து வருவதோடு, எளிதில் எண்ணிவிடக் கூடிய அளவில் குறைந்துவிட்டதையும் அறிய முடிகிறது.

நிகழ்கலை கலைஞர்கள் சிறுசிறு குழுக்களாக ஒருங்கிணைக்கப்படாமல் எல்லா மாவட்டங்களிலும் இருக்கிறார்கள் என்பதையும், எப்போதாவது கிடைக்கின்ற வாய்ப்பினைப் பயன்படுத்தி நிகழ்கலைகளை

நிகழ்த்தினாலும், அதனால் வாழ்வை நடத்துவதற்குப் போதுமானவருமானம்கிட்டுவதில்லை.இதனால்வறுமையில் சிக்கியுள்ள பெரும்பாலான கலைஞர்கள் வேறுபணிகளை நாடிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. தொலைக்காட்சி மற்றும் நவீன மின்னணு ஊடகங்கள் கோலோச்சுகின்ற இக்காலக்கட்டத்தில் நாட்டுப்புறக் கலைகளும், அவற்றை நிகழ்த்துகின்ற கலைஞர்களும் பெரிய சவால்களை சந்திக்கும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

**மறுவாழ்விற்கான வழிமுறைகள்:**

அரசும் மக்களும் தங்கள் கலைகளை ஊக்குவித்து, வாய்ப்பளிக்க வேண்டும். கலைஞர்களை அவர்தம் கலையின் அடிப்படையில் ஆவணப்படுத்தி முறையான அங்கீகாரம் வழங்கிட வேண்டும். நிகழ்கலைகளை மீட்டுருவாக்கம் செய்கின்ற வகையில், கிராமம் கிராமமாகச் சென்று கலைகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து ஆவணப்படுத்த வேண்டும். கலைஞர்களை அரசுத்துறையில் முறையாகப் பதிவு செய்து, அடையாள அட்டை வழங்கி ஊக்குவிப்பு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

நிகழ்கலைகளை ஆவணப்படுத்திடவும், கருத்தரங்குகள், விவாதங்கள்,உரையாடல்நடத்திடவும்,நிகழ்கலைகளுக்கான தனிப்பல்கலைக்கழகம் அமைக்கப்படவும், கலைஞர்கள் உருவாக்கப்பட வேண்டும். அரசின் சார்பிலும், பள்ளி, கல்லூரிகள்சார்பிலும்நிகழ்கலைகளுக்கென்றுதனிவிழாக்கள் நடத்தப்பட வேண்டும்.

**நிறைவு:**

தமிழரின் பண்பாட்டு அடையாளங்களாக விளங்கும் நிகழ்கலைகளையும், கலைஞர்களையும் ஆதரித்துக் காக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தமிழனுக்கும் உரியது என்பது திண்ணம்.

**9. நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் ‘மாணவப்பருவமும் நாட்டுப்பற்றும்’ என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.** **PTA-1, SEP-20**

**'மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும்' - மேடை உரை**

இந்திய அன்னையின் இதயத்துடிப்பாய் வீற்றிருக்கும் அனைவருக்கும் இனிய வணக்கம்!

"நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்குழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்'' என்றார் மகாகவி பாரதி.

**அறிமுக உரை:**

"நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே நாட்டிற்கு நீ என்ன செய்தாய் என்று கேள்'' என்றார் ஜான் கென்னடி. "நாடு இல்லாவிடில் வாழ்க்கை இல்லை'' என்பது மாஜினியின் கூற்று. "தாய்நாட்டை நேசிக்காதவன் எதையும் நேசிக்க முடியாது'' என்பது பைரனின் கருத்தாகும்.

**நாட்டு விழாக்கள்:**

இந்திய விடுதலைத் திருநாள், குடியரசு தினம், மகாத்மா காந்தி பிறந்தநாள் உள்ளிட்ட பல விழாக்களை நாட்டு விழாக்களாகக் கொண்டாடுகிறோம். வெறும் விழாக்கள் மட்டும் கொண்டாடினால் போதுமா? நாட்டை எப்போது கொண்டாடப் போகிறோம். ஊழலற்ற, இலஞ்சம் ஒழிந்த நாடாக என்றைக்கு மாற்றப் போகிறோம்.

**விடுதலைப் போராட்ட வரலாறு:**

அந்நியர் ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடந்த நாட்டைக் கண்ணீரையும் செந்நீரையும் சிந்தி, உயிரையும் உடமைகளையும் இழந்து நம் முன்னோர்கள் மீட்டு எடுத்து, நாம் விடுதலை வாழ்வை அனுபவிக்கக் காரணமாக இருந்துள்ளார்கள்.

சட்டமறுப்பு இயக்கம், அந்நிய ஆடைகள் புறக்கணிப்பு, வெள்ளையனே வெளியேறு இயக்கம், உப்புச் சத்தியாகிரகம், ஒத்துழையாமை இயக்கம் போன்ற எண்ணற்ற போராட்டங்களினால் விளைந்ததுதான் இந்திய விடுதலை. உலக வரலாற்றிலேயே அறப்போராட்டம் வாயிலாக விடுதலை பெற்ற பெருமைக்குரிய நாடு நம் இந்திய நாடு.

**நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு:**

தேசிய மாணவர்படை, நாட்டு நலப்பணித் திட்டம், தேசிய பசுமைப்படை, இளையோர் செஞ்சிலுவை சங்கம்,

சாரணர் இயக்கம், நுகர்வோர் மன்றம், சாலைப்பாதுகாப்பு மன்றம் போன்ற மாணவர் இயக்கங்களில் இணைந்து நாட்டுப்பற்றையும், தொண்டாற்றும் மனப்பாங்கினையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். நாட்டை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்வதற்கான ஆக்கப்பூர்வமான செயல்களில் ஈடுபடுதல் வேண்டும்.

**“நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம் – இது**
**நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்”**

என்ற பாரதியின் வாக்கினுக்கேற்ப நம் நாடு நமக்கான நாடு என்பதை உணர்ந்து நற்பணியாற்றி நாம் ஒவ்வொருவரும் இந்திய நாட்டின் குடிமகன் என்பதை நிலைநாட்டுவோம்!

நன்றி! வணக்கம்!

**10. உங்களைக் கவர்ந்த எவரேனும் ஓர் அறிஞர் அல்லது அரசியல் தலைவர், தம் வாழ்வில் நடந்த நிகழ்வுகளைத் தாமே சொல்வதைப் போன்று தன் வரலாறாக மாற்றி எழுதுக.**

அண்ணாவாகிய நான்,

- என்னைப் பொறுத்தவரை, சிந்திப்பதும், படிப்பதும் என் வாழ்வின் ஒரு பகுதியாகும்.
- கல்லூரி படித்துக் கொண்டிருந்த பொழுது, நான் ஆங்கில கட்டுரை ஒன்று எழுதினேன். அதனைப் படித்துப் பார்த்த என் பேராசிரியர், ‘பொருட் செறிவுடனும், நயமுடனும் இருக்கிறது. இதை எங்கிருந்து எடுத்தாய்’ என்றார்.
- ‘நான் இங்கிருந்து எடுத்தேன்’ என்று என் நெஞ்சைத் தொட்டுக் காட்டினேன். பேராசிரியர் வியப்புடனும், மகிழ்வுடனும் என்னைக் கட்டியணைத்துக் கொண்டார்.
- பெரியாருடன் நான் இணைந்து பணியாற்றினேன். அப்போது இருவரும் ஒன்றாகப் பல ஊர்களுக்குச் செல்வோம். வடநாட்டுப் பயணங்களில் பெரியாரின் தமிழ்ப்பேச்சை நானே ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பேன்.
- என் அழகான ஆங்கிலத்தால் கவரப்பட்ட மக்கள் அனைவரும் என்னையே பேசும்படி வற்புறுத்துவர். ஆனால் நான் நயமாக அவ்வலியுறுத்தலை மறுத்துவிடுவேன்.

- எவ்வளவுதான் புலமை திறமை இருந்தாலும், ஒருவருடைய பேச்சை மொழிபெயர்க்க வந்ததை விட்டு தனியுரை நிகழ்த்த முற்படுவது, கண்ணியமற்ற செயல் அல்லவா! அதனை நான் செய்யலாமா? கண்ணியம் தவறக் கூடாதன்றோ.

**11. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குரிய சில எடுத்துக்காட்டுகள் தருக.** **PTA-1,5, 6, MAY-22**

சங்ககால வாழ்க்கையில் இருந்து உருவான அறங்களே சங்க இலக்கியத்தில் பதிவு பெற்றுள்ளன. சங்க அறங்கள் சமயங்களிடமிருந்து இரவல் பெறப்பட்டவை அல்ல.

**அறம்:**

- குற்றங்களை, அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்கிறார் ஊன் பொதிப் பசுங்குடையார்.
- தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

**கொடை:**

- வள்ளல் எழுவரின் கொடைப் பெருமை சிறுபாணாற்றுப் படையிலும் பெருஞ்சித்திரனார் பாடலிலும் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்படத்தக்கது.
- இரப்போர்க்கு ஈயாது வாழ்தலைவிட உயிரை விட்டு விடுதல் மேலானது என்றெல்லாம் கலித்தொகையில் கூறப்பட்டுள்ளது.

**உதவி:**

- உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் ‘உதவியாண்மை’ என்று குறிப்பிடுகிறார்.
- ‘உண்மையான செல்வம் என்பது பிறர்துன்பம் தீர்ப்பதுதான்’ என்கிறார் நல்வேட்டனார்.

**வாய்மை:**

- வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை, ‘பொய்யாச் செந்நா’, ’பொய்படுபறியா வயங்கு செந்நா’ என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

- 'பிழையா நன்மொழி' என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது.
- சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள், ஒரு மனிதன் தனியாகவும் சமூக உறுப்பினனாகவும் இயங்குவதற்கும், அவனது பண்பு நலனை உருவாக்குவதற்கும் உதவும் விதிமுறைகள் எனலாம்.

**12. ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.** **PTA-2, AUG-22**

**கங்கா வார இதழ்**
**- இது ஓர் இலக்கியத்திற்கான குரல்**

**ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழ் – 2022**

**உள்ளே.....**

- ★ ஜெயகாந்தனோடு ஒரு சந்திப்பு
- ★ அறிஞர்கள் பர்ாவையில் ஜெயகாந்தன்
- ★ திரைத்துறையில் ஜெயகாந்தன்
- ★ படைப்புத்துறையில் ஜெயகாந்தன்
- ★ இன்னுமொரு முகம் (கவிதை)
- ★ தொடுத்த கேள்விகளும் கொடுத்த பதில்களும் (கேள்வி - பதில்)
- ★ தர்க்கத்திற்கு அப்பால் - கதை
- ★ முன்னுரையில் முகம் காட்டும் ஜெயகாந்தன்

**100 பக்கங்கள்**

**விலை ₹ 30**

முன்பதிவுக்கு:
**ஸ்ரீ கங்கா பதிப்பகம், திருநெல்வேலி-1.**
**தொலைபேசி: 0462-2338899**

வெளியீட்டு நாள்
29.09.2022

**13. எழுத்தாளர் ஜெயகாந்தனின் 'இன்னொரு முகம்' குறித்தும் அவரிடம் 'தொடுத்த கேள்விகளுக்கு அவர் கொடுத்த பதில்களுமாக', ஜெயகாந்தன் பற்றி நீங்கள் அறிந்தவற்றை விளக்குக.**

எழுத்தாளர் ஜெயகாந்தனின் 'இன்னொரு முகம்' – கவிஞர்.

ஜெயகாந்தன் சில கவிதைகளையும் திரைப்பாடல்களையும் படைத்திருக்கிறார். அவரது படைப்பாற்றலின் இன்னொரு பக்கம் அது.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பற்றிய ஜெயகாந்தனின் கவிதை:

**''எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும் - ஏழை**
**கண்ணீரும் பாடலிலே கலந்திருக்கும்**
**பண்ணொடு சந்தமும் பாய்ந்து வரும் - பழைய**
**மண்ணின் வாடையும் சேர்ந்து வரும்''**

**தொடுத்த கேள்விகளும் ஜெயகாந்தன் கொடுத்த பதில்களும்:**

**கேள்வி : சிறுகதைகளைப் படைப்பதில் தங்களுடைய தனித்தன்மை வாய்ந்த திறமையை வாசகர்கள் கொண்டாடுகிறார்களே, இத்துறையில் தாங்கள் கடைப்பிடிக்கும் நுணுக்கங்கள் யாவை?** (பேட்டி - திரு. கிருஷ்ணமணி, 1966)

பதில் : நுணுக்கமா? அப்படித் தனியாக நான் எதையும் கையாளுவதாக எண்ணிச் செய்வதில்லை. என் மனத்தால், புத்தியால், உணர்வால் நான் அறிந்து அனுபவப்படாத எதைப் பற்றியும் நான் எழுதினதில்லை. என்னைப் பெரிதும் பாதிப்பவை மனித வாழ்வின் பிரச்சினைகளே. என்னைப் பொறுத்தவரையில் எழுத்தாளனுக்கு அவனுடைய படைப்புகளுக்கு அடிப்படையாக அமைய வேண்டியது மனித வாழ்வின் பிரச்சினைகளே.

**கேள்வி : உங்கள் பார்வையில் சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனை எது? மிகப் பெரிய சவால் எது?**

பதில் : மகத்தான சாதனை – பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தது. மிகப் பெரிய சவாலும் அதுவே.

**கேள்வி : இந்த வயதில் தேசம் செல்லும் பாதை, எழுத்துலகத்தின் போக்கு இவற்றை எல்லாம் பார்க்கும்போது எப்படி இருக்கிறது?**

பதில் : காலந்தோறும் மாற்றங்களை நாம் பார்க்கிறோம். நாமும் மாறிக்கொண்டே இருக்கிறோம்.

## வினா எண்: 44 - விரிவானத்தின் வினா விடைகள்

**1. ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.** **PTA-2**

சூழல் - வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.

பங்கு பெறுவோர் - இலக்கியன், கல்பனா (உறவினர் மகள்)

கல்பனா : வணக்கம் ஐயா!

இலக்கியன் : வணக்கம் கல்பனா!

கல்பனா : ஆங்கில இலக்கியம் மட்டுமே பயின்றுள்ள எனக்குத் தமிழ் உரைநடையைக் கூறமுடியுமா?

இலக்கியன் : சொல்கிறேன் கல்பனா.

கல்பனா : உரையாடலுக்கும் உரைநடைக்கும் வேறுபாடு உள்ளதா ஐயா!

இலக்கியன் : உள்ளது. நீயும் நானும் பேசுவது உரையாடல். அதுவே எழுதினால் உரைநடை.

கல்பனா : சரிங்க ஐயா. அக்காலந்தொட்டே உரைநடை இருக்கிறதா?

இலக்கியன் : அக்காலத்தில் செய்யுள் வடிவமே இருந்தது. இக்கால இலக்கியத்தின் வளர்ச்சியாக உரைநடையைக் கூறலாம். சிறுகதை, கட்டுரை, புதினம் போன்றவை அதில் அடங்கும்.

கல்பனா : உணர்ச்சிகளைக் காட்ட உவமை கொண்ட மொழிநடையைப் பயன்படுத்த முடியுமா ஐயா!

இலக்கியன் : உறுதியாகப் பயன்படுத்த முடியும். "திருப்பரங்குன்றத்தின் அழகைப் பார்ப்பதற் கென்றே இயற்கை பதித்து வைத்த இரண்டு பெரிய நிலைக்கண்ணாடிகளைப் போல் வடபுறமும் தென்புறமும் நீர்நிறைந்த கண்மாய்கள்" என்று குறிஞ்சிமலர் என்னும் நூலில் நா.பார்த்தசாரதி உவமையால் பயன்படுத்தியுள்ளதைச் சான்றாகக் கூறலாம்.

கல்பனா : உரைநடையில் உவமையைப் போலவே உருவகமும் இடம்பெறுவது உண்டா?

இலக்கியன் : தமிழ் உரைநடை இலக்கியங்களில் உவமையைவிட உருவகமே உணர்வுகளைத் தூண்டி எழுப்புவதில் வெற்றி பெறுகின்றது. "முகநிலவில் வியர்வைமுத்துகள் துளிர்த்தன" என்று உருவகமாக எழுதுகிறார்கள்.

கல்பனா : மிக்க நன்றி ஐயா! தங்களிடமிருந்து தமிழ் உரைநடையின் சிறப்புகளை நன்கு அறிந்து கொண்டேன்.

இலக்கியன் : மகிழ்ச்சி கல்பனா! உனது தமிழ் ஆர்வம் என்னை வெகுவாக ஈர்த்தது. வாழ்த்துகள்.

**2. புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும், புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?** **PTA-1, SEP-20**

**வருணனைகள்:**

- கொளுத்திக் கொண்டிருந்த வெயில் இமை நேரத்தில் மறைந்துவிட்டது.
- மேகப்பொதிகள் பரந்து திரண்டொன்றிக் கும்மிருட்டாய் இறுகி நின்றன.
- அலைகள் எண்ணெய் பூசியவை போல் மொழுமொழுவென நெளிந்தன.
- கிடுகிடுக்கும் இடி முழக்கத்துடன் மின்னல் கீற்றுகள் வானைப் பிளந்தன.
- வானம் உடைந்து கொட்டுகொட்டென்று வெள்ளம் கொட்டியது.
- சூறாவளியும் மாரியும் காற்றும் கூடிக்கலந்து ஆடிக்குதித்துக் கெக்கலித்தன.
- வானம் பிளந்து தீ கக்கியது. மழை வெள்ளம் கொட்டுகிறது.
- கடல் வெறிக் கூத்தாடுகிறது.

**அடுக்குத்தொடர்:**

- வானம் உடைந்து கொட்டுகொட்டென்று வெள்ளம் கொட்டியது.

- இருட்டிருட்டு, கடல் மழை புயல் வெள்ளம்...
- தொங்கான் நடுநடுங்கித் தாவித் தாவிக் குதிகுதித்தது.
- உடை, உடலை இறுக்கியிருக்கி ரம்பமாய் அறுக்கிறது.
- அருவியருவி, உப்பருவி, கடலருவி.
- இருட்டிட்டு, கும்மிருட்டு, குருட்டிருட்டு...

**ஒலிக்குறிப்பு:**

- எலும்புகள் முறிவதுபோல் நொறுநொறு நொறுங்கல் ஒலி.
- தொங்கான் குதித்து விழுந்து நொறுநொறு நொறுங்குகிறது.
- நொய்ங் புய்ங் நொய்ங் புய்ங் நொய்ங் புய்ங் என இடி முழக்கச் சீனப் பிசாசுகள் தாவி வீசுகின்றன.

**3. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை 'கோபல்லபுரத்து மக்கள்' கதைப்பகுதி கொண்டு விவரிக்க.** **PTA-4,5, MAY-22**

**முன்னுரை:**

கி.ராஜநாராயணன் எழுதிய 'கோபல்லபுரத்து மக்கள்' கதையில் அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை ஈண்டுக் காண்போம்.

**சுப்பையாவின் புஞ்சை:**

சுப்பையாவின் புஞ்சையில் அருகு எடுத்துக் கொண்டிருந்தபோது, அன்னமய்யா யாரோ ஒரு சன்யாசியைக் கூட்டிக்கொண்டு வருவது தெரிந்தது. கிட்டே போய்ப் பார்த்த பிறகுதான் தெரிந்தது அவன் ஒரு வாலிபன். வாலிபனது தாடியும் அழுக்கு ஆடையும் அந்தத் தள்ளாட்டமும் அவனை வயோதிகனாகவும், சாமியாராகவும் காட்டியது.

**வாலிபனின் பசியும் தாகமும்:**

அன்னமய்யாவைப் பார்த்த அவ்வாலிபன், "கொஞ்சம் குடிக்கத் தண்ணி கிடைக்குமா? எனக் கேட்டதற்கு அன்னமய்யா "நீச்சுத் தண்ணி வாங்கி வரட்டுமா? எனக்கேட்டான்.

**வாலிபனின் பசியை ஆற்றிய அன்னமய்யா:**

அன்னமய்யா கலயத்திலிருந்து கஞ்சின் நீத்துப் பாகத்தைச் சிரட்டையில் ஊற்றிக்கொடுத்தான். நீத்துப்

பாகமாகிய மேல்கஞ்சை வாலிபன் குடித்ததும் கலயத்தை அலசி, தெளிவு மறைந்த சோற்றின் மகுளி கஞ்சையும் வாலிபனுக்கு ஊற்றிக்கொடுத்தான் அன்னமய்யா. வாலிபனுக்குள் ஜீவ ஊற்று பொங்கியது.

**இளைப்பாறிய வாலிபன்:**

கஞ்சியைக் குடித்த வாலிபன் வேப்ப மர நிழலைச் சொர்க்கமாய் நினைத்துத் தூங்கினான். அவனை ஒரு பிரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான் அன்னமய்யா.

**பெயர் பொருத்தம்:**

தூக்கம் தெளிந்து எழுந்திருக்க மனசில்லாமல் படுத்துக்கொண்டே பேசிய வாலிபன் “உங்கள் பெயர் என்ன?'' என்று அன்னமய்யாவிடம் கேட்டான். அன்னமய்யா என்னும் பெயரை அறிந்ததும் எவ்வளவு பொருத்தம் என்று எண்ணி ‘எனக்கு இன்று நீ இடும் அன்னம்தான்‘ என் வாழ்வுக்கு மீண்டும் உயிர் கொடுத்தது என்று மனதுக்குள் கூறினான் அவ்வாலிபன்.

**முடிவுரை:**

‘இட்டுக் கெட்டாரும் இல்லை’ என்னும் முதுமொழியின்படி, அன்னமய்யா என்ற பெயருக்கு ஏற்ப அன்னமிட்டு மனிதநேயம் காத்த அன்னமய்யா தன் பெயருக்கே பெருமை சேர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**4. அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் ‘விண்வெளிப் பயணம்’ என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.** **PTA-3**

இயற்கையின் மர்ம முடிச்சுகளை அவிழ்க்கும் அறிவியல் சிந்தனை, போற்றுதலுக்குரியதாக இருக்கிறது. அதிலும் தன்னால் எந்த இயக்கமும் மேற்கொள்ள இயலாத நிலையிலும் அறிவியலின் இயங்கும் தன்மையை அறிந்து புது உண்மைகளைச் சொன்ன ஸ்டீபன் ஹாக்கிங்குடன் ஒரு விண்வெளிப் பயணமென்றால் எத்துணை உவகையை உண்டாக்கும்.

பேரண்டப் பெருவெடிப்பு, கருந்துளைகள் பற்றி ஸ்டீபன் ஹாக்கிங் எடுத்துரைத்தார். இப்பேரண்டம்

பெருவெடிப்பினால் உருவானதே என்பதற்கான சான்றுகளைக் கணிதவியல் அடிப்படையில் விளக்கினார். இப்புவியின் படைப்பில் கடவுள் போன்ற ஒருவர் பின்னணியில் இருந்தார் என்பதை மறுத்த ஹாக்கிங், பிரபஞ்சத்தை இயக்கும் ஆற்றலாகக் கடவுள் என்ற ஒருவரைக் கட்டமைக்க வேண்டியதில்லை என்றும் கூறினார்.

"தலைவிதிதான் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது என நம்புபவர்களைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புதான் வருகிறது. விதிதான் தீர்மானிக்கிறது என்றால் சாலையைக் கடக்கும்போது ஏன் இருபுறமும் பார்த்துக் கடக்கிறார்கள்'' என்னும் பகுத்தறிவு சிந்தனைகளை எங்களிடம் விதைத்தார் ஹாக்கிங்''.

"வாழ்க்கை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் வெற்றிக்கான வழி அதில் இருக்கவே செய்கிறது. நிச்சயம் என் ஆராய்ச்சியில் நான் வெல்வேன். அதன்மூலம் மனிதஇனம் தொடர வழிவகுப்பேன்'' என்று தன்னம்பிக்கையுடன் ஹாக்கிங் கூறிய வார்த்தைகள் எங்கள் வாழ்வுக்கும் வழி காட்டுவதாக அமைந்தது. ஹாக்கிங்குடைய துணிச்சல், உறுதி, அறிவாற்றல், நகைச்சுவை உணர்வு போன்ற பல்திறன்களை அறியும் வாய்ப்புக்கிட்டிய தருணத்தை எண்ணி மகிழ்ந்து விண்வெளி ஓடத்தின் வழியே மீண்டும் பூமியை நோக்கித் திரும்பினோம். இந்த விண்வெளிப் பயணத்துக்கு வழிவகுத்துக் கொடுத்த அனைவருக்கும் நன்றி பல.

5. **'' கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே - என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடம் இருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.** **PTA-2**

**முன்னுரை:**

ஒடுக்கப்பட்ட சமூகத்தில் மறுக்கப்பட்ட சமூகத்திற்கு குரலாக இருந்தவர் மேரி மெக்லியோட் பெத்யூன். அவரின் வாழ்க்கையை கமலாயன், "உனக்குப் படிக்கத் தெரியாது'' என்ற தலைப்பில் எழுதியுள்ளதைக் காண்போம்.

**உழைக்கும் வர்க்கத்தினர்:**

அதிகாலை 5 மணிக்கு எழுந்து பகல் முழுவதும் பாடுபட்டு ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்கிவிடக்கூடாது என்று பருத்திக் காட்டில் உழைத்திடும் குடும்பம் மேரியினுடையது.

**உன்னால் படிக்க முடியாது:**

தன் தாயுடன் மேரி வெள்ளைக்கார முதலாளி வீட்டிற்குச் சென்றாள். அங்கு வெள்ளைக்காரச் சிறுமி மேரியை விளையாட அழைக்க அவள் தயங்கி அங்கிருந்த புத்தகத்தை எடுத்தாள். உடனே வெள்ளைக்காரச் சிறுமி புத்தகத்தைப் பிடுங்கி உன்னால் படிக்க முடியாது என்கிறாள். மனம் துவண்ட மேரி அங்கிருந்து கிளம்பினாள். ‘‘கல்வி இல்லாதவனை நடைப்பிணம்’’ என்பார் பாரதிதாசன்.

**மேரியின் கல்வித்தாகம்:**

தான் எப்படியாவது படிக்க வேண்டும் என்று மேரி விரும்பினாள். தன் கனவையும் ஆசையையும் பெற்றோரிடம் அவள் பகிர்ந்து கொண்டாள். ஆனால் பதிலேதும் அவளுக்குக் கிடைக்கப் பெறவில்லை.

**மிஸ் வில்ஸனின் உதவி:**

மேரியின் ஆர்வத்தைக் கண்ட மிஸ் வில்ஸன் மேரிக்கு உதவிக்கரம் நீட்டினார். ‘‘உன்னைப் போன்ற குழந்தைகள் படித்தாக வேண்டும். நீ மேயெஸ்வில்லிக்கு வர வேண்டும்’’ என்று அழைப்பு விடுத்த மிஸ் வில்ஸனின் வார்த்தைகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் வாயடைத்து நின்றாள்.

**கனவு மெய்ப்பட்டது:**

புதிது புதிதாகக் கற்க ஆரம்பித்தாள். அக்கம் பக்கத்தவரின் சம்பள கணக்கைச் சரிபார்க்கும் முக்கிய நபராகவே மாறினாள் மேரி. சில ஆண்டுகள் கல்விக்குப் பிறகு பட்டமளிப்பு விழா நடந்தது. அதில் வெள்ளைத்தாள் சுருள்களில் ‘‘இந்தப் பட்டம் பெறும் மாணவர் எழுதவும் படிக்கவும் கூடியவர்’’ என்று எழுதப்பட்டிருந்ததைக் கண்டு பெருமகிழ்ச்சியடைந்தாள்.

**மேரியின் மேற்படிப்பு:**

மேல்படிப்பினைப் படிக்க விரும்பிய மேரிக்கு ஒரு வெள்ளைக்காரப் பெண்மணியிடமிருந்து உதவி கிடைத்தது. ஊரே கூடி நின்று நகரத்திற்குப் படிக்கச் செல்லும் மேரியை வாழ்த்தி வழி அனுப்பியது.

**முடிவுரை:**

**“அவமானங்களைச் சேகரித்து வையுங்கள்**

**வெற்றி விழாவில் அனுபவமாகப் பேசலாம்”** - என்னும் கூற்றிற்கேற்பத் தனக்கு ஏற்பட்ட அவமானத்தைத் தன் முயற்சியாலும், பிறர் உதவியாலும் வென்று காட்டி எளியோருக்கும் ஏற்ற படிப்பினையாகக் காட்சியளிக்கிறார் மேரி.

6. **‘பாய்ச்சல்’ கதையில் அழகு தன்னை மறந்து ஆடியது போன்று உங்கள் தெருக்களில் நீங்கள் கண்டு மகிழ்ந்த பகல் வேடக் கலைஞரைக் குறித்து அழகுற விளக்கி எழுதுக.** **SEP-20**

**காளி வேடம்:**

திருச்செந்தூர் அருகில் உள்ள குலசேகரப்பட்டினம் முத்தாரம்மன் கோவிலுக்கு தசரா விழாவிற்கு “காளி வேடம்” அணிந்த கலைஞர் ஒருவர் எங்கள் தெருவில் ஆடியதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

**கண்கவர் காட்சி:**

அவர் அணிந்திருந்த உடை ஒப்பனைகள் பார்ப்பதற்கு அச்சமூட்டுவதாக இருந்தாலும், அவர் பத்து கைகளைக் கொண்ட காளிபோல ஆடிய ஆட்டம் கண்கவர் காட்சியாகவும், மனதிற்கு மகிழ்வைத் தரக்கூடியதாகவும் அமைந்தது.

**தோற்றம்:**

காளிவேடம் அணிந்தவர் கையில் சூலாயுதத்தையும் வெளியே தொங்கி நிற்கும் நாவின் தோற்றமும் கோபப் பார்வையும் பார்ப்பதற்கு பயம் கலந்த மகிழ்வை நமக்குத் தருகின்றதாக அமைந்தது.

**ஆட்டம்:**

அவர் கால்களை தூக்கியும் சூலாயுதத்தைச் சுழற்றி சுழற்றி ஆடிய ஆட்டமும் என்னை மட்டும் அல்ல என்னோடு கண்டு களித்தவர்களுக்கும் மகிழ்வைத் தந்தது. அவர் ஆடுவதற்குப் பின்னணி இசையினைக் கேட்ட பொழுது என்னை மறந்து நானே ஆடிவிடுவது போன்ற கலையாகவே அது தோன்றியது.

**நம் பங்கு:**

இதுபோன்ற நாட்டுப்புற கலைஞர்களும், கலைகளும் வாழ வேண்டும். அதற்கு நம்மால் இயன்ற உதவிகள் செய்தால் கலைகள் மட்டுமல்ல கலைஞர்களும் மறுவாழ்வு பெற முடியும்.

7. **நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.** **PTA-5**

**மகளிர் நாள் விழா**

**இடம்: பள்ளிக் கலையரங்கம்.** **நாள்: 08.06.2020**

**கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் - தலைமையாசிரியரின் வரவேற்பு - இதழாளர் கலையரசியின் சிறப்புரை - ஆசிரியர்களின் வாழ்த்துரை - மாணவத் தலைவரின் நன்றியுரை.**

**மகளிர் நாள் விழா - அறிக்கை**

“மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா” என்னும் கவிமணியின் வரிகளுக்கேற்ப மாண்புமிகு மகளிரைப்போற்றும் வகையில் எம் பள்ளியின் கலையரங்கில் “மகளிர் நாள் விழா” 08.03.2022 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது.

**ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல்:**

அழகிய தோரணங்களுடன் விழாக்கோலம் பூண்ட எம்பள்ளியின் கலையரங்கில் ஆசிரியர்களும் மாணவர்களும் பெற்றோர்களும் வந்து அமர்ந்தனர். சிறப்பு விருந்தினர் இதழாளர் கலையரசியைத் தலைமையாசிரியர் வரவேற்று இருக்கையில் அமர வைத்தார்.

**தலைமையாசிரியரின் வரவேற்பு:**

தலைமையாசிரியர் வருகை தந்த அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினர் இதழாளர் - கலையரசி அவர்களைப் பற்றியும், இதழியல் மற்றும் இலக்கியத்துறைகளில் அவர் ஆற்றிவரும் பணிகளையும் அழகாக எடுத்துரைத்தார்.

**இதழாளர் கலையரசியின் சிறப்புரை:**

“மாண்புமிகு மகளிர்” என்னுந் தலைப்பில் உரையாற்றிய இதழாளர் கலையரசி, பெண்கள் அனைத்துத் துறைகளிலும்

ஆண்களுக்கு நிகராக மட்டுமல்லாது, ஆண்களைவிட ஒருபடிமேலே சாதித்து வருவதனைச் சுட்டிக்காட்டினார்.

**ஆசிரியர்களின் வாழ்த்துரை:**

மகளிர்நாள் விழாவின் மாண்பினைப் பள்ளி ஆசிரியர்கள் வாழ்த்துரையாக வழங்கினார்கள். ஆசிரியர் இலக்கியா தனது உரையில், "பெண்கள் தினம் வைத்துக் கொண்டாட வேண்டியவர்களில்லை, தினந்தினம் கொண்டாடப்பட வேண்டியவர்கள்" என்று குறிப்பிட்டார். "குடும்பத்திற்கு மட்டுமல்லாது சமூகத்திற்கே பெருந்தூணாகப் பெண்கள் விளங்குகின்றனர்" என்று ஆசிரியர் தமிழரசன் தனது வாழ்த்துரையில் குறிப்பிட்டார்.

**மாணவத் தலைவரின் நன்றியுரை:**

பள்ளியின் மாணவத்தலைவர் இனியா, இதழாளர் கலையரசி உள்ளிட்ட விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறி உரையாற்றினார். மகளிர்நாள் விழா மகளிரைப் போற்றும் வண்ணம் மிகச்சிறப்பாக நிறைவுற்றது குறிப்பிடத்தக்கது.

**8. "மங்கையராய்ப் பிறப்பதற்கே" என்னும் பாடத்தில் இடம்பெற்றுள்ள மூவர் பற்றி சுருக்கி எழுதுக.**

**முன்னுரை:**

பழந்தமிழ்ச் சமுதாயத்தில் பெண்கள் நன்மதிப்புப் பெற்றிருந்தனர். பிற்காலத்தில் பெண்ணடிமை தோன்றியது. காலப்போக்கில் பெண்களில் சிலர் தலைமைப் பொறுப்பேற்று சமுதாயத்தை வழிநடத்தி வெற்றியும் கண்டனர். அவர்களில் முக்கியமான மூவரைப் பற்றி இங்கு காண்போம்.

**பால சரஸ்வதி:**

காஞ்சிபுரத்தில் தனது முதல் பரநாட்டிய நிகழ்வை அரங்கேற்றிய பின்னர், பண்டிட் இரவிசங்கரின் பாராட்டையும் பெற்றவர் பால சரஸ்வதி பல நாடுகளில் நடனமாடி இந்தியாவிற்குப் பெருமை தேடித்தந்தவர்.

**கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்:**

கல்லூரி காலத்திலிருந்தே காந்தியடிகளின் சிந்தனையால் கவரப்பட்டு அவருடைய சர்வோதய

இயக்கத்தில் களப்பணியாற்றியவர் கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன். ‘உழுபவருக்கே நில உரிமை இயக்கம்’ தொடங்கி வேளாண்மை இல்லாத காலத்திலும் உழவருக்கு வேறுபணிகள் மூலம் வருமானம் வர ஏற்பாடு செய்தார்.

**சின்னப்பிள்ளை:**

படிப்பறிவில்லாத சின்னப்பிள்ளை பல பெண்களைத் தன்னோடு இணைத்துக் கொண்டு விவசாய நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து, அதில் வரும் வருமானத்தைச் சமமாகப் பிரித்துக் கொடுத்தார். ‘களஞ்சியம்’ என்ற மகளிர் சுயஉதவிக் குழுவை ஆரம்பித்து பல பெண்களின் வாழ்வில் விளக்கேற்றியவர். நடுவண் அரசால் ‘பெண் ஆற்றல் விருது’ பெற்றவர்.

**முடிவுரை:**

முட்டுக்கட்டை போட்டு மூலையில் ஒடுங்கிக்கிடந்த பெண்கள் சமுதாயத்தில் வெற்றி நடைபோடும் அளவிற்கு உயர்ந்து வருகின்றனர். நாமும் அத்தகைய பெண்களுக்கு உறுதுணையாக இருப்பதே பெருமையும் மகிழ்வு தரும்.

9. **இராமானுஜர் நாடகத்தின் மூலம் அறியலாகும் செய்திகள் யாவை?** **PTA-4, SEP-21, AUG-22**

**பூரணர் இல்லம் செல்லுதல்:**

இராமானுசர், கூரேசர், முதலியாண்டான் ஆகியோர் புனித திருமந்திரத் திருவருளுக்காகத் திருக்கோட்டியூர் பூரணர் சுவாமியின் இல்லத்திற்குப் பதினெட்டு முறை செல்கின்றனர்.

**தண்டு, கொடிக்கு இணையானவர்கள்:**

திருமந்திரத் திருவருள் பெறத் தண்டும், கொடியுமாக இமாரானுசரை வரச் சொல்லி, பூரணரால் திருவரங்கத்திற்கும் செய்தி அனுப்பப்பட்டது. ஆனால் இராமானுசர் பூரணர் இல்லத்திற்கு தம் நண்பர்களான கூரேசர், முதலியாண்டான் உடன் சென்றார். பூரணரிடம் இவர்கள் தண்டு கொடிக்கு இணையானவர்கள் என்று கூறி நட்பினைப் பெருமைப்படுத்துகிறார்.

**பிறவிப்பணி தீர்க்கும் அருமருந்து:**

“திருமகளுடன் கூடிய நாராயணனின் திருப்பாதங்களைப் புகலிடமாகக் கொள்கிறேன். திருவுடன் சேர்ந்த நாராயணனை வணங்குகிறேன்'' என்ற பிறவிப் பிணியைத் தீர்க்கும் அருமருந்தான நாராயணன் திருமந்திரத்தைப் பூரணர் சுவாமிகள் அருளுகிறார்.

**யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்:**

தாம் வருந்திப் பெற்ற அரிதான திருமந்திரத்தைப் பிறர் நலம் கருதி திருக்கோட்டியூர் சௌம்ப நாராயணன் திருக்கோவிலின் மதில் சுவரின் மேல் இராமானுசர் ஏறி நின்று அனைவருக்கும் கூறினார்.

**பரந்த அருள் உள்ளம் கொண்டவர்:**

திருமந்திரத்தை அனைவருக்கும் கூறியதால் நான் மட்டுமே தண்டனை கிடைக்கப்பெற்று நரகத்தைச் சேர்வேன். ஆனால் என் மக்கள் அனைவரும் பிறவிப்பிணி நீங்கிப் பேறு பெறுவார்கள் என்ற பரந்த அருள் உள்ளம் கொண்டவர்.

**அடைக்கலம் அளித்தல்:**

இறைவனின் திருவருளை உலகிற்கு உணர்த்திய இராமானுசரிடம் பூரணர் தம் மகன் சௌம்ய நாராயணனை அடைக்கலமாக அளித்தார்.

**முடிவுரை:**

தான் மட்டும் இன்பம் அடைவதை விரும்பாமல் தனக்குத் தண்டனை கிடைத்தாலும் பரவாயில்லை. தம் மக்கள் அனைவரும் நலமுடன் வாழ வேண்டும் என்ற இராமானுசரின் பரந்த அருள் உள்ளத்தை அறியலாம்.

10. **குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக. மாணவன் – கொக்கைப் போல, கோழியைப் போல – உப்பைப் போல – இருக்க வேண்டும் – கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும் - குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி – கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணரமுடியும் - ஆசிரியர் விளக்கம் - மாணவன் மகிழ்ச்சி.**

**இடம்: தமிழாசிரியர் இல்லம்**
**பாத்திரங்கள்: ஆசிரியர், அகிலன், முகிலன்.**

அகிலன், முகிலன் : ஐயா... வணக்கம்!

ஆசிரியர் : வாருங்கள். வணக்கம்! ஏதேனும் சந்தேகமா?

அகிலன் : இல்லை ஐயா! சில முன்னேற்ற வழிகள் பற்றி எங்களுக்கு ஆலோசனை வேண்டும்.

ஆசிரியர் : அருமை மாணவர்களே...எண்ணம்போல்தான் வாழ்க்கை என்பார்கள் கேளுங்கள்.

முகிலன் : ஐயா! நாங்கள் யாரைப் போல் எதைப்போல் உழைத்தால் முன்னேற முடியும்?

ஆசிரியர் : கொக்கைப் போல வாய்ப்புக் கிட்டும் வரை காத்திருக்க வேண்டும். தனக்கென வாய்ப்பு வரும் வரை தன் இரைக்காக ஒற்றைக் காலில் நின்று, இரை கிடைத்தவுடன் கொக்கு எவ்வாறு தீவிரத்துடன் செயல்படுகிறதோ அதுபோலத்தான் இருக்க வேண்டும்.

அகிலன், முகிலன் : சரிங்க ஐயா...

ஆசிரியர் : வாய்ப்பு எப்போதாவதுதான் வரும்... அதைச் சரியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும் மாணவர்களே!

முகிலன் : உறுதியாக ஐயா!

ஆசிரியர் : கோழி, குப்பையைக் கிளறுவதைப் பார்த்துள்ளீர்களா?

அகிலன், முகிலன் : பார்த்துள்ளோம் ஐயா!

ஆசிரியர் : கோழி குப்பையைக் கிளறினாலும் தனக்கான உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும். வேண்டாதவற்றை ஒருபோதும் எடுத்துக் கொள்ளாது. அதுபோல நாமும் நமக்கு எது தேவையோ, வாழ்க்கைக்கு எது நல்லதோ அதை மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும் மாணவர்களே...

அகிலன் : சரிங்க ஐயா.

ஆசிரியர் : நல்லது... உப்பைப் போலவும் நம்முடைய வாழ்க்கை இருக்க வேண்டும்.

முகிலன் : உப்பைப் போலவா...ஐயா (வியப்புடன்)

ஆசிரியர் : ஆம் முகிலன்...உணவோடு, நீரோடு உப்பு கலந்துவிட்டால் அதன் உருவத்தைப் பார்க்க இயலாது. ஆனால் அதன் சுவையை உணர முடியும். அது போலத்தான் உங்களுக்குள் இருக்கும் நல்ல குணங்கள்தான் நீங்கள் யார் என்பதைக் காட்டுமே தவிர, உங்கள் புறத்தோற்ற அழகல்ல....

அகிலன் : ஐயா...முகிலன் நிறைய பேருக்கு உதவி செய்திருக்கிறான்...

ஆசிரியர் : அருமை...உப்பைப் போல மற்றவர்களுக்குப் பயனுள்ளவனாக இருப்பது மகிழ்ச்சி. உப்புக்கு மற்றுமொரு குணமும் இருக்கிறது. அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தவும் முடியாது.

முகிலன் : உணவில் அதிக உப்பு சேர்த்துவிட்டால் உண்ணவே முடியாது ஐயா...

ஆசிரியர் : ஆம் முகிலன் ...தேவையில்லாதவற்றில் நம்முடைய நேரத்தை அதிகம் செலவிட்டால் உப்பு அதிகமிடப்பட்ட உணவைப் போலத்தான் ஒன்றுக்கும் ஆகாமல் போய்விடும்...

அகிலன் : ஐயா... இவற்றிலெல்லாம் இவ்வளவு வாழ்க்கைக் கான நல்ல கருத்துகள் புதைந்திருக்கிறதா...

ஆசிரியர் : ஆம் அகிலன்...

அகிலன் : மகிழ்ச்சி ஐயா...தங்களின் பொன்னான நேரத்தில் எங்களுக்கு நீங்கள் அழகாக வாழ்வின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டி உள்ளீர்கள்... தொடர்ந்து இவற்றைப் பின்பற்றுகிறோம் ஐயா...

ஆசிரியர் : நல்லது அகிலன்...

அகிலன், முகிலன் : நாங்கள் விடைபெறுகிறோம் ஐயா...

ஆசிரியர் : கவனமாகச் செல்லுங்கள் மாணவர்களே!

அகிலன், முகிலன் : நன்றி ஐயா...

**11. அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.** **PTA-3, MAY-22**

மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் – வீரப்பன்

துணையின்றி வாழும் நிலை இரங்கத்தக்கது. அந்த வகையில் குப்புசாமிக்கு வீரப்பன் நண்பனான கதையைப் பற்றிக் காண்போம்.

தாய் தந்தையற்ற குப்புசாமிக்கு உறவுகள் இருந்தாலும், அதனால் எவ்விதத்திலும் பலனில்லை,

மிதிவண்டி கடையில் வேலை பார்த்த குப்புசாமி, நோய் காரணமாக வேலையை இழக்கின்றான். மிதிவண்டி கடைக்கு எதிரே விறகுக் கடையில் வேலை செய்யும் வீரப்பனும் குப்புசாமியும் நெருங்கிய நண்பர்கள்.

வேலை இல்லாமல் நோயினால் குப்புசாமி துன்பப்படும் போது வீரப்பன் தன் வீட்டிற்கு அழைத்து உணவிடுவான்.

வீரப்பன் வீடு கட்டுகிற ஒரு மேஸ்திரியிடம் சிப்பந்தியாகவும் வேலை செய்பவன். சில நாட்கள் வேலை யில்லாமல் போய், வரும்படியும் இல்லாமல் கஷ்டப்படுகிற ஏழையாக இருந்தாலும், கடன் வாங்கியாவது நண்பனுக்கு உதவி செய்தான் வீரப்பன்.

குப்புசாமியின் உயிருக்கு மதிப்பளித்து, தன் மேலான நட்பினை நிலைநாட்டும் வண்ணம் ஒரு நாள் வீரப்பன் குப்புசாமிக்கு மூன்று ரூபாயும் ஒரு கடிதமும் கொடுத்தனுப்பினான்.

அக்கடிதம் வீரப்பனின் மனிதத்தன்மையும், நட்பின் மேன்மையையும் உணர்த்துவதாக அமைகிறது.

- "ஆபத்தில் உதவும் நண்பனே உண்மையான நண்பன்" என்பதற்குச் சான்றாகிறான் வீரப்பன்.
- 'உதவி செய்வதற்கு உள்ளமே முக்கியம்' என்பதை உணர்த்துகிறான் வீரப்பன்.
- கடன் வாங்கியாவது நண்பனைக் காப்பாற்ற வேண்டும் என்ற வீரப்பனின் கருணை போற்றுதற்கு உரியது.

- நட்பு என்பது இன்பம் துய்க்க மட்டுமன்று துன்பத்தில் துணையாகவும் இருப்பதுதான் என்று வீரப்பன் வாழ்ந்து காட்டுகின்றான்.
- அன்பு காட்ட யாராவது அகிலத்தில் கிடைத்துவிட்டால் யாருமே அனாதையில்லை. ஆம்! குப்புசாமியும் அனாதையில்லை... அன்பு காட்ட வீரப்பன் இருக்கின்றானே.
- ‘‘பிறருக்காக கண்ணீரும் செந்நீரும் சிந்தும் மனிதனே மனிதன்’’ என்னும் வைரமுத்துவின் வரிகளுக்கு ஏற்ப அழகிரிசாமியின் ‘ஒருவன் இருக்கிறான்’ கதையில் வீரப்பனின் மனிதத்தன்மை அமைந்துள்ளது.

## வினா எண்: 45 - கட்டுரைகள்

**1. குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.**

இக்கருத்தைக் கருவாகக் கொண்டு ‘சான்றோர் வளர்த்த தமிழ்’ என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. **PTA-1**

### ‘சான்றோர் வளர்த்த தமிழ்’

**முன்னுரை:**

**‘‘என்றுமுள தென் தமிழ்’’** என்றார் கம்பர். ஈராயிரம் ஆண்டுகட்டு மேலாக இலக்கண, இலக்கிய வளத்துடன் சிறந்து ஒளிர்கிறது தமிழ். இத்தமிழுக்குப் பற்பல தமிழ்ச்சான்றோர்கள் பெருந்தொண்டாற்றியுள்ளனர் என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

**தொல்காப்பியர்:**

தொல்காப்பியனார் என்ற பழம்புலவர் ஒருவர் அன்றைய தமிழ்மொழியையும் நூல்களையும் ஆராய்ந்து தொல்காப்பியம் என்ற இலக்கண நூலை இயற்றியுள்ளார்.

**சங்ககாலப் புலவர்கள்:**

முச்சங்கம் வைத்து, தமிழை வளர்த்துள்ளனர். கபிலர், பரணர், நக்கீரர், ஔவையார், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார், நப்பூதனார் உள்ளிட்ட நூற்றுக் கணக்கான புலவர்கள் 2381 சங்க இலக்கியப் பாட்டுகளை எழுதி உள்ளனர்.

**நீதி இலக்கியப் புலவர்கள்:**

திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் மற்றும் சமண முனிவர்கள் என்று நீதிநூல்கள் பலவற்றையும் படைத்துத் தமிழை வளர்த்துள்ளனர் அக்காலப் புலவர்கள்.

**காப்பியப் புலவர்கள்:**

இளங்கோவடிகள், சீத்தலைச்சாத்தனார், திருத்தக்கத் தேவர், கம்பர் போன்ற எண்ணற்ற புலவர்கள் ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுகாப்பியங்களுடன், பல காப்பியங்களையும் படைத்துத் தமிழ்ப்பணி ஆற்றியுள்ளனர்.

**பக்தி இலக்கியப் புலவர்கள்:**

நாயன்மார்களும் ஆழ்வார்களும் தமிழ்ப்பாடல்கள் மூலம் இறைவனுக்குத் தொண்டாற்றியுள்ளனர்.

**சிற்றிலக்கியப் புலவர்கள்:**

திரிகூடராசப்பர், குமரகுருபரர், ஒட்டக்கூத்தர் போன்றோரின் 96 வகையான சிற்றிலக்கியங்களாலும் தமிழ் சிறப்படைந்துள்ளது.

**பிற நாட்டறிஞர்கள்:**

அனைத்திற்கும் மேலாக பிறநாட்டறிஞர்களெல்லாம் தமிழைக் கற்றுக்கொண்டு, தமிழில் நூல்களை எழுதியும், மொழி பெயர்த்தும் தமிழ்ப்பணி ஆற்றியுள்ளனர். தமிழின் முதல் அகராதியை எழுதியவர் வீரமாமுனிவரே. திருக்குறளை இலத்தீன் மொழியில் வீரமாமுனிவரும், ஆங்கிலத்தில் ஜி.யு. போப்பும் மொழியெர்த்துள்ளனர்.

**தற்காலத்தவர்கள்:**

பாரதியார், பாரதிதாசன், திரு.வி.க, ம.பொ.சி, அறிஞர் அண்ணா, மு.வ என்று ஆயிரக்கணக்கான சான்றோர்கள்

தமிழ் வளர்ச்சியில் ஆற்றிவரும் தொண்டு போற்றுதற்குரியது. தற்காலத்திற்கேற்ற தமிழ்ச் சொல்வளத்தையும் நிரம்ப உருவாக்கி வருகின்றனர் தமிழ் ஆய்வாளர்கள்.

**முடிவுரை:**

உலகம் உள்ளவரை இருக்கின்ற தமிழரெல்லாம் தமிழ் வளர்த்தே தனிச்சிறப்படையட்டும். இறப்பும்கூட தமிழோடு இணைந்திருக்கட்டும்.

**2. கட்டுரை ''விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்''**

**முன்னுரை:** **PTA-4, SEP-20, AUG-22**

**''மங்கையராய்ப் பிறப்பதற்கே - நல்ல**
**மாதவம் செய்திட வேண்டுமம்மா''** - என்றார் கவிமணி. ஆணுக்கு நிரகாக மட்டுமல்லாது, அதற்கு மேலும் சாதித்துவிட முடியும் என்பதற்குச் சான்றாக விளங்கும் கல்பனா சாவ்லாவைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**பிறப்பு:**

இந்தியாவில் உள்ள அரியானா மாநிலத்தில் கர்னல் என்னும் ஊரில் 1962-ஆம் ஆண்டு மார்ச் 17-ஆம் நாள் பிறந்தார். கல்பனா என்றால் 'கற்பனை' என்று பொருள்.

**கல்வி:**

கல்பனா சாவ்லா தனது கல்வியைக் கர்னலில் தொடங்கினார். பிறகு சண்டிகரில் உள்ள பஞ்சாப் பொறியியல் கல்லூரியில் விண்வெளிப் பொறியியலில் இளங்கலையும், அமெரிக்காவின் டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் விண்வெளிப் பொறியியலில் முதுகலைப் பட்டமும், கொலோரடோ பல்கலைக்கழகத்தில் இரண்டாம் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

**கல்பனாவும் நாசாவும்:**

கல்பனா மார்ச் 1995-இல், நாசா விண்வெளி வீரர் பயிற்சிக் குழுவில் சேர்ந்தார். 1996-ஆம் ஆண்டு அவரது முதல் பயணத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். 1997-ஆம் ஆண்டு கொலம்பியா விண்வெளி ஊர்தியான STS-87-இல் விண்வெளி பயணத்தைத் தொடங்கி, விண்வெளி சென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற சிறப்பினையும் பெற்றார்.

**கொலம்பியா விண்கல நிகழ்வு:**

முதல் விண்வெளிப் பயணத்தை வெற்றிகரமாக முடித்த கல்பனா சாவ்லா, அடுத்த 5 ஆண்டுகளில் தன்னுடைய இரண்டாவது பயணத்திற்குத் தயாரானார். 2003-ஆம் ஆண்டு ஜனவரி 16-ஆம் நாள் விண்வெளி ஆராய்ச்சிக்காக அமெரிக்காவின் கென்னடி நிலையத்திலிருந்து கொலம்பியா விண்கலம் எஸ்.டி.எஸ்.107 அனுப்பி வைக்கப்பட்டது. கல்பனா சாவ்லா உள்ளிட்ட ஏழு பேர் 16 நாள் ஆய்வை முடித்துப் பூமிக்குத் திரும்புகின்றபோது விண்கலம் அமெரிக்காவில் டெக்சாஸ் வான்பரப்பில் வெடித்துச் சிதறியது. கல்பனா சாவ்லா உட்பட ஏழு விண்வெளி வீரர்களும் பலியாகினர்.

**விருதுகளும் அங்கீகாரங்களும்:**

நியூயார்க்கில் உள்ள ஒரு தெருவிற்கு 'கல்பனா வே' எனப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. இளம் பெண் விஞ்ஞானிகளை ஊக்குவிக்க கர்நாடக அரசு "கல்பனா சாவ்லா விருதினை" 2004-ஆம் ஆண்டிலிருந்து வழங்கி வருகிறது. நாசா ஆய்வகம், கல்பனா சாவ்லாவின் நினைவைப் போற்றும் விதமாக ஒரு அதிநவீன கணினியை அர்ப்பணித்துள்ளது.

**முடிவுரை:**

**"பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம். ஆனால் உங்கள் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்"** என்ற அப்துல் கலாமின் பொன்மொழிக்கேற்ப வாழ்வின் பெருவெற்றியைப் பெற்ற பெண்மணியாக கல்பனா சாவ்லா திகழ்கிறாரென்றால் சாலப்பொருந்தும்.

**3. உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.** **PTA-2,5, AUG-22**

**முன்னுரை:**

புதிய பொருட்களைக் காணவும் வாங்கவும் வேண்டுமென்று மக்கள் விரும்புகின்றனர். அவற்றை பார்த்து மகிழும் வகையில் பொது இடத்தில் ஒழுங்கான முறையில் கண்கவரும் வண்ணம் செய்வதே பொருட்காட்சி ஆகும். அந்த வகையில் எங்கள் ஊரில் நடைபெற்ற அரசு

பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வை இக்கட்டுரையில் காண்போம்.

**பொருட்காட்சியின் முகப்பு:**

மதுரை திருமலை நாயக்கர் மஹால் வடிவமைப்பு பொருட்காட்சியின் முகப்பாக அமைக்கப் பட்டிருந்தது.

**நுழைவுச்சீட்டு:**

பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களுக்குச் சலுகை கட்டணமாக ரூ.10 வசூலிக்கப்பட்டது. நுழைவுச் சீட்டைப் பெற்றுக்கொண்டு பொருட்காட்சியைக் கண்டு களிக்க உள்ளே சென்றோம்.

**பல்துறை கண்காட்சி அரங்குகள்:**

அரசு அரங்குகள், கடைகள், விற்பனை அரங்குகள், விளையாட்டு அம்சங்கள் எனத்தீவுத்திடல் களைகட்டி இருந்தது. பொருட்காட்சியில் 26 மாநில அரசுத்துறை நிறுவனங்கள், 3 மத்திய அரசு நிறுவனங்கள் என மொத்தம் 29 அரசு அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. மேலும் 115 கடைகளும், 26 விற்பனை அரங்குகளும் தனியார் வாயிலாக அமைக்கப்பட்டிருந்தன.

**சிற்றூர் சுற்றுலா அரங்கு:**

நகர்ப்புற மக்கள் கிராமச் சூழ்நிலையை உணர்ந்து அனுபவிக்கும் கையில் சிற்றூர் சுற்றுலா எனப்படும் சிறப்பு அரங்கு 25 ஆயிரம் சதுர அடியில் உருவாக்கப்பட்டிருந்தது.

**பொழுதுபோக்கு அம்சங்கள்:**

மலையேற்றம், சறுக்கு விளையாட்டு, மதில் ஏற்றம் போன்றவற்றில் கலந்து கொண்டதில் மிகுந்த உற்சாகம் ஏற்பட்டது. மேலும் மீன்காட்சி, 40 வகையான கேளிக்கை-விளையாட்டுகள், புதுமையான விளையாட்டுகள் போன்றவற்றைக் கண்டுகளித்தும், கலந்துகொண்டும் உளம் மகிழ்ந்தோம்.

**முடிவுரை:**

இவ்வரசுப் பொருட்காட்சி பல்வேறு பொருட்களைப் பற்றி அறியவும், கலைநிகழ்ச்சிகளைக் காணவும், பல்வேறு பண்பாட்டுச் சூழல்களை உணரவும், குறைந்த விலையில்

நிறைந்த பொருட்கள் வாங்கவும் வழிவகுத்துள்ளமையை உணர்த்துவதாக அமைந்திருந்தது. மிகுந்த மனநிறைவுடன் இல்லம் திரும்பினோம்.

**4. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி, தலைப்பு ஒன்று தருக.**

**முன்னுரை - தமிழகம் தந்த தவப்புதல்வர் - நாட்டுப்பற்று - மொழிப்பற்று - பொதுவாழ்வில் தூய்மை - எளிமை - மக்கள் பணியே மகத்தான பணி - முடிவுரை.** **PTA-1, MAY-22**

தலைப்பு: தமிழகம் தந்த தவப்புதல்வர் 'காமராசர்'

**முன்னுரை:**

தமிழகத்தின் தலைசிறந்த முதல்வர், கர்மவீரர் படிக்காத மேதை, கல்விக்கண் திறந்தவர். நாட்டில் பல தலைவர்களை உருவாக்கிய காமராசரைப் பற்றிக் இக்கட்டுரையில் காண்போம்.

**தமிழகம் தந்த தவப்புதல்வர்:**

1903 ஜூலைத் திங்கள் 15 ஆம் நாள் குமாரசாமி - சிவகாமிக்கு மகனாக விருதுநகரில் பிறந்த கர்மவீரர். படிப்பைத் தொடர முடியாமல் பாதியிலே வேலைக்குச் சென்றவர். அப்போது பல தலைவர்களின் பேச்சுகளாலும், அரசியல் நிகழ்வுகளாலும் ஈர்க்கப்பட்டு தம்மையும் அதில் இணைத்துக் கொண்டார்.

**நாட்டுப்பற்று:**

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, உப்புச் சத்தியாகிரகத்தில் பங்கு கொண்டு சிறை சென்றார்.

**மொழிப்பற்று:**

1957 - 58 இல் சென்னை மாகாணத்தின் நிதிநிலையை தமிழில் வழங்கினார். 1956 ஆம் ஆண்டு தமிழ் ஆட்சி மொழியாகவும், 1960 ஆம் ஆண்டு கலைச்சொல் அகராதியும் இவரால் கொண்டு வரப்பட்டது.

**பொதுவாழ்வில் தூய்மை:**

பொதுவாழ்வில் தூய்மை கொண்ட இவர் முதல்வராக இருந்த காலத்தில் தன் தாயை இரண்டு மூன்று நாட்களுக்கு மேல் சென்னையில் உள்ள தனது வீட்டில் தங்க வைத்தது இல்லை. வாடகை வீட்டில் தங்க வைத்தார்.

**எளிமை:**

ஏழையாகப் பிறந்து எளிமையாக வாழ்ந்து எல்லோர் மனத்திலும் நிறைந்து, தன்னிடம் பணமோ, வங்கிக் கணக்கோ இல்லாமல் வாழ்ந்து சிறந்த பெருமை காமராசருக்கே உண்டு.

**மக்கள் பணியே மகத்தான பணி:**

காமராசர் காலத்தில் கொண்டுவரப்பட்ட திட்டங்கள் இன்றும் நிலைத்து நிற்கின்றன. பல நீர்த்தேக்கங்கள், வேளாண் திட்டங்கள், வீதிதோறும் பள்ளிக்கூடங்கள், தொழிற்சாலைகளைக் கொண்டு வந்தார்.

**முடிவுரை:**

வாழ்ந்தாலும் பேசும், மறைந்தாலும் பேசும் என்பதற்கேற்ப ஊர் போற்றும் உத்தமராக, கருப்புக் காந்தியாக, பெருந்தலைவராக வாழ்ந்தவர் காமராசர் என்றால் சாலப்பொருந்தும்.

**5. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி, தலைப்பு ஒன்று தருக.** **PTA-2,5, SEP-20**

**குறிப்புகள்: முன்னுரை - மனித வாழ்வு அறம் சார்ந்தது - இலக்கியம் காட்டும் அறம் - அறத்தான் வருவதே இன்பம் - முடிவுரை.**

தலைப்பு: மனித வாழ்வில் அறம்

**முன்னுரை:**

உலகமே வியக்கும் அளவிற்கு அறப் பண்புகளை உருவாக்கியவர்கள் தமிழர்கள். பொன்னையும் பொருளையும் சேர்த்து வைத்து அதில் செலவு செய்து வாழ்வதில் இன்பம் இல்லை. அதை நன்முறையில் இல்லாதவருக்குக் கொடுப்பதால் வருவதே இன்பம் என்று உணர்ந்து வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்.

**மனித வாழ்வு அறம் சார்ந்தது:**

கொடை, இரக்கம், அன்பு, மனிதநேயம், தன்னலமின்மை, இன்னாசெய்யாமை, பொதுநலம் ஆகிய அனைத்தையும் மனித வாழ்வில் பார்க்க முடிகிறது. வறுமையில் வாடுபவர்களுக்குப் பொருள் கொடுப்பதும் உணவில்லாதவர்களுக்கு உணவு கொடுப்பதுவும் அறம். அதை மனிதர் வாழ்வில் காண முடிகிறது.

**இலக்கியம் காட்டும் அறம்:**

சங்க இலக்கியங்களில் அறம் வழி வாழ்ந்த தமிழர்களை காணமுடிகிறது. சங்கம் மருவிய காலத்தில் அறத்தை விளக்கும் நூல்கள் தோன்றியிருந்தன. 'செல்வத்துப் பயனே ஈதல்' என்கிறது புறநானூறு. **'ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்'** என்கிறது குறுந்தொகை. திருக்குறள் அறன்வலியுறுத்தல் என்ற ஓர் அதிகாரத்தையே வைத்துள்ளது. உணவு, உடை, உறைவிடம் ஆகியவையே அறம் என்கிறது மணிமேகலை. ஔவையாரும் அறம் செய்ய விரும்பு என்கிறார்.

**அறத்தான் வருவதே இன்பம்:**

அறத்தால் வருவதே இன்பம் என்று சங்ககால மக்கள் வாழ்ந்து வந்தனர். கொடைச் சிறப்பால் வள்ளல்கள் போற்றப்படுவதற்குக் காரணம் அவர்களின் அறமேயாகும். வறுமையில் வாடும் ஏழைகளுக்குத் தங்களிடம் உள்ள பொருட்களைக் கொடுத்து, அவர்களை வாழ வைத்து அதில் இன்பம் கண்டவர்கள் தமிழர்கள். அறம் அல்லாத செயல்களில் வரும் அனைத்தும் துன்பமே தரும் என எண்ணினர்.

**முடிவுரை:**

அன்பாலும் அருளாலும் பண்பாலும் அனைத்து உயிர்களுக்கும் நன்மை செய்வதே அறமாகும். அதுவே இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் தரும் என்பது உறுதி.

6. **'விசும்பின் துளியும் பசும்புல் தலையும்' என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக.** **PTA-3,6**

**குறிப்புகள்: முன்னுரை – இயற்கையோடு இயைந்து வாழ்வோம் – வானத்து மழைநீரைப் பூமியில் காப்போம் – மழைக்கு ஆதாரமான மரங்களை வளர்ப்போம் – முடிவுரை.**

தலைப்பு: மழைநீரின் மகத்துவம்

**முன்னுரை:**

**'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை'** – என்கிறது திருக்குறள்.

நீருக்கு அடிப்படையான மரத்தையும் மரத்தால் கிடைக்கும் நீரையும் பாதுகாக்க வேண்டும் என்பதை இக்கட்டுரை விளக்கி நிற்கும்.

**இயற்கையோடு இயைந்து வாழ்வோம்:**

சங்ககால மக்கள் இயற்கையோடு இணைந்த வாழ்வை மேற்கொண்டனர். ஓரறிவு மரத்தையும் கூட தன் உடன் பிறந்தவர்களாக எண்ணி வாழ்ந்தனர்.

**மழை நீரைக் காப்போம்:**

‘எனது தாத்தா ஆற்றில் நீரைப் பார்த்தார்
எனது தந்தை கிணற்றில் நீரைப் பார்த்தார்
நான் குழாயில் நீரைப் பார்த்தேன்.
என் மகன்கள் பாட்டில்களில் நீரைப் பார்க்கின்றனர்
எனது பேரக் குழந்தைகள் ..... ? ? ? ’

வானத்திலிருந்து சிறு துளியாய்ப் பெய்த நீர் பூமியில் பெரு வெள்ளமாய்ப் பெருகி கடலில் கலக்கிறது. பெய்யும் மழைநீரை வீணாக்காமல் மழைநீர் சேமிப்புத் தொட்டி மூலம் சேமித்துப் பாதுகாத்து வைக்க வேண்டும். அப்போதுதான் அது எதிர்காலத் தண்ணீர்த் தேவையைச் சரிசெய்ய முடியும்.

**மரங்களை வளர்ப்போம்:**

‘ஒளியை வடிகட்டும்
ஓசோன் படலத்தைப்
பின்னித் தருகின்ற
நெசவாளிகள் ....... மரங்கள்

மேகங்களைத் திரட்டிக் குளிர்ச்சியூட்டி மழை பொழிய வைப்பவை காடுகளே. அதனால் அவற்றை அழிக்காமல் பாதுகாக்க வேண்டும். மரக்கன்றுகளை அதிகமாக நட்டு மரங்களை வளர்க்க வேண்டும்.

**முடிவுரை:**

தம்மையே நமக்குத் தாரைவார்த்துக் கொடுக்கும் இத்தகைய மரங்களுக்கு நாம் கொடுக்கும் வெகுமதி அவைகளை அழிப்பதா? சற்று சிந்தியுங்கள். மரம் வளர்ப்பதையும் மழைநீரைச் சேமிப்பதையும் நம் இரு கண்களாகக் கொண்டு செயல்படவேண்டும்.

**7. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக.**
**முன்னுரை - சாலைப் பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு - சாலைவிதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துகளைத் தவிர்ப்போம் - விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை** **PTA–3, MAY-22**

**தலைப்பு:** சாலை விதிகளைக் கடைபிடிப்போம்

**முன்னுரை:**

வாகனங்கள் ஓட்டிச் செல்லும் சாலையில் நடந்து செல்பவர்களும் சாலை விதிகளைப் பின்பற்றி நடக்க வேண்டும். சாலை விதிகளைப் பின்பற்றாமல் நடப்பதனால் சாலை விபத்துகள் அதிகமாக நடக்கின்றன. சாலை விதிகளை எவ்வாறு பின்பற்றி நடக்க வேண்டும் என்பதைப் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

**சாலைப் பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு:**

**'நீதி மன்றங்களில் இன்னமும்**
**தேங்கி இருப்பதெல்லாம்...**
**விபத்து வழக்குகள் தான்....'**

– என்கிறார் கவிஞர் தமிழ் நிலா. சாலை என்பது விளையாட்டு மைதானமன்று. கவனமில்லாமல் வாகனங்களை ஓட்டுவது, வேகமாக வாகனங்களை ஓட்டுவது, அலைபேசி பயன்படுத்திக்கொண்டு வாகனங்களை இயக்குவது ஆகியவை விபத்தினை ஏற்படுத்தி மரணத்திற்கு வழிவகுக்கின்றன. சாலையைப் பாதுகாப்பாகப் பயன்படுத்தினால் விபத்திலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

**சாலை விதிகள்:**

அனுமதிக்கப்பட்ட திசையில் இல்லாமல் எதிர்திசையில் வாகனத்தைப் பின்னால் செலுத்தக் கூடாது. தடக் கோடுகள் இடப்பட்ட சாலைகளில், தடத்தின் உள்ளேயே வாகனத்தைச் செலுத்த வேண்டும். தடம் மாற நேர்ந்தால், மாறுவதற்கு முன்பு உரிய கை சைகைகள் (இண்டிகேட்டர்) காட்ட வேண்டும். சாலைச் சந்திப்பு, பாதசாரிகள் கடக்கும் இடம்

போன்ற இடங்களை அணுகும்போது, சாலை மீது, 'நிறுத்தம்' என்ற அடையாளத்தைக் கண்டால், வாகனத்தை நிறுத்தக் கோட்டுக்கு முன்னால் வாகனத்தை நிறுத்த வேண்டும்.

**ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள்:**

**'தலைக்கவசம் உயிர்க் கவசம்'**

**'100 இல் போனால் 108 வரும்'**

சாலையில் இடப்பக்கம் வண்டியை ஓட்ட வேண்டும். அடையாளப் பலகைகளை அறிந்து வாகனங்களை ஓட்ட வேண்டும். மகிழுந்தில் செல்பவர்கள் கட்டாயம் இருக்கை பட்டை அணியவேண்டும். தீயணைப்பு ஊர்திக்கும், பிணியாளர் ஊர்திக்கும் முன்னுரிமை தந்து வழிவிட வேண்டும்

**விபத்துகளைத் தவிர்ப்போம்:**

உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டிருக்கும் சமீபத்திய அறிக்கை ஒன்று திடுக்கிடும் புள்ளிவிவரத்தைத் தருகிறது. 2006 - 2007 ஆம் ஆண்டுகளில் 178 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையிலான அறிக்கையின்படி, சுமார் 12 இலட்சத்துக்கும் அதிகமானோர் சாலை விபத்துகளில் ஆண்டுதோறும் மரணமடைவதாகத் தெரிகிறது. படுகாயமடைவோரின் எண்ணிக்கை இரண்டரை கோடிக்கும் அதிகம்.

**விழிப்புணர்வு தருவோம்:**

வளர்ந்த நாடுகளில் வாகனங்கள் அதிகமாக இருந்தாலும் இந்தியாவில் மட்டும் விபத்து அதிகமாக உள்ளது. ஜப்பான், சுவீடன், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் மிகக் குறைவாகவே சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகவே நாமும் சாலை விதிகளைப் பின்பற்றி விபத்து இல்லா இந்தியாவை உருவாக்குவோம்.

**முடிவுரை:**

சாலை விதிகளைக் கடைப்பிடிப்பதே காலத்திற்கும் நலம் பயக்கும்.

8. **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக.**
**குறிப்புகள்: முன்னுரை – தமிழர் பண்பாட்டில் விருந்து – தமிழ் உணவு முறை – விருந்தோம்பல் தமிழர் பண்பாட்டின் மகுடம் – முடிவுரை.** **PTA-6**

**தலைப்பு:** தமிழர் பண்பாட்டில் விருந்து

**முன்னுரை:**

'இலையை மடிப்பதற்கு முந்தைய வினாடிக்கு முன்பாக மறுக்கமறுக்கபரிமாறப்பட்டகூடுதல்நீண்டுகொண்டிருந்தது பிரியங்களின் நீள் சரடு' என்கிறார் அம்சப்பிரியா. தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் குறிப்பிடத்தக்க ஒன்றாகச் சிறக்கிறது.

**தமிழர் பண்பாட்டில் விருந்து:**

தனித்து உண்ணாமை என்பது தமிழர் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை. நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு குடும்பத் தலைவிக்கு உண்டு என்பதை நற்றிணை குறிப்பிடுகிறது.

**தமிழ் உணவு முறை:**

தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது. உண்பவர் மனமறிந்து, விருந்தினர் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளைப் பரிவுடன் பரிமாறுவர்.

**விருந்தோம்பல் தமிழர் பண்பாட்டின் மகுடம்:**

**'மருந்தே ஆயினும் விருந்தோடு உண்'** என்பார் ஔவையார். சங்க காலத்திலிருந்தே அரசராயினும் வறியோராயினும் விருந்தினர்களைப் போற்றினர். வீட்டிற்கு வந்தவருக்கு ஏழ்மை நிலையிலிருந்தாலும் எவ்வழியிலேயேனும் முயன்று விருந்தளித்து மகிழந்தனர் நம்முன்னோர்.

**முடிவுரை:**

பண்டைத் தமிழர் இல்லங்களிலும் உள்ளங்களிலும் விருந்தோம்பல் பண்பாடு செழித்திருந்தது. காலந்தோறும் தமிழர்களின் அடையாளமாக விளங்கும் உயர் பண்பான விருந்தோம்பலைப் போற்றிப் பெருமிதம் கொள்வோம்.

**9. உழவே தமிழர் பண்பாட்டின் மகுடம் - உழவுத்தொழிலுக்கு வந்தனை செய்வோம் - சுழன்றும் ஏர்ப்பினது உலகம் இக்குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதி பொருத்தமான தலைப்பிடுக.** **PTA-4, SEP-2021**

**தலைப்பு:** உழவின் சிறப்பு

**முன்னுரை:**

**'உழுவாரே உலகத்தார்க்கு அச்சாணி.'** உழவே உலகின் உன்னதத் தொழிலாக விளங்கி சிறந்திருப்பதை ஈண்டுக் காணலாம்.

**பண்பாட்டின் மகுடம்:**

**'உழுதவன் கணக்கு பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது'** என்பது பழமொழி.

ஔவையார், இளவரசரே வாழ்க! என்று வாழ்த்தாமல் அரசே! உன் வரப்புகள் உயர்க! என்றுதான் வாழ்த்துவார். காரணம், வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயர குடியுயரும், குடியுயர கோனுயர்வான் என்று உழவையே உவமையாகக் கூறுவார்.

**சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்:**

உலகில் நடைபெறும் தொழில்களில் முதன்மைத் தொழிலான உழவுத் தொழிலை **'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்'** என்று வள்ளுவர் போற்றுகிறார். இந்த உண்மையை வெளிப்படுத்தும் வகையில்,

**'எங்க ஏரோட்டம் நின்னு போனா**
**உங்கக் காரோட்டம் என்னவாகும்'**

என்கிறார் கவிஞர் கண்ணதாசன். உழவுத் தொழிலின் மேன்மையை உணர்ந்தே அரசாங்கமும் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் வகையில் நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்:**

உழுதலாகிய தொழிலைச் செய்யும் வேளாண் மக்களே உரிமையோடு வாழ்கின்றனர் என்று எண்ணத்தக்கவர்கள். மற்ற பணிகளைச் செய்பவர்கள் எல்லாம் யாரையாவது

தொழுது, தங்களின் தொழிலைச் செய்து வருபவர்கள் ஆகின்றார்கள்.

**'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றுஎல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்'** – திருவள்ளுவர்

**'உழவர்கள் சேற்றில் கால் வைக்காவிட்டால்**
**நாம் சோற்றில் கைவைக்க முடியாது'.**

**'உழவின்றி உலகமில்லை உயிர்களும் இல்லை.'**

**'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில்**
**உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்'**
என்றார் பாரதி. ஆகவே உழவர்களைப் போற்றுவோம்.

**முடிவுரை:**

உலகத்திற்கு அச்சாணி போன்றவர்கள் உழவர்கள். அவர்களின் உளம் மகிழ நிலமென்னும் தாய் தானிய வளத்தை அள்ளி வழங்கிக் கொண்டே இருக்கட்டும்.

10. **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி தலைப்பு ஒன்று தருக.**

**குறிப்புகள்: முன்னுரை - மொழிபெயர்ப்பு நூல்கள் - எட்டுத்திக்கின் கலைச்செல்வங்கள் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் – மொழிபெயர்ப்பும் கல்வியே – முடிவுரை.** **PTA-5**

**தலைப்பு:** மொழிபெயர்ப்பும் அதன் சிறப்பும்

**முன்னுரை:**

மொழிகளுக்கு இடையேயான வேற்றுமைகளை நீடிக்க விடாமல் ஒற்றுமைப்படுத்த உதவுவது மொழிபெயர்ப்பு ஆகும்.

**மொழிபெயர்ப்பு நூல்கள்:**

**'பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்**
**தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்'**

பெருங்கதை சீவகசிந்தாமணி கம்பராமாயணம் வில்லிபாரதம் ஆகிய காப்பியங்கள் வடமொழி கதைகளைத் தழுவி படைக்கப்பட்டன. சேக்ஸ்பியரின் கவிதைகள் ஜெர்மன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன.

தாகூரின் கீதாஞ்சலி நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ''வால்காவிலிருந்து கங்கை வரை'' என்ற நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இப்படி எண்ணற்ற மொழிகளில் இருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்பு நூல்கள் வந்துள்ளன. தமிழிலிருந்து பிறமொழிகளுக்கும் எண்ணற்ற நூல்கள் மொழிபெயர்ப்பும் செய்துள்ளனர்.

**பாரதியின் கனவு:**

தமிழில் பல்வேறு துறை சார்ந்த நூல்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதை,

**'சென்றிடுவீர் எட்டுத்திக்கும்! கலைச்**
**செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்'** என்றார்.

**மொழிபெயர்ப்பும் கல்வியே:**

மொழிபெயர்ப்பைக் கலையாகக் கொள்ளாமல் கல்வியாகக் கொள்ளவேண்டும். மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெற முடியும். பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பிற மொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**முடிவுரை:**

**'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்**
**பரவும்வகை செய்தல் வேண்டும்'**

பிறமொழிகளில் இருந்து தமிழிலும், தமிழிலிருந்து பிறமொழிகளிலும் இலக்கியங்கள் பெருக வேண்டும் என்பது பாரதியின் ஆசை. அதனை நிறைவேற்றுவோம்!

★★★